

# அழகு என்னும் தெய்வம்

லக்ஷ்மி

VGS LENDING LIBRARY
AMBATTUR OT, CHENNAI-53.
KINDLY RETURN WITHIN 7 DAYS
TF 61
M303

# அழகு என்னும் தெய்வம்

## 1

அலுவலகம் முடிந்துவிட்ட மாலை நேரம். அவள் கீழே வர, 'லிப்ட்'டுக்குக் காத்திருக்காது படிகளில் இறங்கித் தெருவில் நடந்தாள். அவளது அலுவலகம் இரண்டாவது தளத்திலிருந்தது. தம்பு செட்டித் தெருவுக்குள்ளிருந்த ஒரு திருப்பத்தில் அமைந்ததொரு புதுக்கட்டடம் அது. சம்பகம் மெட்டல் வொர்க்ஸின் சேமிப்புக் கிடங்கு கீழ்த்தளத்திலும், முதல் மாடியில் விற்பனைக் கூடமும், இரண்டாவது மாடியில் அலுவலகமும் இருந்தன. கட்டடம் முதலாளிக்குச் சொந்தமானது. மேல் இரு தளங்களை வேறுபல நிறுவனங்களின் அலுவலகங்களுக்கு வாடகைக்கு விட்டிருந்தார். அதனால் லிப்ட் நாள் முழுவதும் மேலும் கீழும் அசைந்த வண்ணம் இருந்தது. கட்டடத்திற்குள் எப்பொழுதும் மனித நடமாட்டம், சப்தம், நல்லவேளை, முதலாளி தமது அலுவலகத்தைக் கண்ணாடித் தடுப்புகளால் அலங்கரித்து ஏ.சியில் குளிர வைத்து மிகவும் தடபுடல் படுத்தியிருந்தார். நகரத்தின் அந்தப் பகுதிக்கே உரித்தான நெரிசலான போக்குவரத்தின் சப்தம் காதைப் பிளக்க வழியிருக்கவில்லை. ஜன்னல் வழியே அவள் பார்த்த பொழுது வெகு தொலைவு வரை பல கட்டடங்கள். இடையே பளிச்சென்ற நீலவானம்... கீழே அந்தப் பெரிய தெருவில் ஊர்ந்த வாகனங்கள்.

தலைகள்...
இடையே நெருக்கமாக அலைந்த மனிதத்
என்று வேலையின் நடுவே அவளுக்குப் பொழுதைக் கழிக்க
சில காட்சிகள் தெரிந்து கொண்டிருந்தன.

சம்பகம் மெட்டல் வொர்க்ஸில் அவள் ஒரு கிளார்க்.
அத்துடன் வரவேற்பறைப் பகுதியில் வந்தவர்களுக்குப்
பதில் சொல்லி—டெலிபோனை இயக்க வேண்டியவேலை.
இத்தனைக்கும் ஒட்டுமொத்தமாக அவளுக்குக் கிடைத்த
சம்பளம் நானூற்று நாற்பத்திரெண்டு ரூபாய் என்பது
பைசா. என்ன கணக்கு? என்று கேட்டதில்லை. இரு
வேளைகளுக்குத் தரும் தேநீருக்குப் பிடித்தம் போக மீதி
யான சம்பளம் என்று புரிந்து கொண்டிருந்தாள். அவள்
அதைப் பற்றித் தலைமைக் கணக்கரிடம் விரிவாக ஏதும்
கேட்டதில்லை. அங்கு அவளுக்கு வேலை கிடைத்ததே
பெரியதொரு அதிர்ஷ்டம். அண்ணனுக்குத் தெரிந்த
நண்பர் மூலம் அந்த வேலை பலத்த சிபாரிசால்தான்
கிடைத்தது.

சென்னைக்கு அவர்களது குடும்பம் வந்து குடியேறி
சில மாதங்கள் தானாகியிருந்தன. மதுரையிலிருந்த
நர்மதா மெடிகல் பிராடெக்ட்ஸின் குட்டிக் கிளை ஸ்தாப
னத்தில் அண்ணன் பல ஆண்டுகளாக வேலைபார்த்ததால்
மதுரை அவர்களது சொந்தவூர் போலாகி விட்டிருந்தது.
திடீரென்று அண்ணனுக்கு வேலை உயர்வு ஏற்பட்டு
சென்னையின் பெரிய கிளை ஸ்தாபனத்தின் விற்பனைப்
பகுதியின் மேல் அதிகாரியாக மாற்றலாகியதும், அசோக்
நகரில் அவர்கள் வந்து தங்கிக்கொண்டனர். அண்ணனின்
உத்தியோகத்திற்குக் குடியிருப்பு வசதியிலிருந்து, கார்
வரை கம்பெனியின் உபயம். அப்படியிருந்தும் அவள் வீட்
டிலே வெட்டியாகப் பொழுதைக்கழிக்கக் கூடாது என்பது
அண்ணியின் விருப்பம். குடும்பத்தைப் பெயர்த்துக்
கொண்டு அண்ணன் சென்னைக்கு வந்ததும் வராததுமாக
அண்ணிதான் அந்தப் பேச்சைத் தொடங்கினாள்.



''அனிதா வேலைக்குப் போகிறது நல்லதில்லையா?
புருஷனோடு வாழாம, வேலை ஒண்ணும் செய்யாம
எத்தனை நாள் இப்படியே இருப்பாள்''
அண்ணி அரை குரலில்தான் பேசினாள். அனிதா
வுக்குப் பாம்புச் செவி, பளிச்சென்று கேட்டுவிட்டது.
'அவன் கிடக்கிறான். நான் வச்சுக் காப்பாத்தரேன்'
அவன் மார்தட்டிக் கொண்டு சவால் விட்ட அண்ணன்
அதற்கு அளித்த பதில் அவளை அப்படியே குலுக்கி
விட்டது. துயரத்தை தாள முடியாது நெஞ்சு விம்மலில்
விரிந்தது.
'விலைவாசி இப்படியே போய்க் கொண்டிருக்கிற
இந்தக் காலத்தில் யாரும் யாருக்கும் பாரமாக இருக்கக்
கூடாது.''
அண்ணன் சுந்தரமா இப்படிப் பேசுகிறார்? அவளால்
நம்பவே முடியவில்லை.
'அண்ணா' என்று அழுதுகொண்டு அவரது தோளில்
அவள் முகத்தைப் பதித்துக்கொண்டு விம்மிய அந்த முதல்
நாள் அவளது கூந்தலைத் தள்ளிவிட்டு அன்போடு
முதுகைத் தடவி, 'கிடக்கிறான் காவாலிப் பயல். உன்
வாழ்க்கையைச் சீராக்கித் தருகிறது என் பொறுப்பு. நீ
அழாதேயம்மா நீ இனி அழவே கூடாது...' என்று ஆறுதல்
சொன்ன அண்ணனா அப்படிச் சொன்னார்?
''கால முச்சூடும் கப்பாத்த என்னால் முடியும்''
என்று ஆர்ப்பாட்டமாகப் பேசின அண்ணனுக்கு அவள்
ஒரே ஆண்டில் பாரமாகி விட்டாளே? அதைக் கேட்டபின்
அன்று இரவு அவள் உறங்கவேயில்லை.
அவள் வேலைக்குப் போவதைப்பற்றி அண்ணன்தான்
முதலில் பேச ஆரம்பித்தார்.
''என் சிநேகிதன் ஒருத்தன் கிட்டே சொல்லி வச்சிருக்
கேன் சம்பகம் மெட்டல் வொர்க்ஸ்னு ஒரு கம்பெனி
டவுனிலே இருக்கு. அதுக்கு ஒரு 'ரிஸப்ஷனிஸ்ட்-கம்
கிளார்க்' தேவையாம். முன்பு வேலை பார்த்த பெண்
கல்யாணமாகி அமெரிக்கா போய் விட்டாளாம்''—

சிரிப்பதா அழுவதா என்ற நிலையில் அனிதா வறட்சியாக முறுவலித்தாள்.

ரிஸப்ஷனிஸ்ட்டாக முன்பு இருந்தவள் கல்யாணமாகிப் புருஷனுடன் போய் விட்டாள்.

புருஷனை விட்டுப் பிரிந்த அனிதா இப்போது ரிஸப்ஷனிஸ்ட்டாக வேலை ஏற்க வேண்டும். வேடிக்கைதான். சாதாரணமாக அந்த வேலையை ஏற்கும் பெண் பார்க்க அழகாக இருக்க வேண்டும். பணிவுடன் கவர்ச்சியான புன்னகையுடன் நன்றாகப் பேசத் தெரிய வேண்டுமென்று தான் அவர்களை வேலைக்கு அமர்த்தும் நிறுவனங்கள் நேர்முகத் தேர்வில் பார்த்துப் பொறுக்கி எடுக்கிறார்கள்.

அவளது கணவனின் கணிப்பில் அவள் ஓர் அழகி அல்லவே? மாநிறமாக இருந்தது அவள் குற்றமாகக் கருதப்பட்டது. ஒடிசலான அவள் தோற்றத்தை அவன் வெறுத்தான்.

மனைவி என்றால் இப்படி இருக்க வேண்டும் என்ற அவனது கற்பனைக்கு எதிராக, அவள் பல விதத்தில் அவனுக்கு அதிர்ச்சியைத்தந்து விட்டவள். அந்தக் குற்றத்திற்காக அவனது வாழ்விலிருந்து ஒதுக்கப்பட்டவள், தந்தையால் வற்புறுத்தப்பட்ட அந்தத் திருமணத்திலிருந்து தனக்குவிடுதலை வேண்டுமென்று அவன் போராடிக் கொண்டிருக்கிறான். இந்த நிலையில் அழகிகள் உட்கார வேண்டிய ரிஸப்ஷனிஸ்ட் ஆசனத்தில் அனிதாவுக்கு எங்கே இடம் கிடைக்கப் போகிறது? அண்ணன் தமது சிநேகிதனின் செல்வாக்கை ரொம்பவும் நம்புகிறார். தனக்குள் வேதனையுடன் சிரித்துக் கொண்டாள்.

'வேலை கிடைத்தால் ஒத்துக்கிறேன் அண்ணா' பணிவாகத்தான் பதிலளித்தாள். உலக மகா அதிசயங்களில் அதுவும் ஒன்று. இரண்டே தினங்களில் எவ்விதமான நேர்முகத்தேர்வு அறிவிப்புமின்றி வேலைக்கு வந்து ஒப்புக் கொள்ளச் சொல்லி அவள் கொடுத்த மனுவுக்குப் பதில் கிடைத்து விட்டிருந்தது.



இது அதிசயந்தான், ஆனால் உண்மை.

பசியின் கொடுமையைத் தாங்காது குப்பையில் கிடக்கும் பழத்தை எடுத்து அலம்பி ஆவலுடன் சாப்பிடத் துணிந்துவிட்ட வேலையில்லா பட்டதாரிகள் மலிந்த வறுமை மிக்க இந்த நாட்டில் விரைவில் அவளைத் தேடிக்கொண்டு வேலை வந்து சேர்ந்து விட்டதே!

ஒரு சமயம் அவளை நேரில் பார்த்தபின்னர், கம்பெனியின் மானேஜிங் டைரக்டர் இரண்டே நாளில் சீட்டைக் கிழித்து வீட்டுக்கு அனுப்பி விடக்கூடும். அண்ணாவின் நண்பரின் சிபாரிசுக்காக—ஒரு கண் துடைப்புக் காரியமாக இந்த வேலையைச் சில நாட்களுக்கு மட்டும் தந்து விட்டிருக்கிறாரோ?

எத்தனையோ சந்தேகங்கள்? எத்தனையோ கவலைகள்? இனம் விளங்காத ஒரு திகிலில் வயிற்றை முறுக்கும் வேதனையானதொரு அனுபவத்துடன்தான் அவள் முதல் நாள் அங்கே தன் சகோதரனுடன்கூட வேலைக்குப் போனாள்.

மானேஜிங் டைரக்டரும் ஒரு தமிழர்தான்

பார்த்த அளவில் அவளுக்கு மறைந்துபோன தன் தந்தையைப் பற்றிய நினைவுதான் எழுந்தது.

எல்லாம் கேள்விப்பட்டேன். உனக்கு ஏற்பட்டிருக்கும் துயரத்தை மறக்க உதவணுங்கிற நோக்கத்தோட இந்த வேலையை உனக்குத் தரேன் அம்மா கவனமா வேலை பார்த்து நல்லபெயர் எடுத்துக்கோ... இதேமாதிரி நிலையிலிருந்து என் மகள் பொறுமையில்லாமல் தூக்க மாத்திரைகளில் தன் முடிவைத் தேடிக் கொண்டு விட்டாள். அதனால்..." பேச முடியாது அவர் தமது தடிமனான மூக்குக் கண்ணாடி வழியே பரிவுடன் பார்த்தார்.

இதுவும் ஒரு அதிசயந்தான். கதைகளில் வருவது போல் மானேஜிங் டைரக்டர் தமது நிறுவனத்திற்கு வேலை தேடிவரும் பெண்களை வேறுவிதமாகப்பார்ப்பது

போல் அவர் பார்க்காது பெற்ற மகளைப் பார்த்தது போன்ற பரிவில் கண்யமாக நடந்து கொள்கிறாரே?

அவளைப் பொறுத்தவரை அது நடக்கமுடியாததொரு அதிசய சம்பவமாகத் தானிருந்தது.

அவர்கள் வீட்டில் பல ஆண்டுகளாக சமையலிலிருந்து தோட்ட வேலைவரை எல்லாவற்றையும் கவனித்து வந்த வேலையாள் கோதண்டம் ஒரு நாள் சொன்ன ஜோசியம் பலித்துவிட்டது.

"பயப்படாதே அனிதா பாப்பா!" அப்படித்தான் அவர் அவளை அழைப்பது வழக்கம். "உனக்கு விரைவில் விடிவு காலம் வரும்" என்றார்.

இந்த வேலை மூலமாக விடிவுகாலம் வந்ததாகத்தான் அனிதா நம்பினாள்.

சென்னைக்கு அவர்கள் குடும்பம் வந்து சேர்ந்தாயிற்று. அவளுக்கு ஒரு வேலை கிடைத்து விட்டது. அடுத்தது அவள் செய்யவேண்டிய முக்கிய காரியம் இருந்தது. வேலையிலிருந்து திரும்பும்போது ஒருநாள் அவளே துணிவுடன் புக்ககத்திற்குப் போய் மாமனாரைப் பார்த்தாள். மாமியார் இறந்துபோன செய்தி தந்தி உருவில் வந்தபோது கூட அண்ணன் அவளைச் சென்னைக்கு அனுப்ப மறுத்தார். தானும் சம்பந்தியைப் பார்த்துத் துக்கம் தெரிவிக்க விரும்பாது பிடிவாதமாக, ஒதுங்கி இருந்து விட்டார்.

அண்ணன் சுந்தரம் பிடிவாதமாக இருக்கலாம். அவருக்கு அந்த உணர்வினால் இன்னமும் கொஞ்சம் கௌரவம் கூடுதலாகும்.

அவளுக்கு?

கடமை என்று ஒன்று இருக்கிறதே? அதனின்று அவள் நழுவி விட்டது பெரிய தவறாயிற்றே? அண்ணனின் அதிகாரத்திற்குக் கட்டுப்பட்டு பிறந்த வீட்டிலேயே தங்க நேர்ந்ததனால்தானே இந்தப் பொல்லாப்பு?

மாமனாரைப்பார்த்து வெளிப்படையாக நடந்ததைச் சொல்லி தன்மேல் தவறு இல்லை என்று மன்னிப்புக்



கோராவிடில் மனக்குமுறல் அடங்காதுபோல, அவளுக்கு அழுகையும் துக்கமுமாகத்தானிருந்தது. வேலைக்குப் போய் வந்து கொண்டிருந்தாள். முதல் மாதச் சம்பளம் வாங்கியதுமே அவளுக்கு இன்னொரு அதிர்ச்சியான அனுபவம்.

"மதுரையை விட இங்கே சாமான்கள் கொஞ்சம் விலை அதிகமாக இருக்கு. ஒருத்தர் சம்பாதிச்சு ஒண்ணும் கட்டுப்படியாகாது போலிருக்கு. அனிதா, தப்பா நினைச்சுக்காதே. நீயும் உன் பங்குச் செலவுக்கு ஏதாச்சும் கொடுத்துடு" அண்ணி கமலம் ஒருநாள் வெளிப்படையாக உத்தரவிட்டாள்.

வேலைக்குப் போகும் பெண்களுக்கு வீட்டில் நெருங்கிய உறவினர்களிடம் ஏற்படும் அனுபவம் இது. கேள்விப்பட்டிருக்கிறாள். கதைகளிடம் கூடப் படித்திருக்கிறாள். இப்பொழுது அவளது வாழ்வில் அதுவும் நிகழ்ந்து விட்டது.

இதுவரை வீட்டுச் செலவைப் பற்றியே பேசாத அண்ணி வாயைத் திறந்து விட்டாள்.

"தாயும் பிள்ளையுமானாலும் வாயும் வயிறும் வேறுன்னு சொல்வாங்க கேள்விப்பட்டிருப்பியே..." லேசாகச் சிரித்தாள்.

பதிலுக்கு அனிதாவால் அவளுடன் கூடச் சேர்ந்து சிரிக்க முடியவில்லை. நெருப்புத் துண்டுகளாக விழுந்த அந்த வார்த்தைகளின் கொதிப்பில் அவள் அடங்கிப் போயிருந்தாள்.

அடுத்தபடியாக நடக்கப்போவது என்ன என்றதொரு எதிர்பார்ப்பில், அவள் கிலியுடன்தான் வேலைக்குப்போய் வந்து கொண்டிருந்தாள். பிறந்த வீட்டில் ஓராண்டுக் காலம் இருக்க நேர்ந்துவிட்ட பொழுதும் அவள் வெட்டியாக ஒருநாளும் பொழுதை வீணடித்துக்கொண்டு தண்டச் சோத்துக்காரியாகக் காலத்தை ஓட்டவில்லை

அவர்களுடன் தங்கியிருக்க நேர்ந்த அந்தச் சமயம்... நாளின் ஒவ்வொரு நிமிஷத்தையும் பிறந்த வீட்டார்

களுக்குப் பயனுள்ள வகையில்தான் கழித்துக் கொண்டிருந்தாள்.

அண்ணி கமலா எழுமுன் காலையில் அவள் எழுந்து, விடியுமுன் குளித்து முடித்துவிட்டு, காப்பி பலகாரம் தயார் செய்து வைத்தாள். அண்ணனது மகனும் மகளும் பள்ளிக்கூடம்போகத் துரிதப்படுத்தி, சீருடை அணிவித்து டிபன் கட்டிக்கொடுத்து உதவினாள். வேலைக்காரி கழுவி வைத்த பாத்திரங்களைத் துடைத்து அலமாரியில் ஒழுங்காக அடுக்கினாள். காயப்போட்ட துணிகளை வகையாகப் பிரித்து முக்கியமானவைகளைத் தள்ளுவண்டி லாண்டரிக்காரரிடம் கொடுத்து பெட்டிபோட்டு வாங்கிப் பத்திரப்படுத்தினாள். அண்ணியுடன் சமையலுக்கு உதவினாள். அண்ணன் தன் மனைவியுடன் சினிமாவுக்குப் போனால்-வீட்டையும் குழந்தைகளையும் கட்டிக்காத்து இரவுச் சமையலையும் முடித்து வைத்துவிட்டு அவர்கள் வரும்வரை சாப்பிடாது எதிர்பார்த்துக் கொண்டு இருப்பாள்.

வேலைக்குப் போகத் தொடங்கிய பின்னரும் அவள் அண்ணி கமலாவுக்குத் தன்னால் முடிந்த உதவிகளைச் செய்யத் தவறவேயில்லை. அப்படியிருந்தும் ஒருநாள் கமலாவின் தாய் அவளைப் பற்றி விமரிசித்ததைக் கேட்ட பின்பு அவள் எப்படித் துடித்துப் போனாள்?

அண்ணி கமலாவின் பிறந்த வீடு, சென்னையில் நுங்கம்பாக்கத்திலிருந்தது. அவர்களது குடும்பம் சென்னைக்குக் குடியேறியதற்கு ஓரளவுக்குக் கமலா அண்ணிதான் காரணம் என்றும் சொல்லலாம். சென்னைக்கு வந்துவிட்டால் பிறந்த வீட்டுடன் பிடிப்பான தொடர்பை ஏற்படுத்திக் கொள்ள முடியும் என்ற ஆசை கமலாவுக்கு. அவள் ஆவல் நிறைவேறியது. சென்னைக்கு வந்த நாளிலிருந்து வாரம் இருமுறையேனும் தன் பிறந்த வீட்டுக்குப் போய் வரத் தவறியதில்லை. அவள் வசதியான வீட்டுப் பெண். பிறந்த வீட்டுப் பெருமையை அதிகம் தம்பட்டம் கொட்ட ஆசைப்படுகிறவள்.



கார் பங்களா என்ற வாழ்க்கையில், பெரிய நிறுவனங்களில் உயர்ந்த அதிகாரிகளாக அவளது இரு சகோதரர்களும் வேலை பார்த்து வந்தனர். இன்னமும் அவர்கள் கூட்டுக் குடும்பமாக அப்பா விட்டுப்போன நுங்கம்பாக்கத்து பங்களாவில் பழைய தோரணையில் அமர்க்களமாக வாழ்ந்து கொண்டிருந்தனர். எனவே கமலா தன் பிறந்த வீட்டைப்பற்றி ஆரம்பித்தால் லேசில் ஓயமாட்டாள். அவள் தாய் சிவகாமி மகளைப் பார்க்க அடிக்கடி தன் மூத்த மகனின் அம்பாசிடரில் கூடை நிறைய ஆப்பிளும் ஆரஞ்சுமாக வந்து விடுவாள். காலையில் வந்தால் பொழுது அமரும் வேளைதான் திரும்பிப் போவாள். தன் குடும்பத்தைப் பற்றிப் பெருமை பேசுவதில் மகளை மிஞ்சி விடுவாள் சிவகாமி.

அன்று மாலை அலுவலகத்திலிருந்து திரும்பும் போதே வாயிலில் அண்ணியின் பிறந்த வீட்டு அம்பாசிடர் நிற்பதைப் பார்த்தாள் அனிதா.

அவளுக்கும் பிரபுவுக்கும் கல்யாணமானபோது அவளும் ஒரு வசதியான வீட்டு மருமகளாகத்தான் வலது காலை எடுத்து வைத்து மகிழ்ச்சியுடன் புக்ககம் போனாள். பட்டுச் சேலையும் வைரமுமாக மின்னிய அவள் இப்போது வாயில் சேலையில் வேலைக்குப் போய்த் தன்னைத்தானே காத்துக்கொள்ள வேண்டிய ஒரு பரிதாப நிலைக்கு வந்து விட்டிருந்தாள். அதனாலோ என்னவோ அவளுக்குச் சம்பந்தியம்மாள் சிவகாமியைக் காண மிகவும் கூச்சமாக இருந்தது.

"இப்பத்தான் வேலையிலிருந்து வரியாம்மா?" சரம் சரமாக மின்னிய தங்கச் சங்கிலிகள் புரண்ட கழுத்தை ஒடித்துத் திருப்பிப் பார்த்தாள் சிவகாமி.

'ஆமாம்' என்று தலையை அசைத்தாள் அனிதா. "இருங்க, இதோ வந்துட்டேன்" சுருக்கமாகக் கூறிவிட்டு ஓட்டமும் நடையுமாகக் குளியலறைக்குள் தஞ்சமடைந்தாள்.

கதவைச அவள் தாழிடுவதற்குள் முன் அறையிலிருந்து சிவகாமி, மகளிடம் கடுமையாகப் பேசுவது கணீரென்று காதில் விழுந்தது.

"போன தடவை வந்தப்போ கூட கவனிச்சேன். இந்த வாழா வெட்டிப் பொண்ணு வீட்டுக்கு வந்து குளிச்சிட்டு பூஜையறை விளக்கை ஏத்தி வைக்கிறா. நீ சும்மா பார்த்துக்கிட்டு இருக்கே— இதென்ன வழக்கம்? உன் வீட்டு விளக்கை நீதானே ஏத்தி வைக்கணும்? இந்தத் துக்கிரி காலை வச்சதுமே... புக்ககம் நாசமாகப் போயிடுச்சி. இப்போ மாமியாரும் மண்டையைப் போட்டுட்டா நல்லா வாழ்ந்த குடும்பம் எப்படித் தரை மட்டத்துக்கு வந்துட்டது. பானை பிடிச்சவ பாக்கியசாலியாக இல்லாட்டா இப்படித்தான் நடக்கும். நீயும் உன் புருஷனும் குழந்தைகளும் நல்லா இருக்கணும்—அந்தச் சனியனை விளக்கேத்த விடாதே—புரியுதா?"

அதற்குமேல் கேட்கப் பிடிக்காது கதவை அழுத்திச் சாத்திக் கொண்டு குளியலறைக் குழாயைப் பெரிதாகத் திருகி விட்டாள் அனிதா. வேகமாக அண்டாவில் கொட்டிய நீருடன்-அவளது கன்னங்களில் விரைவாக கண்ணீர் வழிந்து கோடிட்டது. வாழாவெட்டி, துக்கிரி ...அப்பப்பா! சிவகாமியம்மாள் என்னென்ன பட்டங்களை அவளுக்கு வழங்குகிறாள்? அவள் காலை வைத்ததும் புக்ககம் உருப்படாது போய்விட்டதாகப் பழி சொல்கிறாள். ஆனால் உண்மையை அவள் மனசாட்சி அறியும். அனிதாவின் புக்ககத்து சொத்து சுகம் எல்லாம் நஷ்டமானதற்கும் மாமியார் இறந்ததற்கும் காரணம் பொறுப்பில்லாத பிரபுவின் அடாத செயல்கள்தாம் என்பது மறைந்த ரகசியம். அப்படியிருந்தும் சிவகாமியம்மாள் எத்தனை கொடுமையாகப் பேசுகிறாள். தன் மகள் மனதில் நாத்தி மேல் வெறுப்பைத் தூண்டி விடுகிறாள்.

ஒரு பெண்ணுக்கு முதல் விரோதி இன்னொரு பெண் தான் என்பது எத்தனை பெரிய உண்மை?



கோபமும் துயரமும் தாளாது விசும்பி அழுது தீர்த்தாள். அன்றே அவள் மனத்தில் அந்த எண்ணம் தீவிரமாக, பிடிவாதமாக உருவாகத் தொடங்கிவிட்டது.

பலவாறு கடந்து போனவற்றை எண்ணியபடி அனிதா தெருவின் முடிவை அடைந்தாள். போக்குவரத்து விளக்கு வழிகாட்டியதும் வேகமாக எதிர் சாலையை நோக்கி நடந்தாள். அவளை இடித்துத் தள்ளிவிடும் போல் சென்ற கருப்பு அம்பாசிடர் காரில் பக்கவாட்டில் சிவகாமி அம்மாள் தெரிந்தாள். அவள் அனிதாவைக் கவனிக்கவில்லை. ஆனால் அனிதாவுக்குத் தூக்கிவாரிப்போட்டது.

'திங்க் ஆஃப் தி டெவில் அண்ட் தேர் யு ஆர்' என்பார்களே ஆங்கிலத்தில். அது போல பிசாசை நினைத்தால் கூட போதும் சிவகாமி அம்மாள் பிரசன்னம் ஆகிவிடுவாள் போலிருக்கிறதே. கீழ் உதட்டைக் கோபத்துடன் கடித்துக்கொண்டு அவள் போக வேண்டிய பஸ் நிறுத்தத்திற்கு விரைந்தாள்.

அனிதா திரும்பவும் தன் புக்ககம் போக விரும்பிய போது ஏற்பட்ட எதிர்ப்புக்கு முதல் கொடி தூக்கியவள் சிவகாமி அம்மாள்தான். "அங்கே போய்விட்டு மறுபடியும் பிறந்த வீட்டிற்கு வரலாம் என்கிற நினைப்பை இப்பவே உதறிடு."

அண்ணனின் மாமியார் அவளை அதட்டினாள். அதைக் கேட்டுக்கொண்டு அண்ணன் சுந்தரமும்—கமலாவும் மௌனமாகக் கல் போல உட்கார்ந்திருந்தனர்.

"நான் திரும்பி வரமாட்டேன். அதைவிட..." முடிக்காது துயரத்துடன் அனிதா விம்மினாள்.

"சமுத்திரத்திலே விழுந்து செத்துடுவேன்னு பயமுறுத்திறியோ? சாக விரும்புறவங்களை யார்தான் தடுக்க முடியும்? அப்படி உன் தலையிலே எழுதியிருந்தா அதை மாத்த மனுஷங்களால முடியுமா?" அதட்டலாகக் கூறிவிட்டுச் சிவகாமி தன் மகளை அர்த்த பாவத்துடன் பார்த்தாள்.

கமலாவின் முகம் கடுமையாகியது. அண்ணா சுந்தரம் தங்கையைப் பார்வையால் வெட்டினார்.

"இதோ பார் கமலா, அவன் முடிவு செய்துட்டா குறுக்கே நிக்காதே. புருஷன் வீட்டுக்குப் போய், மொத்து பட்டும் அவ கொண்டு வர ரெண்டு பிச்சைக் காசு இல்லாவிட்டா உன் குடும்பம் சீராக நடக்காதா?" மிகவும் அகங்காரமாகக் கேட்டாள் சிவகாமி.

பிச்சைக்காசு! நாள் முழுவதும் அனிதா அலுவலகத்தில் பாடுபட்டுச் சம்பாதித்த பணத்தைச் சிவகாமி பிச்சைக்குச் சமமாகக் கருதினாள். பணத் திமிரில் பிறரது வியர்வை—உழைப்பு எல்லாமே அவளுக்குத் துச்சம் ஒரு வகையில் அதில் ஓர் உண்மை இருக்கத்தானிருந்தது. புக்ககத்தில் புகுந்தது முதல் அனிதா தன் கணவனின் அன்பை அடைய ஏங்கித் தவமிருந்த ஒரு பிச்சைக்காரியாகத்தான் இருந்தாள். திடீரென்று பொங்கிய கண்ணீரை அவசரமாகக் கைக்குட்டையால் துடைத்துக் கொண்டு பஸ் நிலையத்தில் வந்து நின்றாள் அவள்.

பின்னால் பரபரப்புடன் வந்து நின்ற இரண்டு வாலிபர்கள் அவளை மேலும் கீழும் கூர்மையாகக் கண்களால் ஆராய்ந்தனர்.

"பரவாயில்லையடா!..." ஒருவன் அவளது தோற்றத்திற்குச் சான்றிதழ் வழங்கினான்.

கைக்குட்டையால் அவள் மீண்டும் கண்களைத் துடைத்துக் கொள்வதைக் கவனித்த மற்றவன் நமுட்டுச் சிரிப்புடன் மெல்ல அருகில் வந்து, "ரோசாப் பூவே அழுவாதே முழுவாத பொண்ணு அழுதா பாவமுன்னு பெரியவங்க சொல்லுவாங்களே..." சினிமாப் பாடலை சன்னமான குரலில் பாடினான்.

கண்களில் கனல் பறக்க அவனைத் திரும்பி வெறித்தாள் அனிதா. பஸ் நிலையத்திலும், தெருவிலும் போகும் பெண்களைப் பரிகசித்து வேடிக்கை செய்வதை விட்டு வாழ்க்கையில் முன்னேற வகை தேடத் தெரியாத தண்டச் சோத்துத் தடியன்கள்—வெகுண்டாள் அனிதா.



போக்குவரத்தைச் சரிபார்த்துவிட்டு சற்றுத் தொலைவிலிருந்து அந்த வழியாக வந்த போலீஸ்காரர் பக்கம் அவள் திரும்பியதும்... அந்த இரு வாலிபர்களும் அவசரமாக நழுவினர்.

"ஈவ் டீஸிங்' என்ற குற்றத்திற்காகப் போலீஸ்காரர் பிடித்துக்கொண்டு விடப் போகிறாரோ என்ற பயம்—ஓட்டம் பிடித்தனர் அந்த இரு கோழைகள்.

சற்று முன் துயரத்தில் கண்கள் கலங்க பஸ் நிலையத்திற்கு வந்து சேர்ந்த அனிதா இப்போது பக்கென்று சிரித்து விட்டாள்.

"என்னம்மா சிரிக்கிறே...?" பழக்கமான குரல் அவளைத் திடுக்கிடச் செய்தது. அண்ணன் வீட்டு வேலையாள் கோதண்டம் அவள் அருகில் நடைபாதை மீது நிற்பதைக் கண்டாள்.

"உங்க அண்ணிதான் என்னைக் கடைத்தெருவுக்கு அனுப்பினாங்க. அவங்க தம்பி மகள் தன் டாக்டர் புருஷனோடு அமெரிக்காவிலிருந்து வந்திருக்கு. அவங்க ரெண்டு பேருக்கும் நம்ப வீட்லே நாளைக்கு விருந்து. பாதாம்கீர் வைக்கணுமாம். மணிக்கூண்டு கடைகளில் நல்ல பாதாம் கிடைக்கும்னு விரட்டி அனுப்பிச்சாங்க. வாங்கி முடிச்சுட்டேன். பஸ் பிடிக்க வந்தேன். உன்னைப் பார்த்தேன்... அப்படியே நின்னுட்டேன். ரொம்ப இளைச்சுப் போயிட்டேம்மா..." அனுதாபத்துடன் விசாரித்தான்.

"இல்லை... நான் நல்லாத்தான் இருக்கேன்— உங்க கண்ணுக்கு அப்படித் தோணுது."

"வீட்டு வேலையும், ஆபீஸ் வேலையும் சேர்த்துக் கவனிக்கணும்னா உடம்பு இளைக்கத்தான் செய்யும். நீ ரொம்பவே பாடுபடறே எனக்குத் தெரியும்... ஆமாம் உன் மாமனார் இப்ப எப்படி இருக்கார்? எழுந்து நடக்கிறாரா...?"

அவளது சிரிப்பு புஸ்ஸென்று அடங்கிப் போயிற்று. நடக்க முடியாது படுத்திருக்கும் அவருக்குப் புழுங்கல் அரிசிக் கஞ்சி செய்து பிளாஸ்கில் ஊற்றிப் பக்கத்தில் வைத்துவிட்டு வந்திருந்தாள். வேலைக்காரி ஐந்து மணி அளவில் வீட்டுக்குப் போய் விடுவாள். அதுவரை தன்னந் தனியே—எழுந்து நடக்க முடியாது. வலது காலில் எலும்பு முறிவுக்குப் போட்ட பிளாஸ்டருடன் அவள் வரவை நோக்கி வாயிலைப் பார்த்தபடி கட்டிலில் சாய்ந்து கிடப்பார்.

''பயப்படாதீங்க மாமா! நான் வேலை செய்து உங்களைக் கடைசி வரைக் காப்பாத்தறேன். என் சம்பளத்திலே கஞ்சி காய்ச்சியாவது உங்களுக்குப் பசியாறக் கொடுக்க முடியும்... என்னை நீங்க பெத்த மகள்னு நினைச்சுக்கோங்க...'' என்று சொல்லிக் கொண்டு அவசரமாகத் தயாரித்த புழுங்கலரிசிக் கஞ்சியில் பாலை ஊற்றிக் கிண்ணத்தில் நிரப்பிக் கொண்டுவந்து சின்னக் குழந்தைக்கு ஊட்டுவதுபோல் ஸ்பூனால் அள்ளி அவர் வாயில் ஊற்றியபோது...கிழவர் அதை ஒரே வாயாக விழுங்கி விட்டு தாங்க முடியாத துக்கத்தில் எப்படிக் குலுங்கி அழுதார்...

வேகமாகக் குலுக்கலுடன் வந்து நின்ற பஸ்ஸில் அவள் சட்டென்று ஏறிக் கொண்டாள். கையசைத்து கோதண்டத்திடம் விடைபெற்றுக் கொண்டு ஆசனமொன்றில் அமர்ந்தாள். பஸ் புறப்பட சில நிமிஷங்கள் இருந்தன—அதற்குள் அவளது சிந்தனைகள் சிறகு கட்டிக் கொண்டு பறந்து வீட்டிற்கு ஓடிவிட்டன.

காலையில் தயாரித்துப் பிளாஸ்கில் ஊற்றி விட்டுப் போகும் புழுங்கலரிசிக் கஞ்சியைத் தினமும் வந்ததும் இரவுச் சாப்பாடாக மாமனாருக்குக் கொடுத்து உபசரிப்பாள்.



அண்ணி கமலாவைப் போல அவள் என்றைக்கு பாதாம்கீர் வைத்து மாமனாருக்கு உபசரிக்கப் போகிறாள்? அந்த நன்னாள் அவளது வாழ்க்கையில் வரப் போகிறதா?

மீண்டும் அவள் கண்கள் கலங்கின.

## 2

'சாதிகள் இல்லையடி பாப்பா... குலத்தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்.' பாரதியாரின் புரட்சிக் கருத்து தெருவரையில்தான் நின்றது. புரசைவாக்கம் தணிகாசல முதலியார் தெரு— இப்பொழுது வெறும் தணிகாசல தெருவாகி விட்டிருந்தது. பெயரில்தான் அந்தச் சிறு மாற்றம். அடுத்தடுத்து ஓட்டுச் சுவரில் தொடராக கட்டப்பட்ட ஓட்டுக்கூரை வீடுகள் நிறைந்த —நெருக்கமான மனிதப் புழுக்கம் கொண்ட குறுகிய தொரு தெரு அது. குப்பைகளைத் தாங்கி வழிந்து கொண்டிருந்த அதே குப்பைத் தொட்டிகள், அதைச் சுற்றித் திரிந்த சொறி பிடித்த அதே நாய்கள், கிழிந்த சொக்காயும்—பரட்டைத் தலையுமாகப் பள்ளிக்கூடம் பக்கம் போகாது பாதி அம்மணமாகத் திரிந்த அதே அழுக்குப் பிடித்த குழந்தைகள் என்று தெரு... ஆண்டாண்டு காலமாக இருந்த இருப்பினின்று துளியும் மாறுதலின்றிக் காட்சி தந்து கொண்டிருந்தது.

தணிகாசலம் தெருவுக்குள் அவள் நுழையும் முன்பே இருட்டத் தொடங்கிவிட்டிருந்தது. வேகமாக பரபரப்புடன் புடைவை நுனியைக் கையால் தூக்கிப் பிடித்துக் கொண்டு அவள் தெருவுக்குள் நடந்தாள். அவள் எதிர் பார்த்தபடியே வேலைக்காரி வாயிற்கதவைத் தாளிடாது மூடிவிட்டுப் போய்விட்டிருந்தாள்.

கதவைத் தொட்டதும் திறந்து கொண்டது. நடையில் செருப்புகளைக் கழற்றி விட்டு உள்ளே பரவிக்

கிடந்த இருளைப் போக்க அவள் முதலில் நடையின் மின் விளக்கைப் பொருத்தினாள்.

பனிச்சென்று தாழ்வாரத்தில் விளக்கொளி பரவியதும், கூடத்துக் கட்டிலின் மேல் கிடந்த வேதகிரி இருமிக் கொண்டே . எழுந்திருந்தார். "வந்துட்டியாம்மா..." தினறியபடி தலையணைமீது சாய்ந்தபடி உட்கார்ந்தார். தோள் பையைக் கழற்றி அருகில் கிடந்த மேஜைமீது வைத்துவிட்டு கூடத்துக் குழல் விளக்கையும் பொருத்தினாள்.

அவள் வரும் முன்பே அவர் கஞ்சியைச் சாப்பிட்டு முடித்துவிட்டார். வேலைக்காரி பிளாஸ்கைக் கழுவி... உள்ளே கொண்டு வைத்து விட்டாள் என்பதைக் காலியான மேஜை காட்டிக் கொடுத்தது.

"சௌகர்யமா வாழ்ந்த காலத்திலே, ஆரோக்கியமா உடம்பு இருக்கணும்—நல்ல பசி வந்து சாப்பிடணும்னு நானும் என் சிநேகிதனும் கடற்கரையிலே தினம் ஒரு மைல் தூரம் வேகமா நடப்போம். பசி வராதான்னு அப்போவெல்லாம் கவலை. இப்போ ஏன் இப்படி பசி பேயாகக் குடலைப் பிடுங்குகிறதேன்னு கவலை... உங்க மாமியார் சாகக்கிடந்தபோது இப்படித்தான் என்னைப் பசி— ஒரேயடியா உலுக்கிக்கிட்டிருந்தது. சர்க்கரை வியாதியோன்னு டாக்டர்கிட்ட ஓடினேன். ஒண்ணுமில்லைனு அவர் கையை விரிச்சார்—" சோகமாகச் சிரித்தார் வேதகிரி. அவள் வருமுன் தான் சாப்பிட்டு விட்டதற்கு மன்னிப்புக் கேட்கும் பாவனையில் அவர் முகத்திலே குழந்தைத் தனமும்—குரலில் குழைவும் தெரிந்தன.

"நல்லா பசிச்சு நீங்க சாப்பிடணும்—எறும்பு சட்டுன்னு கூடணும். கட்டவிழ்த்துவிட்டதும் நீங்க சீக்கிரம் நடக்க ஆரம்பிக்கணும்னு நான் தினமும் கடவுளைப் பிரார்த்திக்கக்கிறேன் மாமா— ஏன் இப்படிப் பேசுறீங்க? பசி ஆரோக்கியத்தின் அறிகுறி."



"இல்லை... தரித்திரத்தின் சின்னம் அம்மா அனிதா! உலகை அனுபவப்பட்டவன் நான் சொல்றதைக் கேளு. என் பசி..." மேலே பேச முடியாது கட்டிலின் கீழே அவர் சற்று முன் மடித்துப் போட்டிருந்த மாலை நாளேட்டை எட்டி எடுத்து அதற்குள் தனது முகத்தைப் பதித்துக் கொண்டார்.

"நான் குளிச்சுட்டு ராத்திரிக்கு ஏதாச்சும் நாம சாப்பிடச் சமைக்கப்போறேன். உங்களுக்கு என்ன வேணும்னு சொல்லுங்க மாமா?" பேச்சை மாற்றும் பொருட்டு கேட்டாள் அனிதா.

'நீ வேலைக்குப் போய் உழைச்சுப் போடறது போதாது போல— நீ வந்ததும் வராததுமா அதைச் செய், இதைச் செய்னு சொல்ல நான் அப்படி ஒரு மிருகம் அல்ல. மானம் மரியாதை-நல்ல உணர்வுகள் எல்லாம் உள்ள ஒரு சராசரி மனிதன்... நம்மையெல்லாம் இந்த ஓட்டு வீட்டிலே பரிதவிக்க விட்டுட்டுப் பூந்தமல்லி பங்களா, பாங்கியிலிருந்த பணம், பொன் கொழிச்ச வியாபாரம், உன் மாமியார் நகைகள் எல்லாத்தையும் ஒழிச்சுக் கட்டிட்டு பிரபு ஒரு ஸ்பை ஸ்டார் ஓட்டலில் உட்கார்ந்துகிட்டு படமெடுக்கிறானாம் படம்? அவனைப் பத்தி இந்தப் பேப்பரில் என்ன வந்திருக்குன்னு படிச்சுப் பார்— நீயே தெரிஞ்சுக்க. நான் ஏன் சொல்லணும்..." பற்களை நறநறவென்று கடித்துக்கொண்டு மாலை நாளேட்டை மடித்து முற்றத்துக் குறட்டின்மீது வீசிப் போட்டார்.

தொட்டி முற்றத்தில் இறங்கி கைகால்களைக் கழுவிக் கொண்டு பித்தளைச் செம்பை ஒரு ஓரமாக வைத்த அனிதா, சரக்கைகளைக் கொடியில் தொங்கிய துண்டிலே துடைத்துக் கொண்டாள். மெள்ளக் குனிந்து அவர் போட்ட பத்திரிகையைக் கையில் எடுத்தாள். முகத்தில் அடிப்பது போல கொட்டை எழுத்துகளில் பிரபுவின் படத்துடன் அந்தச் செய்தி முதல் பக்கத்திலேயே ஒரு பகுதியை வியாபித்துக் கொண்டிருந்தது.

டைரக்டர் பிரபுவின் அடுத்த படத்தில் நடிகை ஹரிணிதான் கதாநாயகியாம். 'பாவம் அந்தப் பெண்!' என்ற தலைப்பு கொண்ட படத்திற்குப் பூஜை போட்டு விட்டு ஐந்து நக்ஷத்திர ஹோட்டல் அப்சராவில் அவர் தமது அறையிலிருந்தபடியே நமது நிருபருக்குப் பேட்டி யளித்தபோது சொன்னார். படம் விரைவில் வரும் என்றும்— கதாநாயகனுக்காக— ஒரு புது முகத்தை உயர் நிலை பள்ளிகளில் தேடுவதாகவும் தெரிவித்தார்.

''நடிகை ஹரிணிக்கும் தங்களுக்கும் விரைவில் திரு மணம் நடக்கக்கூடும் என்கிறார்களே— அதைப் பற்றி?...'' நிருபர் கேட்டபொழுது பிரபு முறுவலித்தார்.

''ஏற்கனவே தங்களுக்குத் திருமணமாகிவிட்டிருப்ப தாயும் அந்த மனைவியிடமிருந்து தாங்கள் விவாகரத்து பெறப் போராடிக் கொண்டிருப்பதாயும் ஒரு கிசுகிசு பரவலாகி விட்டிருக்கிறதே?... அதைப்பற்றி—''

நிருபர் கேட்டபோது பிரபு உரக்க சிரித்து மழுப்பி விட்டார்.

பின்னர் நடிகை ஹரிணி அவர்களை—நமது நிருபர் அவர்களது பங்களாவில் சந்தித்து இது சம்பந்தமாகக் கேட்டபோது—அவரும் நேரிடையாகப் பதில் அளிக்காது மழுப்பி விட்டார். 'முதல் மனைவியிடமிருந்து டைரக்டர் பிரபுவுக்கு விவாகரத்து கிடைக்காததனால்தான் இந்த மழுப்பலா?...'

துயரம் ஒருபெரும் உருண்டையாக நெஞ்சை அடைக் கப் பத்திரிகையை எடுத்து மாமனாரிடம் கொடுத்துவிட்டு அவள் குளியலறைக்குச் செல்லத் திரும்பினாள்.

'படம் எடுக்கிறானாம் படம்! ஒரு தடவை இவன் படம் எடுத்துப் பாம்பாக ஆடிய அட்டகாசத்தைத் தாங் காது மகராசி காமாக்ஷி மாரடைப்பில் நிம்மதியா போயிட்டா...''



''இப்படிப்பட்ட பிள்ளை பிறக்கலைன்னு நானும் உன் மாமியாரும் போகாத கோயில் இல்லை வேண்டாத தெய்வமில்லை. இப்போ அது எத்தனை பெரிய பாவம்னு தெரிகிறது. இப்படிப்பட்ட அயோக்கியனை மகனாகக் கொண்டதைவிட, பிள்ளை குட்டியில்லாதவன் என்கிற பெயரோட கண்யமா இந்த உலகத்தைவிட்டு யாரோ போடற தர்ம கொள்ளியை வாங்கிட்டு அக்கடான்னு போயிருக்கலாம்...''

''மாமா! இப்படி இரைஞ்சு கோபத்தோடு பேசறது உங்க ரத்தக் கொதிப்புக்குஆகவே ஆகாது கோபப்படறது உங்க உடம்புக்கு நல்லதில்லேன்னு டாக்டர் சொல்லி யிருக்கார்.''

''இனிமேலே நல்லது என்னம்மா எனக்கு இருக்கு? என்னை விட்டுத் தள்ளு. உன்னைப் பத்தி நினைக்கிற போதுதான் மனம் ரொம்ப கொதிச்சிப் போகுது... தாய்க்குக் கொள்ளி போட வராத பெத்த பிள்ளையைப் பத்தி நான் மறந்துட்டேன். ஆனால் இந்தப் பத்திரிகைக் காரங்க அவனை ஞாபகப்படுத்திக் கிட்டேயிருக்காங்க ளேன்னு ஆத்திரமா வருது—அம்மா இங்கே செத்துக் கிடக்க மகன் மைசூர்லே ஷூட்டிங்கிலே மும்முரமாக இருந்தான். தந்தி அடிச்சும் தகவல் இல்லே.... மகன் வரலைன்னு செத்தவளை எத்தனை நாழி போட்டு வச்சிருக்க முடியும்?''

''மாமா! நான் கூட வரலை அதுக்குக் காரணம்'' அனிதா பேச முடியாது திணறினாள்.

''உன் நிலைமையே வேறே—நீ வராததைப் பத்தி நான் அப்ப தப்பாகவே நினைக்கலை. நீ என்ன செய்வே கட்டினவன் ஒழுங்கா வச்சுப் படைக்கலை. அண்ணன் கிட்டே அண்டிக்கின்டிருந்தே. அவர் போகக் கூடா துன்னு உத்தரவு போட்டா எப்படி வர முடியும்? நீ நேரில் வந்து அன்னிக்கு சொல்றதுக்கு முந்தியே நானே எல்லாத்தையும் புரிஞ்சுகிட்டேன் அம்மா. என் மகன்

உன்னை வேண்டாம்னு உதறிவிட்ட பிறகு உனக்கும் இந்தக் குடும்பத்துக்கும் என்ன உறவு இருக்கும்மா?''

''மாமா! நீங்க ரொம்ப மனக்கசப்போட பேசறீங்க'' தாங்க முடியாது அவள் விசும்பி விட்டாள்.

''அட நீ ஒண்ணு! நீ எதுக்காக அழறே—உன்னை இந்த கதிக்குக்கொண்டு வந்திருக்கானே, அந்தப் பாவியை நினைச்சு நான்தான் வயிறெரிஞ்சு அழணும். போம்மா போ, உள்ளே போய் காரியத்தைக்கவனி. வேலையிலிருந்து களைச்சு வந்திருக்கே... எழுந்து உனக்குக் கூடமாட உதவ முடியாம பகவான் என் காலை ஒடிச்சுக் கழுத்திலே கட்டியிருக்கார். யாரோ புண்ணியவதி பெத்த மகள் நீ. எனக்கு மனிதாபிமானத்தோட முன்வந்து இதுசமயம் ஒருவாய்ச் சோறு போடறே. நான் பெத்த மகன்... தங்கக் குத்து விளக்குபோல இருக்கிற உன்னை தேடிக் கட்டிக்கொடுத்து பங்களா—கார்— வியாபாரம்னு எல்லாத்தையும் தூக்கிக் கொடுத்ததுக்கு என்ன பரிசு கொடுத்திருக்கான் பார்த்தியா''

''டவுனிலே காமாக்ஷி அண்ட் பார்ட்னர்ஸ்' பேப்பர் மர்ச்சண்ட்ஸ்னா பச்சைப் பிள்ளைகூட எங்கேன்னு காட்டும் அப்படி பிரபலமா மொத்த வியாபாரத்திலே பேப்பர், வித்துக்கிட்டிருந்த நம் மானம் இப்ப ஊரிலே வெளிவர அத்தனை தினசரி—சினிமா—வார பத்திரிகையெல்லாம்...கிசு கிசுவாகப் போய்விட்டிருக்கு. எனக்குப் பிள்ளையாகப் பிறந்து, எத்தனை புண்ணியத்தைத் தேடிக்கிட்டான் பாவி மகன்...''

''மாமா! நேத்தே நீங்க காரக்குழம்பு வேணும் நாக்கு செத்துப் போச்சுன்னு சொன்னீங்க இல்லையா? சீக்கிரம் குளிச்சுட்டு சாமி விளக்கேத்தி வச்சுட்டு— அத்தை படத்துக்குப் பூமாலை போட்டுட்டு— சமைச்சுடறேன். மறந்துட்டீங்களா மாமா! 'இன்னிக்கு உங்களோட கல்யாண நாள்'' அனிதா கூறிவிட்டுத் துயரத்தை அடக்கிக்கொண்டு லேசாக முறுவலித்தாள்.



திடுக்கிட்டவர் போல ஒருகணம் அவளை வியப்புடன் வெறித்துப் பார்த்தார். பின்னர் திடீரென்று உரக்கச் சிரித்தார். தொடர்ந்து தனது கரங்களால் முகத்தை மூடிக்கொண்டு குலுங்கக் குலுங்க அழத் தொடங்கினார்.

''மாமா! என்ன இது?'' தணிவான-கனிவான குரலில் அதட்டுவதைக் கேட்டு கரங்களை விலக்கிவிட்டு நிமிர்ந்தார்.

கைதுடைக்கும் துண்டை நீட்டியபடி அனிதா கட்டில் அருகே வந்து நின்று கொண்டிருந்தாள்.

''அஞ்சாத சிங்கம் என் கணவன்னுட்டு காமாக்ஷி பெருமையா என்னைப் பத்தி பேசின காலம் போச்சு இப்போ வயசும்—இல்லாமை, நோய், தனிமை இதுகளால் ஒடிஞ்சு போய் நான் ரொம்ப கோழையாயிட்டேன். காமாக்ஷி கழுத்திலே தாலியைக் கட்டினதிலிருந்து அவள் உடலைச்சிதையிலே ஏத்தி, நெஞ்சிலே நெருப்பைக்கொட்டினவரை விருவிருன்னு ஒரு காக்ஷி ஒரு கணப்பொழுதிலே மனத்திலே வந்து அடைச்சுக்கிச்சு தாங்க முடியலை. அவளுடைய இழப்பின் கொடுமையை என்னால் பொறுத்துக்க முடியலையம்மா அனிதா... அதனால்தான் கட்டுக்கொள்ள முடியாம அழுகை வந்திடுச்சு. வாலிப வயசு இருந்தால் ஒரு சமயம் காமாக்ஷியின் மறைவின் துன்பத்தைத் தாங்கிக் கொண்டிருப்பேன். ஆனால் இந்த வயசிலே — அவள் துணையும் ஆறுதலும் தேவைப்பட்ட சமயத்தில் அவள் என்னை விட்டுட்டுப் போயிட்டதை என்னால் ஏற்க முடியலையம்மா. தவிக்கிறேன்... வருஷத் திவசம் கொடுத்த மறுநாள் கோயிலுக்குப் போயிருந்தேன் அவள் பிறந்த நாள்... ஒரு அர்ச்சனை அம்பாள் பேருக்குச் செய்துட்டு வெளியே வந்தவன் வாழைப் பழத்தோல் வழுக்கி விழுந்தேன்—கால் எலும்பு முறிஞ்சு போச்சுன்னு டாக்டர் கட்டுப் போட்டு கட்டிலில் கட்டிப்போட்டு விட்டார். ஒருவாய் தண்ணி எடுத்துக் கொடுக்கக்கூட யாருமில்லாது அனாதையா நான் கிடந்த சமயம். நீ வந்து என் முன்னே நின்னப்போ தான் அசந்து போயிட்டேன்.

காமாக்ஷிதான் ஆவி உருவிலே உன்னை உசுப்பி இங்கே அனுப்பி வச்சான்னு நம்பி, உன்னைப் பார்த்ததும் நான் ஒன்னு அழுதுட்டேன். நான் அழறதையோ, சிரிக்கறதையோ—கோபமாக மகளைப் பத்திப் பேசறதையோ நீ கண்டுக்காதே. என் மனசிலே அலைபாய்கிற உணர்வுகளுக்கு அவை வடிகால்...வயசான கிழவன் ஏதோபேத்திக்கிட்டிருக்கான்னு நீ பாட்ல உன் காரியத்தைக் கவனி அம்மா...''

''மாமா! நீங்க ரொம்ப உணர்ச்சி வசப்பட்டுப் பேசிக்கிட்டிருக்கீங்க. கொஞ்சம் ஹார்லிக்ஸ் கலக்கிக்கொண்டு வரட்டுமா?''

''அதெல்லாம் ஒண்ணும் வேணாம். நீ ஏதாச்சும் சூடா செய்து சாப்பிடு. பிறகு சமைக்கலாம். அதுக்கு முன்னாடி ஒரு காரியம் செய்வியா அம்மா...?'' சொல்லிக்கொண்டே வேதகிரி தலையணை அடியில் கையைவிட்டுத் துழாவி, தனது சிறு மணிபர்சை எடுத்தார். தெரு மூலையிலே பாதையோரத்திலே ஒருபூக்கார அம்மா, மல்லிகைப் பூ வச்சிக்கிட்டு வித்துக்கிட்டிருப்பாங்க, அவங்க கிட்ட இந்த ஒரு ரூபாய்க்கு மல்லிகைப் பூ வாங்கி வந்து படத்துக்குப் போடும்மா... மல்லிகைன்னா உன் மாமியாருக்கு உயிர்.''

''மாமா! என் பர்சிலே கொஞ்சம் பணம் இருக்கு. நீங்க அதை வச்சுக்கோங்க...'' அனிதா கூறியதை அவர் ஏற்க மறுத்து தமது கைகளைப் பலமாக ஆட்டினார்.

''என் வேண்டுகோளை நீ மறுக்கக்கூடாது... இந்த மாசம் வந்த என் வட்டிப் பணத்திலே மிச்சமானதை பர்சில் பத்திரமா வச்சிருக்கேன், என் காமாக்ஷிக்கு நான் பூ வாங்கிப் போட ஆசைப்படறேன். தடுக்காதே...நீ அவளை அன்னிக்குப் பார்க்கலையே அம்மா! இந்த முற்றத்திலேதான் கொண்டு வந்து கிடத்தியிருந்தாங்க—தூங்குகிற தங்க பொம்மையாட்டம் இருந்தா. அத்தோட மஞ்சளும் குங்குமமுமா... நான் வாங்கிப்போட்ட பெரிய மல்லிகைப் பூமாலையோட—டி—ஸிலப்பு சல்லாத் துணியிலே,



புதுமணப் பெண்போல... ஜாம் ஜாம்னு புறப்பட்டு என்னை விட்டுப் போயிட்டாம்மா... அதோ பார்! படத்திலே அவ சிரிக்குறா!'' சுட்டிக் காட்டிவிட்டு கண்ணங்கவில் உதிர்த்த கண்ணீர்த் திவலைகளை விரலால் சுண்டி விட்டுக் கொண்டார்.

''சரி மாமா... உங்க மனதுபடியே செஞ்சா போச்சு ரூபாயைக் கொடுங்க. தொடியிலே பூ வாங்கிக்கொண்டு வந்து வச்சுட்டு மத்த காரியத்தைக் கவனிக்கிறேன்—'' கால்களில் செருப்புகளைத் திணித்துக் கொண்டு வெளியே விரைந்தாள் அனிதா.

சிறிது பொழுதில் கூடத்து அலமாரியிலிருந்த காமாக்ஷி அம்மன் விளக்கு, மஞ்சள், குங்குமப் பொட்டுகளுடன்... பொன்னாக மின்னிக்கொண்டு மெலிதாக எரிந்து கொண்டிருந்தது. அருகிலே முருகன் படத்தருகே புகைந்துக் கொண்டிருந்த ஒத்தை ஊதுவத்தியின் நறுமணம் வீட்டை நிறைத்துக் கொண்டிருந்தது மல்லிகைச் சரத்தைச் சூட்டிக்கொண்டு காமாக்ஷி சமையலறையை படத்திலிருந்தபடியே எட்டிப் பார்த்து மேற்பார்வையிடுவதுபோல மூக்குக் கண்ணாடி வழியே முறுவலித்துக் கொண்டிருந்தாள். குக்கரை இறக்கிவிட்டு... அடுப்பில் கொதித்துக் கொண்டிருந்த குழம்பைக் கிளறி விட்டபடி மேடையருகே அனிதா நின்று கொண்டிருந்தாள்.

மாமனாருக்குத் தெம்பு கொடுக்கத்தான் அவள் அப்படிப் பேசினாளே ஒழிய, பத்திரிகையில் அவன் அந்தச் செய்தியைப் படித்த பின்னர் மனம் வேதனையில் விண்டு விரிந்து கொண்டிருந்தது. நெஞ்சுக்குள் புழுங்கிக் கொண்டிருந்த உணர்வுகள் அந்தக் குழம்பைப் போலக் கொதிக்கத் தொடங்கின...

''ஏற்கெனவே கல்யாணம் செய்து கொண்டு விட்டிருந்த மனைவியை விவாகரத்து செய்யப் போராடிக் கொண்டிருக்கிறார் டைரக்டர் பிரபு.''

அவர்களது குடும்ப விவகாரம் பத்திரிகைகள் மூலம்—சந்திக்கு வந்து விட்டிருந்தது.

அனிதா யார்? என்று தெரியாதவர்கள் கூட அவளைப் பற்றி பேசிச் சிரிக்கப் போகிறார்கள்.

அந்தத் தெருவினுள் அவள் முன்போல வேலைக்கு நிம்மதியாகப் போய் வர இயலுமா?

"அதோ போகிறாள் பார்! அவள்தான் அனிதான்னு பேர்... சினிமா டைரக்டர் பிரபுவின் மனைவியாம்... இவளை விவாகரத்து செய்துவிட்டு..."

"டைரக்டர் பிரபுவை நீ பார்த்ததில்லையா, ஆள் அழகா ஜம்முனு இருப்பார்... ஒரு கல்யாணத்திலே அவரைப் பார்த்திருக்கேன்— அவர் மனைவியா இவள்? சே! சே! கொஞ்சம்கூட பொருத்தமே இல்லையே, அவர் எங்கே— இவ எங்கே?—"

"அவருக்கு ஏத்த அழகில்லையே தவிர... மற்றபடி இவளுக்கு என்ன குறைச்சல்? பார்க்க அப்படி ஒண்ணும் மோசமில்லை. கொஞ்சம் நிறம் மட்டு. மெலிசா உயரமா இருக்கா. நன்னா சாப்பிட்டா உப்பிப் போனா, தானே ஒரு பொய் சிகப்பு மெருகிட்டுக் கொண்டுவிடும். நடிகை ஹிரிணி பின்னாலே அவர் ஓடிக் கொண்டிருப்பதாகக் கேள்வி. ஹிரிணி பண்ணிக்கிற அத்தனை ஒப்பனையும் இவளும் பண்ணிக் கொண்டு வைரத்திலே மின்னினா இவளும் அழகாகத்தானிருப்பாள்.

"போ போ... நான் அதைச் சொல்லலை... இவள் ஒரு சாதாரணப் பெண். அவள் நடிகை. லக்ஷக் கணக்கில் பணம் சம்பாதிக்கும் திறமை கூடவே இருக்கு. அது ஒரு காரணமாக இருக்கலாம் இல்லையா?"

"டைரக்டர் பிரபு தன் சொத்தையெல்லாம் அழிச்சுப் படம் எடுத்து அது பப்படமாகிவிட்டாதமே?"

கற்பனைகளின் சிறகுகளை மடக்கிவிட்டு திடீரென்று நினைவுக்கு வந்தவள் போல கொதித்துச் கண்டத்



தொடங்கிய குழம்பில் வெந்தயத்தைத் தாளித்துக் கொட்டிக் கீழே இறக்கி வைத்தாள்.

'மாமனாருக்குப் பிடித்தமான வெண்டைக்காய் புரட்டலை முடித்து விட்டால் சமையல் முடிந்தது போல் தான்'—எண்ணிக் கொண்டபடி அடுப்பில் அலுமினியச் சட்டியை ஏற்றி எண்ணெய் சிறிதளவு ஊற்றி வெங்காயத் துண்டுகளைத் துவட்டினாள்.

மாமியாருக்குப் பணிந்த மருமகளாக கல்யாணமான புதிதில் பூந்தமல்லி பங்களாவுக்கு அவள் மருமகளாக வந்த மறுநாளே...மாமியார் காமாக்ஷி அவளைத் தன்னுடன் சமையலறைக்குள் அழைத்துச் சென்றாள். சமையற்கார அம்மாளுடன் கூட உதவியாக இருந்து, பதார்த்தங்களை அந்த வீட்டவர்களுக்குப் பிடித்த வகையில் எப்படிப்பட்ட பக்குவம் செய்வது என்று மேற்பார்வையிட்டு அறிந்து கொள்ள வேண்டும் என்று போதித்து—அந்தப் பயிற்சியைத் தொடங்கி வைத்தாள்.

அப்போது...முதல் நாளே மாமியார் சொன்னது சட்டென்று ஞாபகத்தில் எழுந்தது.

"பிரபுவுக்கு வெங்காயத்தை நிறையப் போட்டு எண்ணெய் விட்டு வதக்கின கறிதான் பிடிக்கும் உடம்புக்கு எண்ணெய் ஆகாதுன்னு சொன்னா கேட்க மாட்டான்" தாய்க்கு உரிய பெருமையும் கவலையும் கலந்த குரலில் சொன்னாள்.

பத்திரிகையில் வந்த செய்தியைப் படித்த பின்னர், எண்ணெயில் வறுபட்டுக் கொண்டிருந்த வெங்காயத்தின் வாசனை மூக்கில் மோதியதும், அந்தப் பழைய நினைவுகள் எல்லாம், நீர்வீழ்ச்சி போல் மனத்தில் கொட்டி நிறையவே அந்தக் கனத்தைத் தாள முடியாதவள் போல அடுப்பை அடக்கி விட்டு சுவரில் சாய்ந்து கொண்டு பிரமை பிடித்தவள் போல் நின்றாள்.

கூடத்தில் வேதகிரி பலமாக இருமினார். சட்டென்று விழித்துக் கொண்டு அவசரமாகப் புளியைக் கரைத்து ரசத்திற்கு வேண்டியவைகளைத் தயார் செய்தாள். சிறிது நேரத்தில் சமையல் முடிந்தது. ஷெல்பிலிருந்த பெரிய ஸ்டீல் தட்டையும் இரண்டு கிண்ணங்களையும் எடுத்தாள் தட்டிலே சோற்றை அள்ளி வைத்து, கிண்ணங்களில் குழம்பையும்—ரசத்தையும் நிறைத்து அத்துடன் கூட வைத்து, எல்லாவற்றையும் ஒருங்கே எடுத்துக் கொண்டு கூடத்திற்கு வந்தாள்.

அருகில் கிடந்த முக்காலியை ஒரு கரத்தால் படுக்கையருகே நகர்த்தி அதன் மீது தட்டை வைத்தாள்.

''இந்தாங்க மாமா! இந்த பேசினிலே கைகளைக் கழுவிக்கிங்க'' முற்றத்து ஓரத்தில் வைக்கப்பட்டிருந்த பீங்கான் பேசினை எடுத்து நீட்டி—சொம்பிலிருந்த நீரை அவர் கரங்கள் மீது ஊற்றினாள்.

''துண்டு இந்தாங்க கையைத் துடைச்சுக்கிட்டு—உங்களுக்குப் பிடிச்ச காரக்குழம்பை முதல்லே சாப்பிடுங்க இல்லாட்டி அத்தை உங்க கனவில் வந்து கோவிச்சுப் பாங்க'' கேலியாகப் பேச முயன்றவளை நிமிர்ந்து பார்த்தார் வேதகிரி

''ஏம்மா! எனக்கு இப்படியெல்லாம் பணிவிடை செய்யணும்னு உனக்கு என்ன தலையெழுத்து? உன் அண்ணன் வீட்டிலேயே நிம்மதியா நீ இருந்திருக்கலாமே'' தழுதழுத்தார்.

''என் கடமையைச் செய்யறேன். எழுந்து நடக்க முடியாம வேலைக்காரி எடுத்துக்'கொடுக்கிற தண்ணியைக் குடிச்சுட்டு நீங்க கட்டிலோட கிடக்கிறீங்கன்னு கேள்விப் பட்ட பிறகு நான் சும்மா இருந்தா பாவமில்லையா மாமா...''



''பாவ புண்ணியம்னு நீ கருணையோட பார்க்கிறே, என் மகன் இருக்கானே அந்தப் பாவி—தன் கற்பனையிலே நினைக்கிற யாரோ ஒரு பொண்ணுக்காக இரங்கி-மனம் கரைஞ்சு போய் 'பாவம் அந்தப் பெண்' அப்படின்னு ஒரு படம் எடுக்கப் போறானாம்—கட்டின பெண்டாட்டியின் பாவத்தைக் கொட்டிக்கிட்டவனுக்கு தாய்க் குலத்து மேலே இரக்கம் வந்துடுச்சோ? என்ன இரட்டை வேஷம்?''

'மாமா, சாப்பாடு ஆறிடும்—பேசினது போதும்...'' அன்போடு அனிதா கடிந்து கொண்டாள்.

''சரிம்மா! உன் பேச்சைக் கேக்கிறேன். கடைசி காலத்திலே என்னை ஆதரிக்க வந்து வீட்டு வாசலில் நின்ற என் காவல் தெய்வம் நீ! அதனாலே உன் பேச்சுக்கு நான் கட்டுப்படணும்'' கூறிவிட்டுக் கண்ணீரால் நடித்த தமது கண் இமைகளைத் தட்டின் மீது தாழ்த்திக் கொண்டு மெல்ல குழம்பைச் சாதத்துடன் பிசையத் தொடங்கினார்

அதற்கு மேல் அங்கே நின்றால் உணர்ச்சி வசத்தில் அவர் மீண்டும் கொந்தளித்துப் போவார் என அஞ்சி அனிதா பரபரப்புடன் உள்ளே சென்று விட்டாள்.

கூடத்தை ஒட்டிய சிறு அறையில்தான் அவள் தரையில் பாயின் மீது உறங்குவது வழக்கம்.

அண்ணன் வீட்டில்—கட்டில் மெத்தை—தனி படுக்கை அறை என்று சுகமாக வாழ்ந்து பழக்கப்பட்டவள்தான் கல்யாணமாகி புக்ககம் வந்தவளுக்கும் வசதிகளுக்குக் குறைவிருக்கவில்லை. ஆனால் கணவனின் அன்புக்குத் தான் பெரும் குறை இருந்தது.

வற்புறுத்தி பெண்ணைக் கட்டிக் கொடுக்கும் பழக்கம் என்று பேசிய பாரதி ஆணுக்கும் அந்த நிலை சிலசமயம் ஏற்படும் என்பதைச் சிந்தித்தாரோ? என் வரை இந்தக் கல்யாணம் என் அப்பாவின் வற்புறுத்தலைத் தாங்க முடியாது ஏற்றுக் கொண்ட தண்டனை.''

திருமணமாகி தேன்நிலவுக்கு மைசூருக்குப் புறப்பட்ட போது—வழியில் சாலை யோரத்தில் காரை நிறுத்திவிட்டு

பிரபு வெளிப்படையாக அவளிடம் முதல் முதலாகப் பேசிய வார்த்தைகள்!

திடுக்கிட்டுப் போனாள் அனிதா. அழுகையும் துக்கமுமாக அவனைப் பயத்துடன் பார்த்தாள்—அவள் கற்பனை முன் வந்து கிடந்த அந்தக் காதல் சாம்ராஜ்யம் விரைவில் தூளாகி மண்ணோடு மண்ணாகி விட்ட அதிர்ச்சியில் பேசத் தோன்றாது விழித்தாள்.

''இது நடு ரோடு—இங்கே அழுது ஆர்பாட்டம் செய்கிற கதையை விட்டுடு. படிச்சப் பெண் நீ—புத்திசாலித்தனமாக சொல்வதைக் கேட்டு என் நிலைமையைப் புரிஞ்சுக்கோ. சினிமா உலகில் நான் முழு மனத்துடன் ஈடுபடுறதைத் தடுக்க என் அப்பா செய்த சதி இந்தக் கல்யாணம். அவர் பார்த்து முடிக்கிற பெண்ணைக் கட்டிகிட்டா நான் கேட்கிற தொகையை என் படத்துக்கு முதலீடு செய்ய முடியும்னு எனக்கு ஆசை காட்டினார். புகழ்பெற்ற நடிகை ஹரிணியைத் தெரியுமில்லையா? அவளைத்தான் நான் கல்யாணம் செய்துக்க விரும்பினேன். அதைத் தடுக்கவும் இது ஒரு சூழ்ச்சி. நம் கல்யாணம் முடிந்ததும் அப்பா பணத்துக்குக் கை விரித்து விட்டார். அப்பா என்னை ஏமாற்றினதாக நினைக்கிறார். நானும் அவரை வஞ்சம் தீர்த்துக்க முடிவு செய்துட்டேன்.''

அதுவரை பிரமையுடன் காரின் கதவுமேல் சாய்ந்தபடி இருந்த அனிதா, கலங்கிய கண்களும் நடுங்கும் குரலுமாக மெல்லக்கேட்டாள். அதுக்காக நீங்க என்னை என்ன செய்யப் போறீங்க?

''உன்னோட நான் வாழப் போறதில்லை.''

''நான் செய்த தவறு?''

''கலா ரசிகனான எனக்கு நீ தகுதியான மனைவி இல்லை.''

''அந்த ஹரிணி ரொம்ப அழகானவளா!'' அவள் குரல் விசும்பலில் நின்றது.



''நீ அவள் நடிச்ச படங்கள் எதையுமே பார்த்ததில்லையா? கனவு உலகத்திலிருந்து இறங்கி வந்துவிட்ட அழகு தேவதை போல இருப்பாள். படத்தில் மட்டுமல்ல நேரில் பார்க்கவும் பேரழகி. அவளும் படித்தவள்தான் பாடத் தெரியும் பரதம் தெரியும். எல்லாத்தையும் விட என்மேலே உயிரையே வச்சிருக்கா. உன்னைக் கல்யாணம் கொண்டது நான் அவளுக்குச் செய்துவிட்ட மாபெரும் துரோகம்.''

''இப்போ என்ன செய்யப் போறீங்க?''

தரை நழுவி எங்கேயோ கிடுகிடு பள்ளத்தில் விழுகின்றதொரு பயங்கர உணர்வில் துயரத்தின் பிடியில் துவண்டு போய் கேட்டாள்.

''உடம்புக்குச் சுகமில்லைனு ஊருக்குத் திரும்பிடணும் சில நாட்கள் நீ இதைப் பற்றி வீட்டிலே யாரிடமும் மூச்சு விடக் கூடாது. ஏதாவது பேசினியோ நான் எப்பேர்ப்பட்டவன்னு கண்டு கொள்வே.''

வீடு திரும்பிய மருமகள் பேயறைந்தவள் போலிருந்ததைக் கண்டு காமாக்ஷி திகைத்துப் போனாள்.

பலமுறை கேட்டுப் பார்த்தாள். அனிதா மௌனமாக இருந்தாள்.

பெரியவர்களாகப் பார்த்துச் செய்து வைத்தது அவள் கல்யாணம்.

இரண்டு பக்கத்தாரிடையே பேச்சு வார்த்தையில் ஆரம்பித்து, ஜாதகப் பொருத்தம் சரியென்று திருப்தியடைந்த பின்னர், பெண் பார்க்கும் படலம் தொடங்கி, கல்யாணம்—வரவேற்பு என்று ஊர் கூட்டி அமர்க்களப்படுத்தி விட்டதொரு இணைப்பு.

ரத்ன சுருக்கமாகப் பேசி அவளைத் தன் வாழ்க்கையினின்று வெட்டிவிடப் பார்க்கிறான் பிரபு. வெளியே சொன்னால் தலையை வெட்டி விடுவேன் என்று பயமுறுத்துகிறான். இந்த மாதிரி சமயங்களில் ஒரு பெண்

என்ன செய்ய வேண்டும்? மௌனம்...மௌனம். அது தான் இந்தப் பிரச்சனையின் தீர்வு.

புக்ககம் வந்து இரண்டு மாதங்கள் அவள் பூந்தமல்லி பங்களாவில் பெரிய மனிதர் வீட்டு மருமகளாக மேனியில் பட்டும் வைரமும் மின்ன, நெஞ்சில் துயரம் நெருப்பாக எரிய போலியாக வாழ்ந்து பார்த்தாள். ஊஹும்...முடியாத காரியமாக இருந்தது.

அவள் கொண்டு வந்து வைத்த பால் டம்ளரைக்கூட கையால் தொடக் கூசுகிறவன் போல பிரபு மிகவும் அசட்டையாக நடந்து கொண்டான். படுக்கையறைக் கதவைத் திறந்து கொண்டு மெள்ள எட்டிப் பார்ப்பாள்: கட்டிலிலிருந்து குரட்டை சப்தம் கேட்ட பின்னர், தான் உள்ளே வந்து தரையில் விரித்துக் கிடக்கும் ஜமக்காளத்தின் மீது ஒரு ஓரமாகச் சுருண்டு கொள்வாள். காலை அவன் எழு முன் ஓசைப்படாது கதவைத் திறந்து கொண்டு கீழே இறங்கிச் சென்று விடுவாள்.

இந்த நாடகத்தை எத்தனை நாட்களுக்குத் தொடர முடியும்? ஒரு நாள் காலை சமையலறையில் தனியாக வேலையைக் கவனித்துக் கொண்டிருந்தபோது மாமியார் சாதரணமானதொரு கேள்வியைத்தான் கேட்டாள்.

'ராத்திரி முழுவதும் பிரபு வீட்டுக்கே வரலை. விடியற்காலைதான் அவன் கார்ல வந்த சத்தம் கேட்டது. காரணம் ஏதாச்சும் சொன்னானா.''

தாங்க முடியாத துயரத்தில் திடீரென்று வாய் விட்டு விக்கி விக்கி அழ ஆரம்பிக்க—மருமகளை ஓடி வந்து அணைத்துக் கொண்டாள் பதட்டத்துடன்.

'என்ன? ஏது?...' என்று அவள் பரபரக்க—பூஜையறையை நோக்கிப் போய்க் கொண்டிருந்த வேதகிரி ஓடி வர, அடக்கி வைத்திருந்த அத்தனையையும், அனிதா கொட்டி அழுது விட்டாள். அன்று அந்த வீடு பட்ட



அமர்க்களம்—அத்துடன் அவளது புக்கக வாழ்க்கையும் அஸ்தமித்துப்போனது. பெற்றோர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கப் பொறுமையில்லாது வெடித்தெழுந்த பிரபு—உடனே மனைவியைத் தாயின் துணையுடன் பிறந்த வீட்டுக்கு அனுப்பி வைத்துவிட்டான்.

அண்ணன் வீடும் அன்று இரண்டுபட்டது. சம்பந்தியம்மாள் சொன்ன சமாதானங்களைச் சுந்தரம் ஏற்க மறுத்தான்.

''கொஞ்ச நாள் பிரிஞ்சு இருந்தா உங்க மகனுக்குப் புத்தி வரும்னா சொல்றீங்க? நிரந்தரமா பிரிஞ்சுட்டாலும் எங்களுக்கு அக்கறையில்லை. என் தங்கையை நான் எத்தனை செல்லமாகச் சீராட்டி வளர்த்தேன்னு உங்களுக்கு என்ன தெரியும்? கிளியை வளர்த்துப் பூனைகையில் கொடுத்த கதையாயிடுச்சே?'' சுந்தரம் சீறினான்.

ஆறுமாத காலம் ஓடிச் சென்றது. இரு தரப்பிலும் பயங்கர மௌனம். விட்டேனா பார் இவங்களைப் பிடிச்சுக் காட்டிலே கொண்டு சேர்க்கிறேன் என்று சுந்தரம் கருவிக் கொண்டிருக்கையில், ஒருநாள் காலை அவர்கள் வீட்டு வாயிலில் பிரபுவின் கார் வந்து நின்றது.

'மென்று விடுவேன், தின்று விடுவேன்— என்று குதித்த அண்ணன், வலிய தன் வீடு தேடி வந்த மாப்பிள்ளையைக் கண்டு வாயிழந்து போனார். அண்ணி கமலா அண்ணனுக்கு ஜாடை செய்தாள். ''என்னத்துக்கு வந்திருக்கிறார்னு தெரிஞ்சிக்காம கோபமா பேசி ஏதாவது கோளாறு பண்ணிடாதீங்க'' அடிக்குரலில் அதட்டினாள்.

தொண்டையைச் செருமிக்கொண்டார் அண்ணா. பாசமும் நேசமுமாகப் பழகிய மாப்பிள்ளையைப் பரிவோடு விசாரிப்பது போல போலியான குழைவுடன், ''காரை நீங்களே ஓட்டிக்கிட்டு வந்தீங்களா. ரொம்ப களைச்சுப் போயிருப்பீங்க-தாகத்துக்கு கூடா என்ன சாப்பிடறீங்க?'' உபசரித்தார்.

''அனிதாவைக் கூட்டிக்கிட்டு வெளியிலே போய் வர விரும்பறேன். நீங்க உத்தரவு கொடுத்தா...'' மாப்பிள்ளை பிரபு பணிவுடன் கேட்டான்.

அண்ணி உள்ளேயிருந்தபடி பலமாகக் கையை ஆட்டினாள். தனக்கேற்பட்ட மகிழ்ச்சியை ஒருங்கே வெளிப்படுத்திக் கொள்ள விரும்பாது அண்ணா லேசாகச் சிரித்தார்.

''அனிதா உங்க மனைவி... அவளை அழைச்சிட்டுப் போக என் உத்தரவு எதுக்கு?''

''உங்க பாதுகாப்பிலே இருக்கிறதனாலே—'' பிரபுவும் மிகவும் குழைவாகப் பேசினான்.

உள் அறையில் தலையை வாரி முடித்துக் கொண்டிருந்த அனிதாவின் நெஞ்சு, மகிழ்ச்சி கலந்த வியப்பிலே 'திக்திக்'கென்று அடித்து கொண்டது. அவள் கணவன் பிரபு ஒரேயடியாக மாறிவிட்டிருக்கிறானே? நீலவண்ணச் சேலையை எடுத்துக் கட்டிக் கொண்டாள். கொண்டையைச் சுற்றிக் கதம்பச் சரத்தைச் சூடிக்கொண்டாள். லேசான ஒப்பனையுடன்-நெற்றியில் பளிச்சிட்ட குங்குமமுமாக, மதுரை மீனாட்சி தெய்வத்தை மனத்திற்குள்ளே வேண்டிக் கொண்டவளாக அவனுடன் காரில் புறப்பட்டாள்.

''கண்ணாடியை மேலே இழுத்து விடவா? காற்றிலே தலைமுடியெல்லாம் முகத்திலே பறக்குது...'' சிரித்தான் பிரபு சகஜமான குரலில். அனிதாவுக்கு ஆனந்தம் தாங்க முடியவில்லை. முதல் சந்திப்பில் முள்ளாக அவள் காதுகளை அவனது கொடுமையான வார்த்தைகள் குத்திக் குதறின. இப்போது? பட்டுபோல் மிருதுவாக அவைகளைத்தழுவி—உணர்வுகளுடன் ஒன்றி அவளது ரத்தத்திலே கலந்து கொண்டு நெஞ்சிலே தேனாக இனிக்கின்றனவே?



''ரசிகா ஹோட்டலில் நான் தங்கியிருக்கிறேன்: அங்கே வர உனக்கு ஆக்ஷேபனை இல்லையே?''

'நான் உங்கள் மனைவி—நீங்கள் இருக்குமிடத்துக்கு வர ஆக்ஷேபனை என்ன? வெட்கம் என்ன—அது என் உரிமையாச்சே'—சொல்ல நினைத்தாள். பேசமுடியாது மென்மையாக புன்னகைத்துத் தலையை அசைத்தாள்.

ஹோட்டல் லிஃப்ட்டில் ஏறி மூன்றாவது தளத்திலிருந்த திறந்த மாடியை அடைந்தனர்.

''திறந்த மனதுடன் பேசத்தான் உன்னை இங்கே கூட்டி வந்திருக்கிறேன்''. சிரித்துக் கொண்டே அவன் விரைந்து வந்த ஹோட்டல் பையனிடம் தங்களுக்கு வேண்டியதை வேகமாகக்கொண்டு வரச்சொன்னான்.

பாதம் ஹல்வா—மசாலா தோசை சூடான காப்பி இத்யாதிகளை வானவில் வண்ணக் குடைவிரிப்பின் கீழ் வட்ட மேஜை மீது வைத்து விட்டுப் பையன் மாயமானான்.

ஹல்வா கிண்ணத்தை எடுத்து அவளிடம் நீட்டினான் பிரபு. ''உம் சாப்பிடு. நமது சந்திப்பின் முடிவு இனிமையாக இருக்கட்டும்'' சன்னமாகச் சிரித்தான்.

அவள் என்னென்னவோ எண்ணிக் கொண்டாள். லக்னோ குர்த்தாவும் பட்டுக்கரை வேஷ்டியுமாக அவள் கணவன் பிரபு பார்க்க லக்ஷணமானவன்தான் இன்று அவள் கண்களுக்கு மன்மதனைப் போல ரொம்ப அழகாகவே தெரிந்தான். அவனது அன்பான வார்த்தைகள் ஹல்வாவைவிட இனித்தன.

ஸ்பூனால் அள்ளி அதை வாயில் போட்டுக்கொண்டு விரைவில் விழுங்கினாள். தாயே மீனாட்சி! எனக்கு இப்படிப் பட்டதொரு நல்ல கணவரைக் கொடுத்திருக்கிறியே அம்மா—உன்பாத கமலங்களில் என் தலையை வைத்துப் பன்முறை வணங்குகிறேன் தாயே!... இவர் ரொம்பவும் மாறிவிட்டிருக்கிறார் எல்லாம் உன் கருணை

தான் என்று எண்ணியபடி தூரத்தில் தெரிந்த் அன்னை மீனாட்சியின் ஆலயத்தைப் பார்த்தபடி தன்னுள் வணங்கிக் கொண்டாள்.

வெய்யில் தெரியாது வண்ணக்குடை நிழல் பரப்ப காற்று ஜில்லென்றுவீச, யாருடைய குறுக்கீடும் இல்லாத தனிமையில் அவர்கள் இருவரும் இருந்தனர். ஒருவழியாக சாப்பிட்டு முடித்ததும் கையைக் கழுவிக் கொண்டு வந்து உட்கார்ந்தனர்.

"மசாலா தோசை ரொம்ப காரமா?" அவள் கண்களில் உணர்ச்சி தாளாது நீர் நிறைந்த டம்ளரை அவளிடம் எடுத்து நீட்டினான்.

அவள் மேல் அவனுக்குத்தான் எத்தனை பரிவு?—பூரித்துப் போய் விட்டாள் அனிதா. கண்கள் பளபளக்க உள்ளம் மகிழ்ச்சியில் திளைக்க அவனை அன்போடு, ஆசையோடு, பரிவோடு ஒரு நல்ல மனைவியின் எல்லாவித எதிர்பார்ப்புகள் நிறைந்த நல்ல உணர்வுகளோடு நிமிர்ந்துப் பார்த்து மெல்லியதாகச் சிரித்தாள்.

"கண்களைத் துடைச்சுக்கோ." தன் பையிலிருந்த கைகுட்டையை அவளிடம் எடுத்து கொடுத்தான்.

மகிழ்ச்சியும் நன்றியுமாக அதைப் பெற்றுக்கொண்ட அனிதா தன் கண்களை மெல்ல துடைத்துக்கொண்டாள். அவன் உபயோகித்திருந்த ஷேவிங் லோஷனின் மணத்தை லேசாக வீசிய கைக்குட்டை முகத்தில் பட்டபோது அவன் கன்னத்துடன் கன்னம் வைத்துக் காதல் மொழி பேசும் சுகானுபவத்திலே மெய் சிலிர்த்துப் போனாள்.

இத்தனை கொள்ளை இன்ப எதிர் பார்ப்புகளைத் தன்னுள் அடக்கிக்கொண்டு அவளுக்காக அன்று பொழுது விடிந்திருக்கிறதோ?...

பையன் தட்டுகளை வந்து எடுத்துப் போனான்.



"பீடா வேணுமா?" கனிவுடன் கேட்டான் பிரபு.

'வேண்டாம்' என்று அவள் தலையை ஆட்டினாள்.

"இனி மேலே நான் பேசலாம்னு நினைக்கிறேன்"—தொண்டையைச் செருமிக் கொண்டான். அவள் நெஞ்சு வேகமாக அடித்துக் கொண்டது. 'நடந்ததையெல்லாம் மறந்துட்டு உடனடியா உன் சாமான்களைக் கட்டிக் கொண்டு என்னோட இப்பவே புறப்படு' என்று கணவர் கேட்டால் அவளுக்கு கசக்கவா போகிறது?

பிறந்த வீட்டில் அவளுக்கு அண்ணன் அதிகம் நகைகள் போடவில்லை. திரும்பி வந்தபொழுது ஏற்பட்ட கசப்பிலே தன் தன் மேலிருந்த இரண்டொரு நகைகளையும் கழற்றி அவள் அண்ணியிடம் கொடுத்து விட்டிருந்தாள். கல்யாணத்தின்போது புக்ககத்தார் போட்ட அத்தனை நகைகளையும் மாமியார் வசம் விட்டு வந்திருந்தாள்.

இப்போது பிரபு அவளைக் கூப்பிட்டால் கட்டிய புடவையுடன் காதில் அணிந்திருக்கும் முத்துத் தோடுடன் கழுத்தில் தொங்கும் தாலிக் கயிற்றுடன் கிளம்பத்தயார். மாற்றுப்புடவைகூட அவளுக்குத் தேவையில்லை.

"உன் அண்ணன் வீட்டில் பேசி வீண் குழப்பம் செய்ய விரும்பவில்லை. அதனால்தான் உன்னை இங்கே தனியே கூட்டி வந்து மனம் விட்டுப்பேசத் திட்டமிட்டேன். நீ படிச்ச பெண்—எல்லாத்தையும் புரிஞ்சுக்க முடியும்."

"என்ன சொல்ல இவர் இப்படிச் சுற்றி வளைக்கிறார்?..." அனிதா குழப்பத்துடன் நிமிர்ந்தாள். இது வரை அவளை ஆட்கொண்டிருந்த அந்த ஆனந்தஉணர்வு பஞ்சாகப் பறந்தோடிவிட்டது. திடீரென்று விவரிக்க இயலாத ஒரு பயத்தில் தன் உடல் நடுங்குவதை உணர்ந்தாள்.

"உன்னிடமிருந்து எனக்கு விவாகரத்து வேணும்—நாமிருவரும்-நண்பர்களாக சண்டை சச்சரவின்றி-மனம்

ஒப்பி சட்ட பூர்வமாக இந்தக் கல்யாணத்திலிருந்து விடுதலையடையணும். அதனாலே நீ ஒத்துழைக்கணும்னு கேட்கத்தான் இப்படித் தனியே அழைச்சிட்டு வந்தேன். ஒரு வருஷ காலம் பிரிஞ்சிருந்த பிறகு நாமிருவரும் ஒத்துப் போனால் விவாகரத்து சிக்கல் இல்லாமல் கிடைச்சிடும். எனக்காக ஹரிணி, பாவம் எத்தனை நாள் காத்திருப் பாள்?''

தன்னைச்சுற்றியுள்ள அனைத்தும் 'கிர்' என்று சுழலு வதைப் போன்றதொரு மயக்கம் ஏற்பட அவள் மேஜை யின் நுனியை இறுக்கவே பற்றிக் கொண்டாள். நெஞ்சு பிளந்துவிடும் போல துடித்தது. கண் இமைகளை மீறிக் கொண்டு கண்ணீர் பொங்கிப் புரண்டது.

இத்தனை நேரம் இவளிடம் பிரபு காட்டிய பரிவெல் லாம் வெறும் வேஷமா? விவாகரத்துக்கு ஒப்புதல் வாங்க ஆடிய நாடகமா?

''அண்ணா, ஓடி வாங்கோ...இவர் என்ன சொல்றார் கேளுங்க—'' ஓங்கி குரல் கொடுத்து அலற வேண்டும் போன்றதொரு அழுகை கலந்து ஆத்திரம் நெஞ்சை அடைக்க அவள் திக் பிரமையுடன் உட்கார்ந்திருந்தாள்.

''நான் கேட்கிறேன் பதில் சொல்லாட்டா?'' —அதட் டினான் பிரபு.

அடி வயிற்றினின்று பிறீட்டுப் புறப்பட்ட விம்மல் களை வேகமாக விழுங்கிக் கொண்டாள்...

''பெரியவங்க பார்த்து செய்து வச்ச கல்யாணம்... அதனாலே விவாகரத்தைப் பத்தி தீர்மானிக்க வேண்டிய வங்களும் அவங்களே...''

''வாட்ட சாட்டமா பீமனாட்டம் நிக்கற உன் அண்ணனைக் கண்டு நான் அரண்டு போயிடுவேன்னு உன் நினைப்பா? விவாகரத்துக் கொடுக்க மறுத்துட்டா



உன்னைக் கூட்டிக்கிட்டு போய் வச்சிக்கிட்டு வாழ னவா?''

சந்திப்பின் இனிமையான, முடிவா இது?— பெரிய இடி...அவள் வாழ்விலே விழுந்துவிட்ட பேரிடி!

பொல பொலவென்று கண்ணீர் கன்னங்களில் வழிய அவள் மௌனமாகத் தரையைப் பார்த்தபடி மெல்ல அழுதாள்.

''பிடிக்கலைன்னா ஏன் அழணும்? விவாகரத்து வாங்கிக்கோ. நஷ்ட ஈடு வேணுமானாலும் கொடுத்துட றேன். ஆளை விட்டா போதும்.''

விருக்கென்று அவள் எழுந்திருந்ததைக் கண்டு அவன் கோபத்தில் சீறினான். ''அழுது கொண்டே தெருவில் ஓடி என்னை அவமானப் படுத்த வேண்டாம். இந்தக் காட் சியை யாராவது நிருபர் பார்த்து விட்டால் என் பெயர் நாளைக்குப் பேப்பரில் சந்தி சிரிக்கும். கண்களைத் துடைச்சுக் கொண்டு புறப்படு. உங்கண்ணன் வீட்டில் விட்டுட்டு நான் போயிடறேன்—ஒன்று மட்டும் நிச்சயம். உன்னை நான் கடைசியா பார்க்கிறது இன்றுதான். நினை விருக்கட்டும்.''

என்னென்னவோ கேட்க வேண்டுமென்று அவள் மனம் கோபத்தில், துயரத்தில் கொந்தளித்தது.

அரக்கத்தனமாகப் பேசும் பிரபுவிடம் அவள் மனம் கோபத்தில், துயரத்தில் கொந்தளித்தது.

அரக்கத்தனமாகப் பேசும் பிரபுவிடம் அவள் கெஞ் சியோ—புலம்பியோ கோபப்பட்டோ பயன் இருக்கப் போவதில்லை.

புடவைத் தலைப்பால் கண் இமை ஓரங்களை மெல்ல துடைத்துக் கொண்டு படிகளில் தாவி இறங்கி காரில் ஏறி உட்கார்ந்தாள்.

''என்னம்மா, மாப்பிள்ளை என்ன சொன்னார்?'' கேட்ட அண்ணனைக் கண்டதும் அடக்கமாட்டாது அவள் ஓவென்று கதறி அழுது விட்டாள்.

விஷயத்தைக் கேள்விப்பட்ட அண்ணன் கோபாவேசத்தில் அன்று குதித்த குதி-கூச்சலிட்டுக் கத்தியவர்—அவளது நெற்றிக் கூந்தலை ஒதுக்கிவிட்டு-கண்ணீரைத் துடைத்துவிட்டு ஆறுதல் சொன்னவர் நாளடைவிலே மிகவும் மாறிப் போனார்.

தொடர்ந்து அண்ணனுடன் அவள் வாழ்ந்த அந்த ஓராண்டுக் காலத்தில் பிரபு சொத்துக்களை நாசம்செய்து பெற்றவளை இழந்து, தந்தையின் விரோதத்தை சம்பாதித்துக் கொண்டு, தன்னந்தனியே ஹோட்டல் அறையே கதியென்ற நிலைக்கு வந்து விட்டும், இன்னமும் தமது சினிமா டைரக்ஷன் திறமையில் நம்பிக்கையைத் துறக்கவில்லை அந்த ஹரிணியை மறக்கவும் இல்லை.

தலையணை முழுவதும் கண்ணீரால் நனைந்து போனதை உணர்ந்து திடுக்கிட்டு எழுந்தாள். கூடத்தில் வேதகிரி பலமாக இருமத் தொடங்கினார். முந்தானையால் முகத்தைத் துடைத்துக் கொண்டு அவிழ்ந்து கிடந்த கூந்தலை அள்ளி முடித்துக் கொண்டு எழுந்தாள்.

''மாமா! கொஞ்சம் இருமல் மருந்து தரவா?—'' கேட்டபடியே வெளியே வந்தாள். மெலிதாக எரிந்த விடிவிளக்கின் ஒளியில் வேதகிரி உயரமாக அடுக்கி வைக்கப்பட்டிருந்த தலையணைகள் மீது சாய்ந்தபடி உட்கார்ந்திருப்பது தெரிந்தது. குழல் விளக்கைப் பொருத்திவிட்டுத் திரும்பியவள் திடுக்கிட்டுப் போனாள்.

அவரும் அவளைப் போல் கடந்தவைகளை நினைத்துக்கொண்டு தூங்காது அழுது விட்டிருக்கிறார்.

''மாமா! நீங்க துளிக்கூட தூங்கலைன்னு தெரியுது.'' சொல்லிக் கொண்டு ஸ்பூனில் மருந்தை நிறைத்து அவர் வாயருகே நீட்டினாள். சுள்ளென்று கசந்த மருந்தையும்—நெஞ்சை அழுத்திய நினைவுகளின் கசப்பையும் சேர்த்து விழுங்கினார் வேதகிரி.



''நீ கூடத் தூங்கலைன்னு தெரியும். நீ எத்தனையோ பாடுபட்டும் மெதுவா மூக்கை உறிஞ்சுகிற சத்தம் கேட்டபோது புரிஞ்சுகிட்டேன். அனிதா! கவலைப்படாதேயம்மா! இந்த வீடு நல்லவேளையா என் பேரிலே இருந்ததாலே அவனாலே ஒண்ணும் செய்ய முடியலை. இது நானாக சம்பாதிச்ச சொத்து—இதை யாருக்கு வேணுமானாலும் நான் விட்டுட்டுப் போக உரிமை உண்டு. காமாக்ஷிதான் அவன் நீட்டின காயிதத்திலே கையெழுத்தைப் போட்டு-கேட்டபோது பணத்தையும் நகைகளையும் வாரிக் கொடுத்து ஏமாந்து போனாள்! நான் என் மனத்தைக் கல்லாக்கிக்கிட்டேன். எனக்கு ஏதாச்சும் நேர்ந்தா உன் மாமியார் பிச்சையெடுக்கக் கூடாதுன்னு இந்த வீட்டைக் கெட்டியா பிடிச்சு வச்சிக்கிட்டிருந்தேன். ஆனால் அவன் என்னைப் பிச்சையெடுக்க வச்சுட்டு நிம்மதியா போயிட்டா. உன் மாமியார் போன பிறகு திடீர்னு எனக்கு ஒருநாள் மயக்கம் வந்தது. சரி நமக்கு ஏதாச்சும் நேர்ந்தா அந்தப் பொண்ணு என்ன செய்யும்னு.... எனக்குப்பின் இந்த வீடும் பாங்கிலிருக்கும் கொஞ்ச தொகையும் என் மனைவிக்கு நான் செய்து போட்ட எட்டுப் பவுன் சங்கிலி—வைர மூக்குத்தி இதெல்லாம் உன்னைச் சேரணும்னு எழுதி வச்சிட்டேன். பங்களா இதிலுள்ள சகல சாமான்களையும் வித்த பாவிப்பயல் உன் கூறைப் புடைவையைத் தூக்கி தன் காதலிக்குக் கொடுத்துட்டான். உன் மாமியாரின் நாலு நல்ல புடவைகளை நான் சட்டுனு எடுத்து என் பீரோவில் மறைச்சு வச்சிருந்தேன். அவை பிழைச்சவை.

''எங்கிட்ட உத்தரவு கேட்க வேண்டாம்— வெளிவாசல்லே போகச்சே நீ அதுகளை எடுத்துத் தாராளமா கட்டிக்கலாம் அம்மா...''!

''இதெல்லாம் பத்தி இப்போ என்ன மாமா?— நான் ஏதாச்சும் கேட்டேனா?'' உணர்ச்சி வசத்தில் அவள் குரல் நடுங்கியது...

''நீ கேட்கலை... நான் ஏதோ என்னால் ஆனதைக் கொடுக்கணும் இல்லையா. உன் அண்ணனை விரோதிச்சுகிட்டு வந்திட்டே... இங்கே—கணவனும் ஆதரவில்லை. அதனாலே உனக்குன்னு ஒரு கையகல இடம் வேணும். கூழாவது காய்ச்சிக் குடிக்க நாலு காசுதேவை இல்லையா எல்லாத்தையும் விட ஒரு முகக்கியமான விஷயம் சொல்ல விரும்பறேன் அம்மா—''

''என்ன மாமா?'' திகைப்புடன் கேட்டாள் அனிதா.

''எதை வேணுமானாலும் ஒரு பெண் இழந்துடலாம். தன்னந்தனியா புயலில் சிக்கிக்கிட்ட கொடி போல் தவிச்சுக்கிட்டு நிக்கலாம்—ஆனால் எந்த ஒரு இக்கட்டிலும் தன் பெண்மையையும் நெஞ்சுத்துணிவையும் ஒரு பெண் இழக்கலே கூடாதம்மா.''

''எனக்கு அந்த வைராக்கியமும், துணிச்சலும் இருக்குன்னு நீங்க நம்புறீங்களா மாமா!''

''நம்பறேன். இந்த வீட்டுக்குள்ளே நீ என்னைத் தேடிக்கிட்டு வந்த நாளே எனக்கு அந்த நம்பிக்கை உதயமாயிட்டுது. அனிதா! உன்னைப்பத்தி நான் ரொம்ப பெருமைப் படறேன். கால் எலும்பு கூடி நான் முன் போல எழுந்து நடந்து உனக்கு உதவியா இருந்துட்டு கண் மூடணும்னு ஆசைப்படறேன்.''

''மாமா...மணி ராத்திரி ஒண்ணாகப் போகிறது... தூங்கப் பாருங்க. மத்தத நாளைக்குப் பேசிக்கலாம்....'' அன்புடன் கடிந்தபடி போர்வையை இழுத்து கழுத்து வரை மூடினாள். குழல் விளக்கை அணைத்து விடி விளக்கை மட்டும் எரிய விட்டுவிட்டு அறைக்குள் வந்து தலையணை மீது சாய்ந்தாள்.

''மாமா! இன்னொன்று எனக்கு மிகவும் முக்கியமாக தேவை- அது உங்களுக்குப் புரிகிறதோ என்னவோ—''

''என் கணவர் பிரபுவின் அன்பு-அதுக்காக நான் எப்படி ஏங்கிப் புலம்பித் தவிக்கிறேன் தெரியுமா மாமா. கன்யாகுமரித் தாயைப்போல கால முச்சூடும் அதுக்காக தான் காத்திருக்கவும் தயார் மாமா!'' சொல்ல வேண்டும் போல் துடித்த உதட்டைக் கடித்துக் கொண்டுதலையணை மீது முகத்தைப் பதித்துக் கொண்டாள்.



உறக்கம் வரவில்லை—உடலைக் குலுக்கிய பெரிய தொரு விம்மல் நெஞ்சிலிருந்து எழுந்து தலையணைக்குள் புதைந்து போயிற்று.

# 3

**நோ**ய்களும் விபத்துகளும் ஏழை—பணக்காரன் என்ற வித்தியாசம் பார்ப்பதில்லை. வசதியற்றவனுக்கு வியாதிகள் வந்துவிட்டால் சில சமயம் ராஜ வைத்தியம் செய்ய வேண்டி வந்து விடுகிறது.

வேதகிரியின் கதையும் அப்படியாகி விட்டிருந்தது. ஆறு வாரங்களுக்குப் பின்னர் வைத்தியர் குறிப்பிட்டிருந்த படி ஒரு நாள் மாலை வேலையினின்று திரும்பி வந்த அலுப்பைப் பாராட்டாது மாமனாரை ஒரு ஆட்டோவில் ஏற்றி டாக்டரின் கிளினிக்குக்கு அனிதா அழைத்துச் சென்றாள்.

கட்டவிழ்க்கப்பட்டது. எலும்பு கூடி விட்டது என்பதை எக்ஸ்ரே எடுத்துப் பார்த்து திருப்தி தெரிவித்தார் டாக்டர். ஆனால் எழுந்து நடமாட இன்னும்சில சிகிச்சை முறைகள் தேவைப்பட்டன என்பதை விளக்கினார். ஒரு காகிதத்தில் மருந்து இத்தியாதிகளை வரிசையாக மளிகை சாமான் ஜாபிதா போல எழுதிக் கொடுத்து விட்டார்.

''எலும்பு முறிந்த காலில் தெம்பு ஏற்பட்டு முன் போல நன்றாக நடக்கப் பழக்கம் செய்து கொள்ள வேண்டும்'' என்று வைத்தியர் கூறிய ஆலோசனைப்படி பிரம்பினால் ஆன குழந்தையின் நடை வண்டி போன்ற ஒரு சாதனத்தை மாமனாருக்கு வாங்கித் தந்தாள். அவளது சம்பளத்தின் ஒரு பகுதியை அதன் விலை சாப்-

பிட்டு விட்டது. அந்தப் பிரம்பு நடை வண்டியைக்கையில் பிடித்துக்கொண்டு காலையும் மாலையும் வேதகிரி வீட்டுக்குள்ளேயே மெல்ல நடைபழகிக் கொள்ள வேண்டியிருந்தது. அதற்குமேல் வாரத்திற்கு இருமுறை நர்ஸை வரவழைத்து 'பிஸியோ திராபி' என்னும் சிகிச்சை தர வேண்டியிருந்தது. காலில் ஏற்பட்டிருந்த வீக்கமும் வலியும் குறைய 'வாக்ஸ் திராபி' எனும் சிகிச்சை முறைக்கு மாமனாரை அந்த வைத்தியரின் கிளினிக்குக்கு அடிக்கடி அவள் அழைத்துச் செல்ல வேண்டி வந்தது. இப்படி எலும்பு முறிவுக்கு ராஜ உபசாரம் பிடிக்குப் பிடி நமச்சிவாயம் என்று எதற்கெடுத்தாலும் பணம் தண்ணீராகக் கரைந்தது. நேற்று நடந்தது போலிருந்தது அந்த விபத்து அவர் படுத்துக் கிடந்த நிலையிலிருந்து எழுந்து ஒரு கம்பை ஊன்றிக் கொண்டு மெல்ல வீட்டுச் சுவரை ஆதாரமாகப் பிடித்துக் கொண்டு வளைய வருவதற்குள் மாதங்கள் பல ஓடி மறைந்து விட்டன.

எக்ஸ்ரே—மருந்து—டாக்டர்—நர்ஸ் என்று செலவு ஏகமாகத் தொடர்ந்தது. எப்படியாவது மாமனார் கால் குணமாகி எழுந்து நடமாடினால் போதும் என்ற தவிப்பு அவளுக்கு அதனால் ஏற்பட்ட பணச் செலவை அவள் பாராட்டவேயில்லை.

அவளது சம்பளம் சாப்பாடுச் செலவிற்கும், போக்குவரத்தின் செலவிற்கும் மட்டுமே போதியதாக இருந்தது. மாமனார் தாம் வாக்களித்தபடி தமது வங்கி கணக்கிலிருந்து ஏழாயிரம் ரூபாய்களை அவள் பெயருக்கு ஒரு காசோலை எழுதித் தந்திருந்தார். அந்தப் பணத்தை அவள் தான் வருங்கால பாதுகாப்புக்காகப் பத்திரப்படுத்தவில்லை. அவரது வைத்தியச் செலவிற்குத் தாராளமாக எடுத்து உபயோகித்தாள்.

''என்னம்மா இப்படிக் காசைக் கறியாக்கிறியே'' வேதகிரி கோபித்துக் கொண்டால் அவள் மெல்லியதாக பதிலுக்குச் சிரிப்பாள்.



''மாமா, காசு போகும்-வரும். அதை எளிதில் சம்பாதித்துக் கொள்ள முடியும். அப்பாவுக்கும் மேல் என் மேல் அன்பும் பரிவும் காட்டும் உங்களைப் போல ஒரு நல்ல மாமனாரை நான் எந்தக் கடையில் வாங்க முடியும் சொல்லுங்கோ...'' அவள் குழந்தையைப் போலக் கேட்கும் போது வேதகிரியின் நெஞ்சை வேதனை இறுக்கிக் கொள்ளும். 'ஆண்டவா' எனக்கு வாழணும்னு ஆசையில்லை. ஆனால் இந்தப் பெண்ணுக்குப் பாதுகாப்பாக கொஞ்சகாலம் வாழ அருள் செய்யப்பா. எழுந்து நடமாட எனக்குத் தெம்பு கொடு. வேறொன்றும் வேண்டாம்'' கடவுளை மனமுருகப் பல முறை வேண்டிக் கொள்வார்.

காலையில் எழுந்து— அவசரமாகக் காரியங்களைக் கவனித்துவிட்டு அலுவலகம் ஓடுவதும்-மாலையில் திரும்பி வருவதும்—யுகம் யுகமாகச் செய்து வந்த ஒரு காரியம் போல அவளுக்கு விரைவில் பழக்கமாகிவிட்டது. நாட்கள் நகர்ந்து மாதங்கள் பல சென்றன

அன்று மாலை அவள் அலுவலகத்திலிருந்து வந்து கொண்டிருந்தாள். நாள் முழுவதும் உழைத்து விட்டு கூட்டத்தில் பஸ்ஸில் இடம்பிடித்து, அலைமோதிக் கொண்டு இரவு சமையலைப் பற்றி நினைத்து அவசரப்பட்டவளாகத் துரிதமாக நடந்து வந்து கொண்டிருந்தாள் அவளை வரவேற்க வந்த மாமனார் வேதகிரி புன்னகையில் மலர்ந்த முகத்துடன் நிற்பதைக் கண்டு வியப்பில் அதிர்ந்து போனாள்.

''மாமா! நீங்க நிசமா எழுந்து நல்லா நடக்கறீங்களா...? நம்ப முடியலையே— பகவதி அம்மனுக்குக் கால் வாங்கிப் போடறேன்னு வேண்டிக்கிட்டது வீணாகலை மாமா ?''—தெருவில் நின்றபடியே கட்டுக் கொள்ளாத மகிழ்ச்சியால் கூக்குரலிட்டாள்

''நீ மட்டும் இல்லாட்டா... நான் போன இடம் புல் முளைச்சுப் போய் விடும். எந்த வேளையில் நீ இந்த வீட்டில் காலை வச்சியோ, என் உடைஞ்ச எலும்பு நல்லா

கூடித் தெம்பு வந்து. இப்ப ஊன்றுகோல் இல்லாமலே நடக்க வந்துடுச்சு. ஒரு வாரமா நான் வீட்டுக்குள்ளே நடந்து பரீட்சை பண்ணிப் பார்த்தேன். இன்னிக்கு உன்னை ஆச்சரியப்படுத்த நினைச்சு வாசலில் மெள்ள நடந்து வந்து காத்துக்கிட்டு நிக்கிறேன்...''

''ஊன்றுகோல் இல்லாமலேயே நடக்கிறீர்களே—ரொம்ப அதிசயமா இருக்கு மாமா'' ஆர்ப்பரித்தபடி அனிதா உள்ளே வந்தாள்.

பின்னால் மெல்லக் காலைத் தூக்கியபடி நடந்து வந்த வேதகிரி சிரித்தார். ''நீதான் என் ஊன்றுகோல். நீ கொடுத்த தெம்பு, தைரியம், உனது கவனிப்பு எல்லாம் என்னை விரைவா குணப்படுத்திடுச்சு. இனிமேலே உனக்கு நான் பாரமா இருக்க மாட்டேன். என்னாலே எவ்வளவு உதவி செய்ய முடியுங்கிறதை நிரூபிக்க இன்னிக்கு ஒரு வேலை செஞ்சிருக்கேன். உள்ளே போய்ப் பார்'' உற்சாகமாகப் பேசினார்.

தோள் பையை மேஜை மீது போட்டுவிட்டுக் குளியலறைக்குள் ஓடி அவசரமாகக் குளியலை முடித்துக் கொண்டு உடை மாற்றிக் கொண்டு வந்தாள். பூஜை விளக்கை ஏத்தி விட்டுக் குங்குமச் சிமிழில் விரலைத் தொட்டு நெற்றியில் பெரிதாக ஒரு பொட்டை வைத்துக் கொண்டாள். கூந்தலை அவசரமாக வாரி முடிந்துக் கொண்டு சமையலறைக்குள் புகுந்து விளக்கைப் போட்டாள்.

''மாமா! என்ன இது?'' வியப்பு மேலிட உரக்கவே கூவி விட்டாள்.

''நீ வரத்துக்கு முன்னால் நானே துணிப் பையை எடுத்துக்கிட்டு... தெரு மூலையிலிருக்கும் கடை வரை நடந்து போய்ட்டு வந்தேன். 'பச்சு பச்சுனு' காய்கள் வச்சுக்கிட்டிருந்தான். உனக்குப் பிடிக்குமேன்னு இரண்டு முருங்கைக் காய்களும் கால் கிலோ கத்தரிக்காயும் வாங்கினேன் கொஞ்சம் கொத்துமல்லி, பச்சைமிளகாய் இத்யாதியும் வாங்கிக்கிட்டேன். இத்தனை நாள் சலிக்காம என்னைக் கவனிச்சுக் கொண்டிருந்தியே அதுக்கு நன்றி தெரிவிக்கிறாப்பல இன்னிக்கு ஒரு காரியம் செய்யணும்னு மனத்தில் ஒரு விளையாட்டு எண்ணம் தோணிச்சு.''



''மாமா ரொம்ப நல்லாவே விளையாடியிருக்கீங்க...'' சிரித்தபடி மேடை மீது சமைத்து மூடப்பட்டிருந்த பாத்திரங்களை ஒவ்வொன்றாகத் திறந்து ஆராய்ந்தாள்.

''பல மாதமா படுத்துக் கிடந்ததிலே அரிசி பருப்பு எங்கே இருக்குனுகூட தெரியலை. எல்லா டப்பாக்களையும் இறக்கி வைச்சுத் தேடினேன் கிடைச்சுது. சாதம் வடிச்சு முருங்கைக்காய் பருப்பு சாம்பார் வச்சு-கத்தரிப் பிஞ்சுகளைப் புரட்டல் செய்து வச்சிருக்கேன். நீ காலையில் வச்சுட்டுப்போன ரசம் மீதி அப்படியே இருக்கு அவை ராத்திரிக்கு உபயோகிக்கலாம்னு-ரசம் ஒண்ணு மட்டு வைக்கலை...''

''மாமா ரொம்பவே அதிகம் செய்துட்டிருக்கீங்க. அடுப்பங்கரை வேலையெல்லாம் உங்களுக்கு எதுக்கு மாமா?'' அன்போடு கடிந்து கொண்டாள்.

''ரொம்ப பசியா இருப்பே-பிளாஸ்க்கிலே காப்பி போட்டு ஊத்தி வச்சிருக்கேன்-முதல்லே அதைச் சாப்பிட்டுட்டு பிறகு மதத்தைக் கவனி'' உபசரித்தார்.

''இதெல்லாம் நீங்க செய்யவேண்டியது அவசியமா?'' குழைவாகக் கேட்டபடி நெஞ்சம் நெகிழ்ந்து போய்... இரு டம்ளர்களில் காப்பியைப் பகிர்ந்து ஊற்றி ஒன்றை எடுத்து வந்து அவரிடம் நீட்டினாள். ''நீங்களும் சாப்பிடுங்க. அப்பதான் என் மனம் சமாதானமடையும்...'' என்றாள். வீட்டிலே நிழலோடு இருந்து குடும்பத்தைக் கவனிக்க வேண்டிய நீ ஆபிசிற்குப் போய் உடல் ஓய உழைச்சுட்டு ஓடி வர...வீட்டோட கிடக்கிற நான் கொஞ்சம் வீட்டைக் கவனிச்சா என்னம்மா தவறு? உன்

மாமியார் உடம்புக்கு முடியாம படுத்துக்கிட்டப்போ நான்தான் சமையலைக் கவனிச்சேன். ஆள்படை வச்சுக்கிற அந்தஸ்தெல்லாம் போய் அன்றாடம் காய்ச்சியாகி விட்ட நிலையில் கௌரவம் என்ன வச்சிருக்கு! அத்தோட நோயாளியையும் பார்த்துக்கிட்டேன். வேறு வழியில்லாத சூழ்நிலை மாறும்போது ஆணும் பெண்ணும் அவரவரால் செய்ய முடிஞ்ச வேலையைச் செய்வதில் என்னம்மா தப்பு? எந்த வேலையும் இழிவானதல்ல என்கிற மனப்பான்மை வேணும். பெண் வீட்டை விட்டு வேலைக்குப் போய் சம்பாதிச்சுட்டு வரலாம். ஆண் அவளுக்கு உதவியா சமையல் வேலையைக் கவனிச்சா அவனது கௌரவம் நாசமாகி விடுமா? நல்லா யோசிச்சுப் பார். நீ இங்கே வந்ததுக்கு முந்தி உன் மாமியார் போன பிறகு நான் தனியா இந்த வீட்டிலே வாழ்ந்துகிட்டிருந்தப்போ, நானேதானே என் சோற்றைப் பொங்கிக்கிட்டேன். நான் சாப்பிடப்போறதை நாமே சமைச்சுக்கிறதிலே என்ன தவறு?''

''மாமா! அதுக்குச் சொல்லலை—உங்களுக்கு வயசாயிடுச்சு. ஓய்வாக இருக்கணும். நீங்க எனக்குப் பாதுகாப்பா—ஒரு துணையா இருந்தா போதும். வீட்டுவேலை என்னுடையது. அதை என்கிட்டேயே விட்டுடுங்க' பணிவாக கேட்டுக் கொண்டாள்.

''ஒருவேளை என் சமையல் நல்லா இருக்காதுன்னு பயப்படுறியா?'' பரிகாசமாகக்கேட்ட வேதகிரி சிரித்தார்.

''அதுக்கில்லை மாமா—ஆபீஸ் வேலை என் நாளின் பெரும்பாகத்தை எடுத்துக்கிறது. வீட்டுக்கு வந்ததும் சமையல் வேலை உங்களைக் கவனிக்கிற பொறுப்புன்னு என் எண்ணங்களை நான் திசை திருப்பிக்கொள்வதால் நாளின் பெரும்பகுதி சுமையில்லாமல் கழிஞ்சுபோகிறது. கடந்துபோன கசப்பான சங்கதிகளை நான் வேலை செய்வதில் முழுமனதாக ஈடுபட்டு மறந்துபோக விரும்ப



றேன். அவ்வளவுகான்'' ஈரத்தில் பளபளத்த அவளது விழிகளைப் பார்த்து மனம் கரைந்து போனார் அவர்.

''ஆகட்டும். இன்னிக்கு ஒருநாள் இந்தப் பாயாசத்தை சாப்பிடு. நாளையிலிருந்து உன் வேலைகளுக்கு நடுவே குறுக்கிட மாட்டேன். ஆனால் நானும் ஏதாவது செய்துகிட்டு இருக்கணும்—வெட்டியா பொழுதைக் கழிக்க முடியாதே! கடைகளுக்குப் போய்வர வேண்டிய வேலை வங்கிக்குப் போகிறது—எலக்ட்ரிக் பில் கட்டுவது-வரிசையில் நின்று ரேஷன் சாமான் வாங்கி வரது இதையெல்லாம் என்கிட்ட விட்டுடு. இவைகளுக்காக வேலைக்காரிக்கு நீ அதிகப்படி கொடுக்கிற பணத்தைக் கொஞ்சம் மிச்சப்படுத்திக்கலாம்—சரியா'' என்று வேடிக்கையாகக் கேட்டார்.

சம்மதம் என்பதற்கடையாளமாக தலையை ஆட்டிவிட்டுக் கூடத்தில் தட்டை வைத்து முதலில் அவருக்குச் சாப்பாட்டைப் பரிமாறினாள். அவருக்கு வயது அதிகமாகி விட்டதுபோல-பசி தாங்காத ஒரு தவிப்பும் அதிகமாகி விட்டிருப்பதை அறிவாள். அவர் சாப்பிடத் தொடங்கிய பின்னர் தன் தட்டில் சோற்றையும் குழம்பையும் ஊற்றிக்-கொஞ்சம் பொரியலையும் ஒரு பக்கம் வைத்து எடுத்துக் கொண்டு வந்து கூடத்தில் ஒதுக்குப்புறமாக ஒரு பக்கம் உட்கார்ந்து கொண்டாள்.

வேதகிரிக்கு உண்மையாகவே நன்றாக சமைக்கத் தெரிந்திருந்தது. முருங்கைக்காய் சாம்பார்-உப்பும் காரமும் கூடி வாய்க்கு ருசியாக கம்மென்று மணத்துடன்சுவையாகவே இருந்தது. பிசைந்து மென்ன சாதத்தை உருட்டி வாயில் போட்டுக் கொண்டு ரசித்து விழுங்கினாள். திடீரென்று பிரபுவின் நினைப்பு வந்ததும் அடுத்தபிடியை அள்ளாது தட்டைத் துழாவிக் கொண்டு யோசனையில் மூழ்கிப் போனாள்.

எவ்வளவோ முயன்றும் நாளின் பெரும் பாகத்தை வேலையில் கழித்தும் அவளது நினைவில் பிரபு அடிக்கடி

தோன்றி மறைந்து துன்புறுத்திக் கொண்டுதான் இருந்தான். அவனுடன் மனைவி என்று வாழ்ந்துவிட்ட அந்தக் கொஞ்ச காலத்திலே ஏற்பட்ட அனுபவங்கள் ஒவ்வொன்றாக அடிக்கடி நினைவினின்று உதற முடியாதபடி மனத்தைக் குழப்பி, வேதனையில் ஆழ்த்திக் கொண்டு இருந்தது.

'இதை மட்டும் ஞாபகத்தில் வைத்துக்கொள்-இவைகளை மறந்துவிடு, என்று விட்டு விட்டால் கேட்கக் கூடிய சக்தியா மனம் என்பது. பெரியவர்கள் சும்மாவா சொல்லியிருக்கிறார்கள். மனம் என்பது கிளைக்குக்கிளை தாவும் அமைதியற்ற ஒரு முரட்டுக் குரங்கு' என்று எத்தனை பெரிய உண்மை?

லேசாகச் சிரித்துக் கொண்டு சாதத்தை மேலும் அழுத்திப் பிசைந்தபடி அவள் அந்த நினைவில் அமுங்கிப் போனாள்.

பூந்தமல்லி பங்களாவில் புது மருமகளாகப் புகுந்து அவள் வாழத் தொடங்கிவிட்டிருந்த புதிதில் ஒருநாள் மாலை—மாமனாரும் மாமியாரும் வெளியே போயிருந்த சமயம் அவள் மாடியறையில் கொடியில் காய்ந்து கொண்டிருந்த துணிகளை எடுத்து மடித்து அலமாரியில் அடுக்கும் வேலையில் ஈடுபட்டிருந்தாள். சமையல் ஆள் கோதண்டம் கூட அது சமயம் வெளியே காரியமாகப் போயிருந்தார். பிரபு வீட்டுக்குள் வந்ததை அவள் கவனிக்கவேயில்லை.

சமையலறையிலிருந்து எழுந்த பலத்த சத்தத்தைக் கேட்டு அவள் திகைப்புடன் கீழே இறங்கி ஓடி வந்தாள்.

அங்கே அவள் கண்ட காட்சி?

சமையல் மேடையருகே பிரபு விழித்துக்கொண்டு கோபாவேசமாக நின்று கொண்டிருந்தான்.

அவளைக் கண்டதும் எரித்து விடுகிறவன் போல் நிமிர்ந்து பார்த்தான்.



''தலைவலி மண்டையைப் பிளக்கிறதுன்னு காப்பி சாப்பிட வீட்டுக்கு வந்தால் வீட்டிலே யாரையுமே காணலை. எல்லோரும் எங்கே தொலைஞ்சு போயிட்டாங்க. தண்டத்தடிராயர் கோதண்டங்கூட காத்து வாங்க வெளியிலே போயிட்டார் போல இருக்கு. தோட்டக்காரன் வாசலுக்கு காவலாக இருந்தான். அதுவரை வீடு கொள்ளை போகாம பிழைச்சது'' —படபடவென்று கத்தினான்.

''ஆமாம், காப்பி பில்டரை யார் அப்படி அழுத்தி வைக்கச் சொன்னது. திறக்கப் பார்த்தேன், சனியன் சூடாக இருக்குது. கை தவறி—'' என்று முடிக்காது அவளைச் சூடாக வெறித்தான்.

பில்டரின் அடிப் பாகத்தில் தேங்கியிருந்த டிகாஷன் முழுவதையும் தன் சட்டை வேட்டியில் கொட்டி கறைபடுத்திக்கொண்டு பாத்திரத்தைத் தவற விட்டதன் விளைவுதான் அந்தப் பலத்த சத்தம். தரையில் காப்பி டிகாஷன் தாரையாக ஓட... ஒரு மூலையில் பாத்திரம் உருண்டு கிடந்தது.

''போய் உடனடியா துணியை மாத்திக்கிட்டு வாங்க —அதுக்குள்ள நான் காப்பி போட்டு எடுத்துக் கொண்டு வரேன்'' என்று கூறிவிட்டுத் தன்னுள் பீரிட்டு எழுந்த சிரிப்பை அவள் அடக்கிக் கொண்டாள்.

வேறு உடை அணிந்து கொண்டு மாடியினின்று அவன் இறங்கி வந்தான். சாப்பாட்டறை மேஜை மீது ஆவி பொங்கும் காப்பி தனக்காக மணக்க வீசிக் கொண்டு காத்திருப்பதை கண்டான்.

''என் வேதனை உனக்கு வேடிக்கையாக இருக்காக்கும்? உனக்குள்ளேயே சிரிக்கிறியே'' சீறினான் கோபத்துடன்.

''எல்லாம் தயாராக இருக்கிற ஒரு சமையலறையில் ஒரு டம்ளர் காப்பியைத் தானே கலந்து சாப்பிடக்கூடத்

தெரியாம இப்படி குழந்தைத்தனமா இருக்கீங்களேன்னு நினைச்சேன்'' கொஞ்சம் துணிவோடு பதிலளித்தாள்.

''இது செய்யத் தெரியாத துப்புக் கெட்டான்—காட்சிகள் பலதை எடுத்துக் கலரில் கலந்து சினிமா படமாக வெளியிட முயலுகிறான்னு உனக்கு கேலியாக இருக்கு இல்லையா?''

''அப்படி நான் ஏதும் சொல்லலையே?''

''உன் மூஞ்சி சொல்லுது. உனக்கு ரொம்ப திமிர். எல்லாம் என் அப்பாவும் அம்மாவும் கொடுக்கிற இடம்'' முணுமுணுத்தபடி காப்பியை வேகமாக விழுங்கிவிட்டு அவன் வெளியேறினான்.

வேஷ்டியிலும் சட்டையிலும் காப்பி டிகாஷனை அபிஷேகம் செய்துக்கொண்டு 'திருதிரு'வென்று விழித்தபடி அவன் நின்ற அந்தக் கோலத்தை நினைத்ததுமே அவளுக்கு அன்று நடந்தது போல சிரிப்புப் பொங்கிக் கொண்டு வந்துவிட்டது.

''என்னம்மா ரொம்ப சிரிக்கிறே? எனக்கும் கொஞ்சம் சொல்லேன்'' கிழவர் ஆவலுடன் கேட்டார்.

''பஸ்ஸிலே இடிச்சுப் பூந்துண்டு வந்ததை நினைச்சேன் சிரிக்கிறேன் மாமா. ஒரு கிழவி இடம் தேடும் அவசரத்தில் ஒரு சிறு பெண் மடியில் தொப்பென்று உட்கார்ந்து விட்டாங்க. அந்தப் பெண் போட்ட கூச்சலைக் கேட்டு, நடந்ததை கண்டு பஸ்ஸில் உள்ள அத்தனை பேரும் சிரிச்சுட்டாங்க.''

''கஷ்டங்கள் நிறைய வந்து சூழ்ந்து கொள்ளும் போது சிரிக்கத் தெரிஞ்சு கொண்டா, துன்பத்தில் சுமை லேசாகிப்போயிடும்மா. நீ படிச்ச பொண்ணு—உனக்கு வேறே நான் என்ன அதிகம் சொல்லமுடியும்?'' மெள்ள எழுந்து கை கழுவக் குளியலறைப் பக்கம் சென்றார்.

ஒரு சில தினங்களுக்குப் பின், அவள் வழக்கம்போல் வேலையிலிருந்து வேகமாக வந்தபோது, மீண்டும் அவர் அவளுக்காக சமைத்து வைத்து வாசலில் நின்று காத்திருப்பதைக் கண்டாள்.



''மாமா முன்பே நான் சொல்லியிருந்தும் நீங்க மறுபடியும் என் வேலையில் குறுக்கிடுகிறீங்களே''—குறைப் பட்டுக் கொண்டு அவள் உள்ளே நுழைந்தாள்.

''இன்னிக்கு ஒருமுக்கிய நாள்—அதனாலேதான் நான் உன் வேலையில் குறுக்கிட்டேன். கோவிச்சுக்காதேம்மா''—மெல்ல சொல்லியபடி அவர் பின் தொடர்ந்தார்.

''இன்னிக்கு அப்படி என்ன ஒரு விசேஷம்?'' கேட்டுக் கொண்டே அவள் குளியலறைக்குச் சென்றாள்.

உடுத்திக் கொண்டு விளக்கேற்றி விட்டு அவள் கூடத்திற்கு வந்தபோது அவர் சொன்னார்.

''உன் மாமியார் படத்துக்குக் கொஞ்சம் பூ போட்டுட்டு மீதியை நீயும் தலையில் வச்சுக்கோம்மா.''

''உனக்கு மறந்து போச்சு. ஆனா எனக்கு நல்லா நினைப்பிருக்கு. பொருத்தம் பார்க்க உன் ஜாதகத்தை உன் அண்ணன் கொண்டு வந்து கொடுத்தாரே, அப்பவே மனசிலே நல்லா பதிஞ்சிடுத்து. இன்னிக்கு ஆங்கிலத் தேதிப்படி உன் பிறந்த நாள் அம்மா.''

திக்கென்ற உணர்வில், ஒரு கணம் அயர்ந்து போன அனிதாவின் கண்களில் லேசாக நீர் படிந்தது.

''மாமா! நான் ஏன் பிறந்தேன்னு, அடிக்கடி நினைச்சு வேதனைப்படும் அந்த நாளை மறக்க முயன்றேன்—அதனால் மறந்தே போச்சு'' துயரத்தினால் தடுமாறினாள் அவள்.

''பிரபுவுக்காக, அவனது மனைவியாக வாழ நீ பிறக்கலைன்னாலும் அம்மா அனிதா—இந்தக் கிழவனது கடைசி காலத்திலே பெத்த மகள் போல அன்பு காட்டி ஆதரிக்க ஒரு நல்ல பணியைச் செய்யக்கடவுள் உன்னைப் பிறப்பிச்சார்னு நினைச்சுக்கோமா. நமது ஒவ்வொரு செயலுக்கும், ஓர் அர்த்தம் இருக்கும்மா. பக்குவமடையாத மனத்துக்குப் புரிகிறதில்லை. அவ்வளவுதான்.''

''நான் சின்ன பாப்பா—என் பிறந்த நாளை விமரிசையாகக் கொண்டாடணும்னு உங்களுக்கு ஆசை வந்திட்டது மாமா. நீங்க வீணா உடம்பை அலட்டிக்கிறது எனக்குப் பிடிக்கலே''—சொல்லிக் கொண்டே உள்ளே சென்றவள் வரிசையாக, சமையல் மேடையில் மூடிவைத்திருந்த பாத்திரங்களைத் திறந்து பார்த்து அதிர்ந்தாள்.

''பாயசம்கூட வச்சிருக்கீங்க மாமா! என்ன இதெல்லாம்.'' கொஞ்சம் அதட்டலாகவே கேட்டாள்.

''எனக்காக இத்தனை நாள் நீ பாடுபட்டே. அதுக்குப் பிரதியா என் நன்றியைக் காட்ட இந்தச் சந்தர்ப்பத்தை உபயோகித்துக் கொண்டேன். நீயும் நானும் உடனடியாகச் சாப்பிட வேணும். ஏன்னா அடுத்த வீட்டு அம்மாகூட சினிமாவுக்குப் போக உனக்கு டிக்கட்டுக்கு ஏற்பாடு பண்ணியிருக்கேன். அவங்க குடும்பத்துப் பெண்கள் எல்லாரும் கூட்டமா ராத்திரிக் காட்சிக்குப் போறாங்களாம்.''

''மாமா! என்னைக் கேட்காமல் ஏன் இந்த ஏற்பாடெல்லாம் செஞ்சீங்க, உங்களை என்ன சொல்றதுன்னே தெரியலை'' அன்புடன் கடிந்து கொண்டாள்.

''நீ இங்கே வந்ததிலிருந்து ஒரு சினிமா, டிராமா, கச்சேரி எதுக்குமே போனதில்லே. உன் பிறந்த வீட்டை கூட மறந்துட்டு, வீடு, ஆபீஸ் இல்லாட்டா படுத்துக் கிடக்கும் மாமனார் கிழவன்னு மாறி, மாறி வேலை செஞ்சு அலுத்துப் போயிருக்கே. நீ அண்ணனுக்கு எதிரா இங்கே வந்து சேர்ந்துட்டேன்னு உன் பிறந்த வீடு உன்னை மறந்துட்டது. ஆனால் நான் மறக்க முடியுமா அம்மா? நாளைக்கு உனக்கு ஆபீஸ் லீவு இல்லையா? கொஞ்சம் மெள்ளவே எழுந்து காரியங்களைக் கவனிக்கலாம். பலவும் யோசனை பண்ணித்தான் உன்



மனசுக்கு கொஞ்சம் தெம்பாக இருக்கட்டும்னு பக்கத்து வீட்டு அம்மாவோட பேசி, அவங்களோட உன்னைச் சினிமாவுக்கு அனுப்ப ஒப்புக் கொண்டேன் ஏற்பாடு செய்தேன். சீக்கிரம் கிளம்பணும்னு சமையலையும் நானே முடிச்சிட்டேன். இது தப்புனு தோணினால் மன்னிச்சுக்கோ...'' என்றார் வேதகிரி.

அவள் கணவன் பிரபுவுக்குச சினிமா மீது ஏற்பட்டிருந்த ஈர்ப்பு அவள் வரை கடும் வெறுப்பாக மாறிவிட்டிருந்தது. அதனாலேயே அவள் மனம் கசந்து போய், சினிமா-நாடகம்-என்று எந்தக் கேளிக்கைக்கும் போக விரும்பாது அவைகளை ஒரேயடியாகத் துறந்து விட்டிருந்தாள்.

மகன் படம் எடுத்து வீட்டைப் பாழடித்து விட்ட போதிலும் வேதகிரிக்குச் சினிமாக்கலை மீது துவேஷம் ஏதும் கிடையாது. பிரபுவுக்குத் திறமை கிடையாது. மட்டித்தனமாக அதில் தன் பொருளையும், தன்னையும் வாழ்க்கையையும் அழித்துக் கொள்கிறான் மூடன் என்று தான் வெறுப்பு.

மாமனார் வற்புறுத்தியதை மறுக்க முடியாது புறப்பட்டாள் அனிதா. என்ன படம்? யார் நடித்திருக்கிறார்கள்? என்ற விவரத்தைக்கூட அவள் பக்கத்து வீட்டு அம்மாவிடம் கேட்கவில்லை.

படக்கொட்டகை வீட்டின் அருகாமையிலேயே இருந்தது. பொடி நடையாகப் பேசிக்கொண்டே அவர்கள் விரைவில் கூட்டமாகக் கொட்டகையை அடைந்து டிக்கெட்டுகளைப் பெற்று கொண்டு இடத்தில் போய்ப் அமர்ந்து கொண்டனர். அது புதிதாக வெளியிடபட்ட தொகுபாடமாக இருந்ததால் அவர்களுக்கு உயர் வகுப்பு டிக்கெட்டுகள்தாம் கிடைத்தன.

படம் ஆரம்பமாகியது. நடிகர்களின் பெயர் ஒவ்வொன்றாக காட்சித் தொகுப்புடன் பின்னணி சங்கீதத்தில் விதவிதமான வண்ணத்திலே திரையில் தோன்றிய

போதுதான் அவள் மனத்தை முள் தைத்தது போன்றதொரு வேதனை சுரீர் என்று தாக்கியது.

படத்தில் கதாநாயகி அவளது கணவனைப் பிரித்துத் தன்னுடன் ஈர்த்துக்கொண்டு விட்ட ஹரிணிதான்!

பத்திரிகைகளில் பார்த்திருக்கிறாள் அவளுடைய படத்தை-ஒரே தடவை சினிமா படத்திலும் அவளைப் பார்த்திருக்கிறாள். அதற்குப்பின் ஹரிணியை அவள் பார்க்கவே விரும்பவில்லை. வட்டமான அந்த அழகிய முகத்தைப் படத்திலே பார்த்தபோது, ''ஐயோ! இந்த அழகுதானே என் கணவனை என்னிடமிருந்து பறித்துக் கொண்டு விட்டது. என் வாழ்க்கை அஸ்தமித்துப்போனது இவளுக்காக என் உரிமையையே சட்ட மூலம் துண்டிக்கத் துணிந்து விட்டாரே பிரபு...?'' என்று மனம் ஆத்திரத்தில் வேதனையில் துயரில் திகுதிகுவென்று நெருப்பாக எரிந்தது.

அவளது பிறந்த நாள் அன்று-தன் மகிழ்ச்சியும் ஆனந்தமும் இறந்து போய்விட்ட உண்மையை அவள் உணர்ந்தாள். அவள் அந்தப் படத்தைப் பார்க்க வந்திருக்கிறாள் அவளது சுகத்தை அபகரித்துப் போனவளின் முகத்தைத் திரும்பத் திரும்ப திரையில் அவள் பார்த்துத் தொலைக்க வேணுமா? ஐயோ? இதென்ன தண்டனை!

படம் ஓடிக்கொண்டிருந்தது. ஆனால், அவளால் மனத்தை அதில் ஈடுபடுத்திப் பார்க்க இயலவில்லை. துயரம் தாங்க முடியாது அடிக்கடி கண்களை இறுக மூடிக் கொண்டாள்.

இடைவேளை வந்தது. பளிச்சென்று விளக்குகள் எரிய ஆரம்பித்தபோது எதேச்சையாகத் திரும்பியவள் தேள் கொட்டி விட்டதுபோல் தாங்க முடியாத மனவலியுடன் தன் முகத்தை மறுபக்கம் திருப்பி கொண்டாள்.

குப்பென்று உடல் முழுவதும் வியர்த்து கொட்டியது. கையும் காலும் படபடவென்று நடுங்குவதை உணர்ந்தாள். நெஞ்சு இரண்டாகி விடும்போல் தீவிரமாகத் துடித்தது. அவர்கள் உட்கார்ந்திருந்த வரிசைக்கு நேர் பின்னால் சுவர் ஓரமாகக் கடைசியான அந்த வரிசையில் திரும்பினால் சட்டென்று தெரியக்கூடிய பகுதியில் அவள் கணவன் பிரபு உட்கார்ந்திருந்தான். அவனுக்கு அருகில் அவனது அன்பை கவர்ந்து கொண்டு விட்ட ஹரிணி!... மாக்ஸி உடையில் அவன் தோள் மேல் உராய்ந்தபடி உட்கார்ந்திருந்தாள்.

அனிதாவுக்கு ஏற்பட்ட மன உளைச்சலின் பேரில் ஆழத்தை அறியாது அடுத்த வீட்டு அம்மாளின் மருமகள் தன் மாமியார் காதில் கிசுகிசுத்தாள். ''மெள்ள அப்படித் திரும்பிப் பாருங்க-நமக்குப் பின்னாலதான் இந்தப் படத்திலே கதாநாயகியா' நடிக்கிற ஹரிணி உட்கார்ந்திருக்கா. அத்தை! நேரே பார்க்கக்கூட ரொம்ப அழகாவே இருக்கா...''

மக்காச்சோளப் பொரியைச் சுவைத்துக் கொண்டு பொட்டலத்தை அவளிடம் நீட்டியபடி கொஞ்சிப் பேசிக் கொண்டிருந்த பிரபுவை அவனுக்கு முன்னால் சாக்லெட் மிட்டாய் தட்டுடன் விற்பனை செய்து கொண்டிருந்த பையன் மறைத்து விட்டான். அது நல்லதாகி விட்டது.

'அட! கூட உட்கார்ந்திருப்பவன் நம்ப அனிதா புருஷன் டைரக்டர் பிரபு...' என்று எங்கே அந்தப் பெண் அடையாளம் கண்டுகொண்டு விடுவாளோ என்ற அச்சத்திலே அவள் ஆடிப்போனாள். எதற்காக அவள் இன்று சினிமாவுக்கு வந்து தொலைந்தாள்.

'மாமா ரொம்ப அறிவுள்ளவராச்சே. என்ன சினிமா யார் நடிக்கிறது என்று விசாரித்துவிட்டு அவளை அனுப்பியிருக்கலாம். அவரும் கவனிக்கவில்லை-அவளும் தெரிந்து கொள்ளவில்லை. இதென்ன ஒரு அசம்பாவிதம்.

நல்லவேளை—இடைவேளை முடிந்து விளக்குகள் அணைக்கப்பட்டு விட்டன. அடுத்த வீட்டு மருமகள்

அடிக்குரலில் பேசுவதை விட்டுத் தன் கவனத்தைத் திரை மீது திரும்பினாள்.

அதற்குமேல் பொங்கி வந்த அழுகையை அடக்கிக் கொண்டு—வேதனையைச் சமாளித்துக்கொண்டு, அங்கே உட்கார்ந்திருப்பது அனிதாவிற்குப் பெரும்பாடாக இருந்தது.

ஒருவழியாகப் படம் முடிந்தது, விளக்குகள் வந்தன—எல்லோரும் எழுந்தனர். துயரமான முடிவாகக் கதை அமைந்ததனால் கண் கலங்கிப் போய் கதாநாயகிக்காக அழுது விட்டிருந்த அடுத்த வீட்டு அம்மா புடைவைத் தலைப்பில் கண்களைத் துடைத்துக் கொண்டாள். "பாவம்!" என்று அடுத்த வீட்டு மருமகள் கதாநாயகிக்காகப் பரிதாபப்பட்டாள்.

அனிதா ஓசைப்படாது தன் அவல நிலையை எண்ணி உகுத்த கண்ணீரைக் கன்னத்திலிருந்து துடைத்துக் கொண்டு மெள்ள திரும்பிப் பார்த்தாள். பின் ஆசனங்களில் அவர்களிருவரையும் காணவில்லை.

"கூட்டம் வெளியேறுவதற்கு முன்பே ஹரிணி பின்பககமா புறப்பட்டுப் போயிருப்பா— முன்னே ஒரு வாட்டி அவள் ஒரு படம் பார்க்கப்போன இடத்திலே கூட்டம் அவளை வளைச்சுப் பிடித்துக் கொண்டுட்டதாம். ஒரு விசிறி அவளது புடைவைத்தலைப்பை வேகமா இழுத்துக் கொஞ்சம் கிழிச்சிட்டானாம்! போலீஸ் வந்து, கூட்டத்தைச் சமாளிக்கும்படி ஆச்சாம். ஆமாம்; அவளோட கூட ஒருத்தன் வந்திருந்தானே-அவனைச் சரியாகவே பார்க்க முடியலை-ஆமாம் யார் அவன்?..." வழி நெடுகிலும் வாய் ஓயாது அடுத்த வீட்டு அம்மாளின் மருமகள் ஹரிணியின் புகழைப்பேசிக் கொண்டு வந்தாள்.

"படம் நல்லா இருந்ததா அம்மா?" கேட்டார் வேதகிரி மகிழ்ச்சியுடன்.

"நல்லா இருந்தது மாமா..." சொல்லிவிட்டு அவள் சட்டென்று உள்ளே சென்று விட்டாள்.



"இப்போ உன் மனசிலே கொஞ்சம் அமைதி ஏற்படும். மனத்தில் துன்பம் சுமையா இருந்தா கடற்கரைப் பக்கம் போய் கொஞ்சம் காத்தாட உட்கார்ந்துட்டு வரலாம். ஒரு சினிமா, கோயில், கடைத்தெருன்னு வெளி வாசலுக்குப் போய்ட்டு வரணும்மா... வீட்டுக்குள்ளேயே கைதி போல அடஞ்சுக் கிடக்க கூடாது."

'நான்தான் தினமும் ஆபீஸ் போய்ட்டு வரேனே—அது ஒண்ணே போதுமே."

"இருந்தாலும் நாலு பேரோட ஒரு படக்காட்சியைப் பார்த்துட்டு வந்தா மனதிலே கொஞ்சம் மாறுதல் ஏற்படும்—அமைதியும் கிடைக்கும் அம்மா."

"அமைதியைத் தேடிக்கிட்டு வெளி வாசலுக்குப் போவதில் பயன் இல்லை. அமைதி வேணும்னா நம் மனதுக்குள்ளேயேதான் அதைத் தேடணும். மாமா நீங்க எனக்காக எடுத்துக்கிட்ட சிரமத்துக்கு ரொம்ப நன்றி மாமா..." என்று கூறிவிட்டு வாயிற் கதவைச் சாத்தினாள்—விளக்கை அணைத்து விடிவிளக்கைப் பொருத்தினாள்.

அமைதியா அவள் தேடிக் கொண்டாள்? இரவு முழுவதும் உறக்கமின்றி பிரபுவையும்—ஹரிணியையும் பற்றிச் சிந்தித்துச் சிந்தித்துப் படுக்கையில் புரண்டு கொண்டிருந்தாள்.

அன்று அவளுக்கேற்பட்ட அதிர்ச்சி! காய்ந்துபோன ரணத்தை மீண்டும் யாரோ விரல்களால் குத்திக் கிளறி விட்டது போன்ற தாள முடியாத வேதனை—அடிவயிற்றிலே தீ பற்றிக்கொண்டு விட்டது போன்ற ஏக்க உணர்வின் தகிப்பு எல்லாம் அடங்கி மறைய அப்பப்பா எத்தனை நாட்கள் சென்றன.

## 4

**அவனது** வாழ்க்கை எந்தவித மாறுதலும் இன்றி ஒரே ரீதியாகப் போய்க்கொண்டிருந்தது. ஆனால் சுன்

ளென்று எரித்த கோடைச் சூரியன் தன் கொடுமையைத் தணித்துக் கொள்ளத்தொடங்கியதால் மாலை வேளையில் சில்லென்ற காற்றுடன் வானம் மப்பும் மந்தாரமுமாகி தடதடவென்று மழையைக் கொட்டி, தெருவைச் சேறாக்கி, போக்குவரத்தை ஸ்தம்பிக்கச் செய்து, மடக்கியகுடையை மற்றவர்கள் மேல் குத்தி கொண்டு பஸ்ஸில் பயணிகளைத் திணறச் செய்து இயற்கை விளையாடியது.

''இனி மழைக்காலம் ஆரம்பிச்சுடும் நமக்கு மழை வேண்டாம். ஆனால் பயிர்களுக்குத் தேவையாச்சே?...'' என்று சொல்லிக்கொண்டே அவள் பின்னால் ஒரு பருத்த ஆசாமி நெருக்கமாக அவள் கழுத்திலே மூச்சு விட்டுக் கொண்டு நின்றார்.

வெளியே மழை சொவென்ற கோஷத்துடன் கொட்டியது 'எங்கே போகிறோம், பஸ் எங்கே நிற்கிறது' என்று பார்க்கக் கூட வசதியின்றி மூச்சு முட்ட— அவள் தொங்கும் வாரைப் பிடித்துக் கொண்டு பஸ்ஸோடன் பல தடவை குலுங்கிக் கொண்டிருந்தாள்.

ஆமாம்; மழைக் காலம் ஆரம்பித்து விட்டது. பருவங்களில் கூட ஒரு மாற்றம். அவளுக்கு நல்ல காலம் என்பது எப்போது? எண்ணியபடி நின்றவள் எதிரில் உட்கார்ந்திருந்த ஆண்கள் இருவர் பலத்த குரலில் பேசுவது கேட்டது.

''நேத்துப் பெய்த மழையிலே ஏற்பட்ட விபத்து. கார் சுக்கு நூறாயிட்டதாம். ஆனால்...அவள் ஒரு கீரல் கூட இல்லாம தப்பிச்சுட்டா. வண்டியை ஓட்டினவன் தான் பலத்த காயத்தோட ரய்யா நர்ஸிங்ஹோமில் அனுமதிக்கப் பட்டிருக்கானாம். நினைவு வரலே...ஏழு மணி நேரம் ஆச்சாம்?...''

''ஆமாம் அவள் யாரையோ கல்யாணம் பண்ணிக்கப் போறதாகப் பத்திரிகையில்ஒரு 'கிசுகிசு' படித்தேன்— அதைப் பற்றி உனக்கு ஏதாவது தெரியுமா?''



''தங்களுடைய பிரபலத்தை அதிகப்படுத்திக் கொள்ள இப்படியெல்லாம் ஒரு புரளியைச் சிலர் தாங்களே கிளப்பி விட்டுப்பாங்க. சில பத்திரிகை வேணுமென்றே ஒரு கேள்வியை எழுப்பி, அதுக்கு மறுப்புக் கொடுக்கவச்சு தங்கள் வாசகர் வட்டத்தை அதிகரிக்கச் செய்து கொள்கிற பழக்கமும் உண்டு. மொத்தத்தில் பத்திரிகைகளைப் புரட்டினால் என்ன கிடைக்கிறது இப்போ?

''நான் காலை வேளைகளில், தினசரியை முதலில் பிரிப்பதில்லை. அருள் வாக்கை வானொலியில் கேட்டுட்டு குளிச்சிட்டு சுவாமி' படத்துக்கு முன் ஒரு ஐந்து நிமிஷம் நின்னு வணங்கிட்டுப்பிறகுதான் விஷயங்களைப் படிப்பேன். இங்கு ஒரு கொலை-அங்கே ஒரு சாவு-கொள்ளை இப்படின்னு காலங்கார்த்தால மனதுக்கு அதிர்ச்சி தர விஷயம்தான் அதிகம் பரவலாயிட்டு வரது.''

'இந்த விபத்து நேத்து ராத்திரி நடந்திருக்கு. காலை பத்திரிகையில் வரலை. மாலை பத்திரிகை வாங்கினேன். முதல் பக்கத்திலே, கொட்டை எழுத்திலே தலைபோகிற சங்கதியா பிரகரித்திருந்தாங்க. வெறும் வாயை மெல்றவனுக்கு பிடி அவல் கிடைச்சாப்போல இது. நல்ல வேளை அவளுக்கு அடிபட்டிருந்தா முகத்துலே காயம் ஏதாவது ஏற்பட்டிருந்தா அவளது வாழ்க்கையே தொழிலே வீணாயிருக்கும்? மார்கட்டிலே அவளுக்கு தானே இப்போ நல்ல பேர். ஏதோ ஒரு படப்பிடிப்புக்காக பங்களூருக்குக் கிளம்பிக் கொண்டிருந்தாளாம் பங்களூரில் ஏதோ ஒரு புதுப் படமாம் ஹரிணிதான் அதில் கதா நாயகியாம் அவள் தப்பி விட்டாள். ஆனால் அதிர்ச்சியினால் ஓய்வாக நர்ஸிங்ஹோமில் படுத்திருக்கிறாளாம். அவளை இப்போ பார்க்க டாக்டர் யாரையும் அனுமதிக்கிறதில்லையாம். எல்லா ஷூட்டிங்கும் நிறுத்தப்பட்டு விட்டிருக்காம். கார் ஓட்டினவனுக்குத்தான் பலத்த அடி.''

அனிதாவின் நெஞ்சு படபடவென்று அடித்துக் கொண்டது. 'அவன்' என்று அவர்கள் குறிப்பிட்டவன் அவள் கணவன் பிரபுவா..." குடல் எல்லாம் புரண்டு வாயிற்குள்ளே வந்து அடைத்துக் கொண்டு விட்ட இறுக்க உணர்வில் அவள் கண்கள் ஒரு கணம் இருண்டு போயின.

"நல்ல பலத்த அடி—உயிர் தப்பினதே அதிசயம்னு போட்டிருந்தது."

"அவன் பேர் என்ன?" முதலில் பேசியவர் கேட்ட போது அவளையும் அறியாது குனிந்து காதைத் தீட்டிக் கொண்டு மூச்சைப் பிடித்தபடி கேட்டாள்.

"மத்த விவரம் படிக்கிறதுக்குள்ளே மழை வந்து விட்டது. வீட்டுக்குப் போனால் போதும்னு அவசரமாகத் திரும்பிட்டேன். பைக்குள்ளே பேப்பரை மடித்து வச்சிருக்கேன். இந்தக் கூட்டத்தில் எங்கே எடுக்கிறது—படிக்கிறது?"

"இந்த விவரம் எந்தப் பேப்பரில் வந்திருக்குன்னு சொல்றே?"

"மாலை ஒளிதான் இது மாதிரி விஷயங்களுக்கு வெளிச்சம் போட்டுக் காட்டும். போஸ்டரைப் பார்த்தேன்—சட்டுன்னு ஒண்ணு வாங்கிட்டேன். நமக்கும் பொழுது போகணுமில்லையா?" பலத்த சிரிப்புக் கிடையே அடுத்த பஸ் நிறுத்தத்திலே அவர்கள் இறங்கிப் போனார்கள்.

அடுத்த இரண்டு நிறுத்தங்கள் வரை அவள் பற்களைக் கடித்துக் கொண்டு பொறுமையாக நின்று கொண்டிருந்தாள்.

பஸ் இன்று நத்தையாக ஊர்வது போன்ற பிரமையில் அவள் மனம் சலித்துச் சோர்ந்து போனது. முடிவில் அவள் இறங்கவேண்டிய இடம் வந்ததும், கூட்டத்தைப் பிளந்துகொண்டு ஆவேசமாக, அவசரமாக இறங்கினாள். பஸ் நிலையத்தருகேயிருந்த சிறு கடையில் மாலைப் பத்திரிகைகள் அடுக்காக வைக்கப்பட்டிருந்தன. லேசாக விழுந்த தூரலைப் பாராட்டாது தோல்பையைத் துழாவி "மணிபர்சை எடுத்துத் தேவைப்பட்ட சில்லரையை எடுத்துக்கொண்டாள். "மாலை ஒளி ஒண்ணு கொடுங்கோ"— அவள் தன் கையை நீட்டினாள்.



"வித்துப் போச்சேம்மா—இன்னிக்கு அதுக்கு ஏக கிராக்கி" என்று கையை விரித்தார் கடைக்காரர்.

வீட்டுக்குத் திரும்பாது பலக்கத் தொடங்கிய மழைக்குக் குடையை விரித்துக் கொள்ளாது அவள் பிடிவாதமாக எதிர் சாரியிலிருந்த கடையை நோக்கி விரைந்தாள்.

"மாலை ஒளி ஒண்ணு வேணும்" என்று நீட்டிய பல கைகளுக்கிடையே, இங்கு ஒண்ணு கொடுக்க, உரத்த குரல் எழுப்பி வாங்கிக் கொண்டாள்.

மழை பலக்கத் தொடங்கியதும் குடையை எடுத்து விரித்துக் கொண்டாள். பத்திரிகையைப் படிக்க நேரம் இருக்கவில்லை. அவசரமாக அதைத் தன் பையில் திணித்துக்கொண்டு தணிகாசலம் தெருவுக்குள் புகுந்தாள். குண்டு குழிகளில் நிரப்பி சேறாகிவிட்டிருந்த மழை நீரைச் செருப்புகள் வாரி அவள் புடைவையின் பின் பக்கம் தெளித்து அழுக்காக்கியதை அவள் பொருட்படுத்தவில்லை. புடைவை ஓரம் மழை நீரில் நனைந்து தோய்ந்து போய்க் காலைத் தடுக்குவதையும் அவள் பாராட்டவில்லை பைத்தியம் பிடித்தவள் போல, ஒரு வேகமான உறுதியுடன் வீட்டை நோக்கி வந்தாள்.

அவள் வீட்டு வாசலுக்கருகே பளிச்சென்று தெருவின் குழல் விளக்கு எரியத் தொடங்கியது. வாயிற்கதவு சாத்தப்பட்டிருப்பதைக் கண்டு ஒரு கணம் நிம்மதியடைந்தாள். படிகளைத் தாவி ஏறி குடையை மடித்துத் திண்ணை மீது போட்டுவிட்டு ஓரமாக வந்து நின்று, வீட்டுக் கதவுவரை தாவி தூசி படிந்த தெரு பத்திரிகையைப் பிரித்துக் கண்களை அவசரமாக ஓட்டினாள்.

அடிபட்டு ரம்யா நர்ஸிஹோமில் பட டைரக்டர் பிரபு தன் நினைவின்றி சேர்க்கப் பட்டிருந்தார். இப்

பொழுது அவருக்கு நினைவு வந்து விட்டதாகத் தெரிகிறது. எதிரே வந்த ஒரு லாரியை தவிர்க்க வண்டியைத் தாமே ஓட்டிய டைரக்டர் பிரபு முயன்றபோது எதிர் பாராதவிதமாக சாலை ஓரத்திலிருந்த பெரிய புளிய மரத்தில் மோதியதால், பலத்த காயமடைந்தார். ஹரிணி அதிர்ஷ்டவசமாக ஒரு சிறு காயம்கூட இன்றித் தப்பி விட்டாள்."

உடல் முழுவதும் கிடுகிடுவென்று நடுங்க, கண்களில் நீர் பொங்கி கன்னங்களில் வழிய அவள் அவசரமாக கதவைத் தட்டினாள்.

''மாமா! சங்கதி உங்களுக்குத் தெரியுமா...?'' வீரிட்டு அலறிக்கொண்டு அவள் உள்ளே வந்தாள்.

''தெரியும்மா...!' மாலை ஒளியை மூலைக்கடையிலே வாங்கினேன். முதல் பக்கத்தைப் பார்த்ததுமே திக்குனு போயிட்டது. எனக்குத் தெரியும்மா, உன்னைப்போல் ஒரு நல்ல பெண்ணைக் கண்ணும் கண்ணீருமா நிறுத்தி வச்சதுக்குத் தூக்குத் தண்டனை...'' வாயில் துணியை அடைத்துக்கொண்டு கிழவர் அழுகையில் குலுங்கினார்.

''தண்டனைன்னு சொல்லாதிங்க மாமா. இது ஒரு விபத்து. யாருக்கும் நேர்ந்திருக்கலாம்."

''மாமா எனக்கு அவரை உடனே போய்ப் பார்க்கணும் போல இருக்கு...'' விம்மலும் திணறலுமாக அழுதாள் அனிதா.

''வேண்டாம் நீ அங்கே போகிறது உசிதம் இல்லே, அது பெரிய நர்ஸிங் ஹோம். அவன் பிரபல டைரக்டர். உன்னை உள்ளே அனுமதிக்காம அவமானப்படுத்தி அனுப்ப, அவனுடைய ஆள்படைகள் தயாரா இருப்பாங்க. என் பேச்சைக் கேளும்மா...''

''மாமா! நினைவு கூட இல்லாம வெகுநேரம் கிடந்தாராம்—முகத்திலே பலத்த அடியாம். பயமா இருக்கு மாமா...'' விசும்பினாள் அவள்.



''நடக்கிறது நடக்கப் போவுது. நாம ரெண்டு பேரும் துடிச்சு அழுது, ஆகிற காரியமென்ன? ரத்த பாசம் தாங்க முடியலை, நான் அழுதேன். உன்னைக் கண்டதும் உனக்கு இப்படித் தொடர்ந்து துன்பம் வரணுமான்னு துக்கம் தாங்காம அழுதேன். அனிதா முகத்தைக் கழுவிக்கிட்டு வாம்மா. பூஜை விளக்கேற்று. சாமியைக் கும்பிடு. நம்மைப் போல ஏழைகளுக்கு அவர்தாம்மா துணை...'' தழுதழுத்தார்.

''தோல் பையை இறக்கி மேஜை மீது போட்டு விட்டு, அறைக்குள் சென்று பாயின் மீது குப்புற விழுந்தவள், இருதயம் சுக்கலாகி விடும்போல வெகு நேரம் அழுது கொண்டிருந்தாள். விளக்கைப் போட்டுவிட்டு மெல்லத் தடுமாறிக் கொண்டு அறைக்குள் வந்து அவள் அருகே நின்றார் வேதகிரி.

''அம்மா அனிதா எழுந்திரு. முகத்தைத் துடைச்சுக்கோ. அழுது அழுது உன் உடம்பைக் கெடுத்துக்கிறதிலே யாருக்கும் லாபமில்லே. தாகத்துக்குக் கூட எதுவும் சாப்பிடாம இப்படிச் சுருண்டு கொண்டா என்ன பயன்? இப்போ உனக்குத் தேவை துணிவு. மறக்காதே. மனதைத் தளரவிடாதே. என்ன நடக்கிறதுன்னு கவனிப்போம். எழுந்திரும்மா. இந்தா, உனக்காக நான் காப்பி போட்டு எடுத்துட்டு வந்திருக்கேன். ஒரு வாய் சாப்பிடும்மா. உன் அப்பா நான் கெஞ்சிக்கேட்டுக்கிறேன். சாப்பிடும்மா. உனக்கு அவன் புருஷன் ஒத்துக்கிறேன். அவன் என் மகன். என் ரத்தம். மறக்காதே. நான் தைரியமா இருக்கேன். நீயும் அப்படியே இருக்கணும். இந்தாம்மா.'' வெகுவாக உபசரித்தார்.

கண்ணீர் கன்னங்களில் வழிந்து வாயில் உப்பு கரிக்க, காப்பியுடன் அதைக் கலந்து விழுங்கி விட்டு, மெல்ல முகத்தைத் துடைத்துக் கொண்டு வெளியே வந்தாள் அனிதா.

''மாமா! நீங்க சொல்றபடி நான் துணிவோட இருக்க முயற்சி பண்றேன். ஆனால் முடியலை மாமா...'' மீண்டும் பெருமூச்சு விசும்பலில் திணறினாள்.

விபத்து தந்த அதிர்ச்சியிலிருந்து மீள ரம்யா நர்ஸிங் ஹோமில் ஹரிணி ஓய்வாக பல நாட்கள் படுத்திருக்க முடியும். ஆனால், இடி போன்று தாக்கிய அந்தத் துயரச் செய்தியைப் படித்து அதிர்ந்து விட்டிருந்த அனிதா ஒரு நாள் கூட ஓய்வாக வேலையினின்று வீட்டில் ஒதுங்கியிருக்கக் கட்டுப்படியாகாத நிலை. மழையோ, வெய்யிலோ, அவள் வேலைக்குப் போய்த்தான் ஆகவேண்டும். அவள் கொண்டு வந்த அந்த கொஞ்ச சம்பளமும் அந்த வீட்டை நிர்வகிக்கத் தேவைப்பட்டது என்னவோ உண்மை.

கணவன் படுகாயமடைந்து நர்ஸிம்ஹோமில் படுத்துக் கிடக்கிறான் என்ற செய்தியைப் பத்திரிகையில படித்துவிட்டு அவளுக்கு ஏற்பட்ட மாபெரும் துயரத்தை விழுங்கிக் கொண்டு அவள் வழக்கம்போல் அதிகாலையில் எழுந்தாள். குளியலை முடித்துக் கொண்டு மாமனாருக்கு காபி பலகாரம் கொடுத்து உபசரித்தாள். வேண்டா வெறுப்பாக காப்பியை மட்டும் பருகிவிட்டுப் பகல் உணவைத் தயாரித்து மேடை மீது வைத்தாள். டிபன் டப்பாவை எடுத்துப் பையில் போட்டுக் கொண்டு கிளம்பினாள்.

முதல் நாள் பெய்த மழைக்கு சுடுகட்டப் புறப்பட்டது போல சுள்ளென்று சூரியன் விடிந்ததுமே எரிச்சலுடன் புறப்பட்டிருந்தது. குழிகளில் நிரம்பியிருந்த நீரைக் கலக்கிச் சேறாக்கி விளையாடிக் கொண்டிருந்த நீரைத் தெருப்பிள்ளைகள் புடைவை மீது சேற்றை வாரி இறைத்துவிடாவண்ணம் அவர்களைத் தாண்டிக்கொண்டு வேகமாக அவள் பஸ் நிலையத்தை அடைந்தாள். அலுவலகத்தில் அன்று அவளுக்கு வேலையே ஓடவில்லை. அவள்தான் பிரபுவின் மனைவி என்பதை அறியாத



ஊழியர்கள் வாய் ஓயாது வேலை நடுவே அந்தவிபத்தைப் பற்றி விமரிசனம் செய்து அவளது துன்பத்தைக் கிண்டிவிட்டுக் கொண்டிருந்தனர். நேரம் நத்தையாக நகர்ந்தது. அவள் பொறுமையுடன் பகல் உணவு நேரத்திற்காகக் காத்திருந்தாள். அப்போது அலுவலகத்து அந்த அறையில் ஊழியர் யாரும் இருப்பதில்லை. தனிமையில் அவள் தொலைபேசி மூலமாக விசாரித்துத் தெரிந்து கொள்ளலாம் அல்லவா?

தொலைபேசியை இயக்கும் பணியும் அவளுடையது தான். ஆனால் தன் சொந்த உபயோகத்திற்காக உத்தரவின்றி அவள்' அதை இதுவரை உபயோகித்ததில்லை. பிறர் பொருள் மீது கருத்தும் பொறுப்பும் உடையவள் அவள். ஆனால், அதற்குக் கிடைத்த பரிசு.

அவளது உரிமை என்ற கணவனை தன் அழகாலும் அந்தஸ்தாலும் ஹரிணி தட்டிக் கொண்டு போய்விட்டிருந்தாள். வாழ்க்கையில் நடக்கும் இப்படிப்பட்ட விபரீதங்களுக்கு அவள் யாரிடம் போய் நியாயம் கேட்க முடியும்? தலைமைக் கணக்கரிடம் போய் உத்தரவு வாங்கிக் கொண்டு உணவு நேரத்தின்போது யாருமில்லாத சமயம், சட்டென்று டெலிபோன் டைரக்டரியைப் புரட்டி ரம்யா நர்சிங் ஹோமின் முகவரியைத் தேடினாள். பரபரப்புடன் எண்களைச் சுழற்றினாள்.

' எஸ்! ரம்யா நர்சிங் ஹோம்''— மறுபக்கத்தில் ரிசப்ஷன் பெண்ணின் குரலில் அலுப்புத் தொனித்தது.

''முந்தா நாள் கார் விபத்துலே அடிபட்ட டைரக்டர் பிரபுவைப் பற்றி டாக்டரிடம் விசாரிக்கணும்'' அனிதா மிகவும் அடக்கமாகக் கேட்டாள்.

''நீங்க யார்? பத்திரிகை நிருபரா இருந்தா— நேரே வந்து டாக்டரிடம் கேட்டுக்குங்க—''

''நான் அவருக்கு உறவு. அதனாலே...''— பேச முடியாமல் துக்கம் தொண்டையை அடைக்கத் தவித்தாள் அவள்.

''நெருங்கிய உறவுன்னா நேரில் வந்து, டாக்டரைக் கண்டு பேசித் தெரிஞ்சுக்கலாம். இதோ பாருங்க சுற்றி வளைத்துப் பேசி என் நேரத்தை வீணாக்காதீங்க. இந்த மனுஷன் விபத்துல அடிபட்டு வந்து இங்கே படுத்தாலும் படுத்தார்...''

''தயவு செய்து ஒரே கேள்விக்குப் பதில் சொல்லுங்க போதும்— அவருக்கு உயிருக்கு ஆபத்து ஏதும் இல்லையே?''

''இதென்ன பெரும் தொல்லையாப் போச்சு. நான் ரிஸப்ஷனிஸ்ட். எனக்கென்ன தெரியும். மேலும் பேஷன்டுகளுடைய நிலையைப்பற்றி நான் யார்கிட்டேயும் எதுவும் டாக்டர் உத்தரவில்லாமல் பேசக்கூடாது. ரொம்பத் தப்பு. வேணும்னா அந்த வார்டைப் பாத்துக்கிற நர்சுக்கு கனெக்ஷன் கொடுக்கிறேன். அவங்ககிட்ட கேட்டுப் பாருங்க.'' சிடுசிடுத்தபடி இணைப்பை வேறு திசைக்கு மாற்றினாள்.

''ஏழாம் நம்பர் வார்ட் நர்ஸ் நர்மதா பேசறேன்... டைரக்டர் பிரபுவுக்குச் சொந்தக்காரங்களா நீங்க. போனில் யாருக்கும் நாங்க தகவல் கொடுக்கிறதில்லை. வேணும்னா நேரே இங்க வந்தா, அவரைப் பார்க்க உதவி செய்ய முடியும். நான் முழுக்க இது ஓயாத தொல்லையாப் போச்சே''— டக்கென்று டெலிபோன் மறுபக்கம் துண்டிக்கப்பட்டது.

''வேண்டாம்மா! நீ அங்கே போனால் அவமானப்பட நேரிடும்.'' அவன் மாமனார் எச்சரித்து விட்டிருந்தது எவ்வளவு பெரிய உண்மை.

நர்சிங்ஹோமுக்குப் போகாது தொலைபேசியில் விசாரிக்கும்போதே மூஞ்சியில் அடித்தாற் போன்று சூடான பதில்கள்! நேரில் போனால் வாயிற்புறம் காவல் காத்து நிற்கும் செக்யூரடி ஆள் அவள் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளினாலும் தள்ளக்கூடும்.



பொங்கி வந்த அழுகையை அடக்க மாட்டாது அவள் பின் அறைக்குள் சென்று புழுங்கி அழுதாள். முகத்தைக் கழுவிக்கொண்டு திரும்ப அலுவலக அறைக்கு வந்தாள். டிபன் டப்பாவைப் பார்த்தபோது ஆத்திரம் மண்டிக்கொண்டு வந்தது.

''மரியாதை கெட்டுப்போன உனக்குச் சோறு ஒண்ணு கேடா?'' தன் மேல் பொங்கி வந்த கசப்பு உணர்வில் இலையில் சுருட்டி டப்பாவில் வைத்திருந்த தயிர் சோற்றைக் குப்பைக் கூடையில் கவிழ்த்தாள்... பட்டினி கிடந்தால், ஒரு சமயம் பிரபுவின்மேல் இன்னமும் ஒட்டிக்கொண்டிருக்கும் அந்தப் பாசம், செத்து மறைந்து போகாதா?

அன்று முதல் வீட்டிற்குப் புறப்படும் தருவாயில் அவள் அண்ணன் சுந்தரம் அலுவலகத் தொலைபேசியில் அழைத்தார். நல்லவேளை ...எல்லோரும் வீட்டிற்குப் புறப்படும் அமர்க்களத்தில் அவர்கள் பேச்சை யாரும் கவனிக்க சிரத்தை காட்டவில்லை.

''காலைப் பத்திரிகையில் பார்த்தேன், உங்க வீட்டுக்கு வந்து விசாரிக்கச் சங்கடமாயிருந்தது. உன் மாமியார் சாவுக்கே வராதிருந்த நாங்கள், இப்போ எதுக்கு வந்து நிக்கிறோம்னு உன் மாமா ஏதாவது கடுமையா பேசிட்டா, வீண் அவமானம்னு உன் அண்ணி தடுத்துட்டா. உனக்கு இப்படித் துன்பத்துக்கு மேல துன்பமா வருதேன்னு மனம் ரொம்பக் கஷ்டப்படுது. ஆபீசுக்கு வந்ததும் உடனே போன் பண்ணனும்னு நினைச்சேன். டைரக்டர் பம்பாயிலிருந்து வந்திருப்பதாலே ரொம்ப வேலை, முடியலை. இப்பத்தான் கொஞ்ச நேரம் கிடைச்சுது. நீ புறப்படறதுக்குள்ள உன்னை டெலிபோனில் பிடிக்கணும்னு அவசரமா போன் பண்ணினேன். நல்லவேளை கிடைச்சே... ஆமாம்... நர்சிங்ஹோமுக்குப் போய்ப் பார்த்தியா—'' அண்ணன் மூச்சு விடாது பேசினார்.

''அங்கே போவது தப்புன்னு, மாமா சொல்லிட்டார்—'' சுற்று சுற்றும் பார்த்தபடி மெல்லிய குரலில் பதிலளித்தாள் அனிதா.

''பெத்த அப்பனுக்கே, மகன் மேலே ஆசை விட்டுப் போச்சு—அப்படியிருக்கும்போது நீ எந்த நம்பிக்கையைப் பிடிச்சுண்டு அங்கே உன் மாமனார் வீட்டிலே தவமிருக்கியே புரியலை?''

''அண்ணா! மாமாவுக்குக் கால் எலும்பு முறிவு ஏற்பட்டுத் தனிமையிலே திண்டாடிக் கொண்டிருந்தார் அதனாலே...''

''மாமனாருக்குப் பணிவிடை செய்துக்கிட்டு அவங்க வீட்டிலே ஒட்டிக்கிட்டிருந்தா, புருஷன் ஓடி வந்து உன்னை அழைச்சுப்பான்னு நினைசசே?''

''அப்படி ஆசைப்பட்டது தப்பா?''

''இனி அந்த ஆசையை உதறிடு. அவன் பிழைச்சு மனிதனா நடமாடுகிறதுங்கிறது அதிசயம்னு டாக்டர்கள் பேசிக்கிறாங்களாம்.''

உன் மஞ்சளும் குங்குமமும் அழிந்து போகப் போகிறது என்பதைச் சொல்லவா அண்ணன் அவசரமாக அவளைக் கூப்பிட்டார்? அவரது பேச்சைக் கேட்காது மாமனார் வீட்டில் அவள் தங்கி விட்டதைக் குறித்து அண்ணனுக்கு இத்தனை ஒரு காட்டமா?

மலர் போல தங்கை மணம் வீசி வாழ வேண்டும். அவளை வாழ வைத்து அண்ணன் மனம் மகிழ வேண்டும் என்ற பாச உணர்வு எல்லாம் சினிமாவில் மட்டுந்தானா....?

நிஜ வாழ்வில் அண்ணனே தங்கையின் முதல் எதிரியாக மாறி விடுவாரா?

பொங்கி வந்த கண்ணீரைச் சமாளித்தாள். சுற்று முற்றும் பார்த்தாள். எல்லோரும் கிளம்பிப் போய்விட்டிருந்தனர். அறையைக் கூட்டிச் சுத்தப்படுத்த வேலைக்காரி துடைப்பத்துடன் உள்ளே நுழைந்தாள். கதவுகளை



சாத்திப் பூட்டிவிட்டுக் கிளம்ப அவசரப்பட்டார் கட்டிடப் பாதுகாவலர்.

''நான் மாமாவுக்கு எப்பவும் உதவியாக அவர் கூட இருப்பது என்பது உறுதியான தீர்மானம்—முடிவு எப்படி இருந்தால் என்ன? நன்றி—'' —சட்டென்று போனை வைத்துவிட்டு—டைப் யந்திரத்தின் மீது பிளாஸ்டிக் உறையை மாட்டிவிட்டு பையைத் தோள் மீது போட்டுக் கொண்டு வெளியே வந்தாள்.

சில்லென்று காற்று முகத்தின் மீது வீசியது. ஆனால் நெஞ்சு நெருப்பாக எரிந்து கொண்டிருந்தது.

பஸ் நிலையத்தை அணுகுமுன், 'மாலை ஒலி' ஒன்றை அருகிலிருந்து கடைசியிலிருந்து வாங்கிக் கொண்டாள். பக்கத்துக்குப் பக்கம் படங்களுடன் செய்திகளைச் சூடாகப் பிரசுரித்த நாளேடு என்பதால் அதற்கு மக்களிடையே நல்ல வரவேற்பு—அச்சகத்திலிருந்து வெளி வந்தவுடன் —கடையின் முன் பக்கத்திலே கட்டாக வைக்கப்பட்ட கொஞ்ச நேரத்தில் கடைசி காப்பிகூட கிடைக்காது விற்றுப்போகும் பரபரப்பான பத்திரிகை அது. சட்டென்று முந்திக்கொண்டு அன்றைய வெளியீட்டை வாங்கிக்கொண்டாள். தந்தையின் ஓரத்தருகே நின்றுகொண்டு பக்கங்களை வேகமாகப் புரட்டினாள். ''இன்னும் இரண்டு தினங்களில் நடிகை ஹரிணி நர்சிங் ஹோமினின்று வீடு சென்று விடுவார் என்று தெரிகிறது. அடுத்தவார ஆரம்பத்திலிருந்து ஒத்தி வைக்கப்பட்ட படப்பிடிப்புகளில் அவர் கலந்து கொள்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.''

புகைப்படத்துடன் கொட்டை எழுத்துகளில் பிரசுரமாகியிருந்த அந்தச் செய்தியின் அடியில், பிரபுவைப் பற்றிய விவரம் சில வரிகளில் கொடுக்கப்பட்டிருந்தது.

''டைரக்டர் பிரவுக்கு நன்றாக நினைவு திரும்பி விட்டிருக்கிறது. இன்னும் சில தினங்களுக்குப் பின்னர்

அவரைப் பேட்டி காண நிருபர் அனுமதிக்கப்படலாம். உயிருக்கு ஆபத்தில்லை. முகத்தில் பட்டிருக்கும் காயத்தைப் பற்றி இப்போது ஏதும் சொல்ல முடியாது - என்கிறார் டாக்டர்.

எச்சிலை விழுங்கிக் கொண்டாள் அனிதா. கூரான மூக்கு, முன் தூக்கிய முகவாய், லேசாக உப்பிய கன்னம், அகன்ற நெற்றி இவை மீது காயம்பட்டு, தையல் போட்டு வடுக்கள் ஏற்படலாம். பிரபுவின் கம்பீரமான முகத்தின் அழகைத் தழும்புகள் கெடுத்து விடக்கூடும் என்பதை டாக்டர் மறைமுகமாகச் சொல்கிறார் போலிருக்கிறது. இந்தக் காலத்தில் என்னவெல்லாமோ செய்கிறார்களே?''... பிளாஸ்டிக் சர்ஜரி செய்து வடுவின் விவகாரம் தெரியாமல் முகத்தைச் சரி செய்துகொள்ளவா முடியாது?... பிரபு மனம் வைத்தால் அமெரிக்காவுக்கு நாளைக்கே வைத்திய உதவி பெறப் பறந்து விட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை

—எண்ணியபடி அவள் வீடு திரும்பியபோது வேதகிரி 'மாலை ஒளி' ஒன்றை வாங்கிப் படித்து முடித்து விட்டுப் அவளுக்காக மடித்து மேஜைமேல் தயாராக வைத்திருப்பதைப் பார்த்தாள்.

''மாமா! இனிமேல் தினம் நான் 'மாலை ஒளி'யை டவுன் கடையிலிருந்து வாங்கி வந்துடறேன். நீங்க சிரமப் படவேண்டாம்'' என்றாள்.

''என் மகனைப் பத்தித் தெரிஞ்சுக்க எனக்கும் ஆவலாகத்தானே இருக்கும். அதனால் வாங்கினேன்'' என்று சொல்லத் துடித்தவர், கட்டுப்படுத்திக்கொண்டார். ''அப்படியே செய் அம்மா'' என்றார் பெருமூச்சுடன்.

ஒரு மாத காலம் விரைவாக ஓடிச் சென்றது—அன்றாடம் மாலை திரும்பும்போது முதல் வேலையாக அவள் அந்த நாளேட்டை வாங்கத் தவறியதேயில்லை. நேரே சென்று விசாரிக்க முடியாத நிலை தொலை



பேசியிலும் தெரிந்துகொள்ள முடியாத சங்கடம். பத்திரிகையைப் படித்தாவது அவள் தன் கணவனது உடல் நிலையைப் பற்றித் தெரிந்து கொள்வதில் தவறு என்ன? பிடிவாதமாக அவள்—பாதையோரத்தில், நின்றபடி பிரபுவைப் பற்றி பத்திரிகை அடிக்கடி கொடுத்த தகவல்களை ஆவலுடன் படித்தாள். சினிமாப் பகுதியில் வந்த 'கிசுகிசு'க்களைச் சிரத்தையுடன் வாசித்துப் புரிந்து கொள்ள முயன்றாள்.

'ஹரிணி புதிய படமொன்றில் பிரபல நடிகர் லோகேந்திரன் ஜோடியாக நடிக்க ஒப்பந்தமாயிருக்கிறார். நேற்று அவர்கள் அனைவரும் வெளிப்புறக் காட்சிக்காக சிங்கப்பூருக்குப் பயணமானார்கள்.'

''டைரக்டர் பிரபு எடுத்த படம், விபத்ினால் கைவிடப்பட்டது. ஏற்கனவே அவரைக் கொண்டு எடுத்த படங்களை, வேறு டைரக்டர்கள் ஏற்றுக்கொண்டு இயக்கி வருகிறார்கள்.''

மற்றொரு நாள் பத்திரிகையில் வந்த செய்தி அவளுக்கு வியப்பைத் தந்தது.

சிங்கப்பூரிலிருந்து திரும்பிவிட்ட நடிகை ஹரிணியை நம் நிருபர் பேட்டி கண்டபோது கேட்டார்.

''நடிகர் லோகேந்திரனுக்கும் உங்களுக்கும் திருமணம் நடக்கப் போவதாக ஒரு வதந்தி உலவுகிறதே—உண்மையா?''

''விரைவில் எங்களுக்குத் திருமணம் நடக்க விருப்பது உண்மைதான்—உங்களுக்கும் அழைப்பு வரும்''—ஹரிணி சிரித்தாள்.

''டைரக்டர் பிரபுவுக்கும் உங்களுக்கும்.''

''அதெல்லாம் வீண் வதந்தி. சினிமா உலகில் அடிபடும் அத்தனை 'கிசுகிசுக்களும்' உண்மையாகி விடுமோ? சினிமா மூலம் நாங்கள் மக்களிடையே பிரபலமாகி விட்டிருக்கிறோம். அதைச் சில பத்திரிகைகள் தங்கள் பிரபலத்திற்கு வியாபார ரீதியில் உபயோகித்து இல்லாத கதை

களைக் கட்டி விடுகிறார்கள். நடிகர்கள் என்பதைத் தவிர நாங்களும் உங்களைப்போல ஆசாபாசங்கள் கொள்கைகள் கோப தாபங்கள் உள்ள மனிதப் பிறவிகள் தாமே! இதை நீங்கள் ஏன் அடிக்கடி மறந்து போகிறீர்கள்?''—ஹரிணி சூடாகவே பதிலளித்தார்.

சாப்பிட்டுவிட்டுக் கையைக் கழுவிக்கொண்டு வந்து கட்டிலின் மீது உட்கார்ந்த வேதகிரிதாமாகவே பேசினார்.

''பார்த்துக்கோம்மா—இதுதான் உலகம்னு புரிஞ்சுக்கோ. பிரபு கிட்டே பணம் காசு அந்தஸ்து எல்லாம் இருந்தப்போ ஹரிணி அவனைத்தான் கட்டிக்கப் போறேன்னு சொன்னாள். இப்போ ஆஸ்பத்திரியிலே, அடிபட்டுக் கிடக்கறப்போ நொடிப்பொழுதிலே தன் விருப்பத்தை மாத்திக்கிட்டா பார்த்தியா? இவனுக்கு இதுவும் வேணும், இன்னமும் வேணும். கட்டினவளைக் கண் கலங்க வச்சுட்டுச் சுத்திக் கொண்டிருந்தான். கைமேலே கூலி கிடைச்சுட்டது'' கொதித்துப்போய் வார்த்தைகளைக் கொட்டினார்.

அனிதா பதிலளிக்கவில்லை. ஆனால், அவளுக்கு மிக வருத்தமாக இருந்தது. பிரபுவுக்காக அவள் மனம் இரக்கத்தில் கரைந்தது. ''மனைவியிடமிருந்து விவாகரத்து பெற்றாவது அவளைக் கல்யாணம் செய்துகொள்வது உறுதி என்று ஹரிணி மீது கட்டுக்கடங்காத காதலில் தவித்த பிரபுவை, அவள் இப்படியா கந்தல் துணியை குப்பைக் கூடையில் வீசுவதுபோல உதறி விடுவாள்? சே! இவளும் பெண்ணா?'' அவள் மனம் வேதனையில் உழன்றது.

சில தினங்களுக்குப் பின்னர், ஒரு நாள் மாலை, வழக்கம்போல் வாங்கிய பத்திரிகையைப் பாதையோரத்தில் நின்று புரட்டிப் பார்த்தவள் அதிர்ந்து போனாள்.

''டைரக்டர் பிரபுவுக்கு முகத்தில் ஏற்பட்ட பலத்த அடி காரணமாக அவர் பார்வையை இழக்கக்கூடும் என்று



வைத்தியர்கள் கருதுகிறார்கள். ஏற்கனவே ஒரு கண்ணில் பார்வை மறைந்து விட்டிருக்கிறது. இன்னொன்றையாவது குணப்படுத்த இயலுமா என்று வைத்தியர்கள் பாடுபடுகிறார்கள்.''

''மாமா!'' என்று அலறிக்கொண்டு உள்ளே நுழைந்தாள் அனிதா. அவள் கையிலிருந்த பத்திரிகையை வாங்கிப்படித்த வேதகிரி—மௌனமாகக் கூடத்துக் கட்டிலின் மீது தொப்பென்று உட்கார்ந்து விட்டார்.

''மாமா! என்ன அப்படிப் பார்க்கிறீங்க? படிச்சீங்களா? வெளிச்சம் பத்தலையா?'' கூறிக்கொண்டு குழல் விளக்கைப் பொருத்தினாள்.

''மாமா! அவர் கண் பார்வை போய்ட்டா என்ன செய்வார், மாமா...?'' என்று அழுதுகொண்டே அருகில் வந்த அனிதா சட்டென்று கண்களைத் துடைத்துக் கொண்டாள். வேதகிரியை உற்றுப் பார்த்தாள்.

நெற்றியெல்லாம் ஆறாக வியர்வை வழிய, அவர் தமது மார்பை இடது கையால் அழுத்திப் பிடித்துக் கொண்டு, திணறுவதைக் கண்டு திடுக்கிட்டுப் போய் விட்டாள்.

''மாமா உங்களுக்கு என்ன? ஏன் அப்படிப் பார்க்கறீங்க''—தழுதழுத்தபடி கேட்டாள். அவரால் பதில் ஏதும் பேசமுடியவில்லை. தண்ணீர் குடிக்க வேண்டும் என்று ஜாடை செய்தார். அவள் உள்ளே ஓடிச் சென்று டம்ளரில் நீரை நிரப்பிக் கொண்டு வருவதற்குள் வெட்டுண்ட மரம்போல அப்படியே கட்டிலின் மேல் மயக்கமாக விழுந்து விட்டார்.

துன்பங்களும் துயரங்களும் இப்படித் தொடர்ந்து கொண்டா போக வேண்டும்? அவள் அவசரமாக வெளியே ஓடிச் சென்று, தெருக்கோடியிலிருந்த டாக்டரைக் கையோடு அழைத்துக்கொண்டு வந்தாள்.

சோதனைக் குழாயை வேதகிரியின் மேல் வைத்து விட்டு டாக்டர் கையை விரித்தார்.

''பெரிய அளவில் ஏற்பட்ட மாரடைப்பில் இறந்து போய் விட்டிருக்கிறார். உயிர் பிரிஞ்சு சில நிமிடங்கள் தாம் ஆகியிருக்கும். இனி என்ன செய்ய முடியும்?''

''சித்த முன்னாடிகூட பேசினாரே, எனக்குக் கதவைத் திறந்து வச்சாரே? இறந்து போய் விட்டார்னா சொல்றீங்க...?'' தாளமாட்டாத துயரத்தில் அனிதா விம்மி அழுதாள்.

'ஹார்ட் அட்டாக்' என்பது அப்படிப் பட்டதொரு பொல்லாத நோய். 'இப்பத்தானே பார்த்தேன். அதுக்குள்ளாகவா போய்ட்டார்?'' அப்படின்னு அதிசயப் படறாப்பல, வாட்டசாட்டமானவனையும் ஒரு நொடியில் ஓர் அடியில் வீழ்த்தும் ஆள் கொல்லியம்மா. ஏற்கனெவே இவருக்கு ரத்த அழுத்தம் இருந்துச்சு. எங்கிட்ட வந்து அடிக்கடி சோதிச்சிக்கிறது உண்டு. வயசு வேறே. ஏதாவது தாங்க முடியாத மன அதிர்ச்சி ஏற்பட்டிருக்கலாம். எத்தனையோ காரணங்கள் சொல்லலாம். நம்ம பெரியவங்க சொல்லுவாங்க, போறாத வேளை வந்தா புடலங்காயும் பாம்பாய் மாறிக் கடிக்கும்னு. அயாம் ஸாரி, அம்மா. எனக்கு வேதகிரியை ரொம்பப் பிடிக்கும் நல்ல மனிதர்'' தலையை அசைத்துக்கொண்டு மருந்துப் பெட்டியுடன் வெளியேறி விட்டார்.

''மாமா!...மாமா'' என்று அவள் கதறியதைக்கேட்டு, அடுத்தவீட்டு அம்மாள் ஓடி வந்தாள். ஒரு சில நிமிஷங்களில் அண்டை அயலார் அத்தனை பேரும் அந்தச் சிறு வீட்டுக்குள் நிறைந்து விட்டனர். பங்களாவாசிகள் போல் நமக்கென்ன என்று ஒதுங்கிவிடாது ஒரே தெருவில் வசிக்கிறோம் என்கிற தோழமை உணர்வுடன், எல்லோரும்



நெருங்கிய உறவினர்கள் போல அவளுக்கு உதவ முன் வந்து விட்டனர். பக்கத்து வீட்டுப் பையன், அவளது அண்ணன் சுந்தரத்திற்கு டெலிபோன் செய்ய ஓடினான். ''இந்தாம்மா ஒரு வாய் காப்பியாவது சாப்பிடு. இப்பத் தான் வேலையிலிருந்து வந்திருக்கே. காரியங்கள் ஆக எந் நேரம் பிடிக்குமோ'' எதிர் வீட்டுப் பாட்டி காப்பியுடன் வந்து உபசரித்தாள். அனிதாவின் கன்னத்தில் வழிந்த கண்ணீரைத் தன் முந்தானையால் துடைத்து விட்டாள். அவசரச் செலவுக்கு என்று அவள் எடுத்துப் பீரோவில் துணி ?அடுக்குகள் இடையே செருகி மறைத்து வைத்திருந்த பணம் இப்போது கை கொடுத்தது.

பிரபுவுக்குச் சங்கதியைத் தெரிவித்தார் அண்ணா சுந்தரம். அவன் இருந்த நிலையில் அவனால் வர முடிய வில்லை. வேதகிரி தமது மனைவியின் இறுதிக் காரியங்களைத் தாமே ?செய்து முடித்து விட்டிருந்தார். துக்கத்திற்கு வந்து கலந்து கொண்ட அவரது ஒன்றுவிட்ட அண்ணன் மகன், இப்போது அவருக்கு இறுதிக் 'கடனைச் செய்து முடிக்க வேண்டி வந்தது.

காரியங்கள் மிகவும் எளிய முறையில் நடந்தேறின. இத்தனை காலமாகத் தந்தையைப் போன்ற பாசத்துடன் அவளுக்குப் பெருந்துணையாக, ஆதரவாக இருந்த மாமனார் போன பின்பு, வீடு வெறுமையாகி— வாழ்க்கை சூன்யமாகிவிட்ட துயரத்தில் இடிந்து போய் விட்டிருந்தாள் அவள். அண்ணி கமலா மட்டும் 'காரியங்கள் முடியும் வரை கூடத்துணைக்கு அவளுடன் அந்த வீட்டில் தங்கி யிருந்தாள்.

அண்ணா தினமும் வந்து பார்த்துப் போய்க் கொண்டிருந்தார். அலுவலகம் தந்த லீவு முடிந்து போனது அடுத்த நாள் அவள் வேலைக்குக் கிளம்ப வேண்டும். அனுதாபத்தைத் தெரிவித்துக் கொண்டு அவளைச் சூழ்ந்து கொண்டிருந்த நண்பர்கள், அண்டை அயலார், உறவினர் எல்லோரும் போய் விட்டனர்.

அன்று மாலை கூடத்திலே, அவர் வழக்கமாகப் படுக்கும் அந்தக் கட்டில் அருகே, அவள் கால்களைக் கட்டிக் கொண்டு துயரமே வடிவாக அமர்ந்திருந்தாள். இனி என்ன செய்யப் போகிறோம்—எப்படி வாழ்க்கை நடக்கப்போகிறது என்று வருங்காலம் பற்றிய பயங்கர, எதிர்பார்ப்பில் அவள் உணர்வுகள் தொய்ந்து போய் விட்டிருந்தன.

இன்று ஒரு முடிவுக்கு வந்தாக வேண்டும் என்ற உறுதியுடன் அண்ணனின் மாமியார் சிவகாமி அங்கு வந்திருந்தாள்.

அண்ணனும் அண்ணியும் பேசாமல் பொம்மைகளாக நிற்க, சிவகாமி அம்மாள் தன் வழக்கமான பணக்கார அதிகார தோரணையில் அதட்டலாக ஆரம்பித்தாள்.

"கட்டினவன் கண் அவிஞ்சு போய், தடுமாடிக்கிட்டு ஆஸ்பத்திரில் கிடக்கான். தாங்கிடுவார்னு நம்பிக் கொண்டு வந்து ஒண்டிக் கொண்ட மாமனாரும் பட்டுனு போய்ட்டார்—இனி என்ன செய்யப் போகிறதா உத்தேசம்?" ஓங்கின குரலில் மிரட்டலாகக் கேட்டாள்.

அண்ணாவுக்குக் கேட்கத் துணிவில்லை—மாமியாரை ஏவி விட்டிருக்கிறாரே? அனிதாவுக்குக் கோபமும் துக்கமும் பொத்துக் கொண்டு வந்தன.

"இங்கேயே இருப்பதாக உத்தேசம்" அழுத்தமான குரலில் சொல்லிவிட்டுச் சிவகாமி அம்மாளை உறுத்துப் பார்த்தாள்.

"தனியா காலந்தள்ள முடியும்னு நினைக்கிறியா?"

"என் மாமனார் என்னை நடுத்தெருவில் நிறுத்திட்டுப் போகலை, இந்த வீட்டை என் பேருக்கு எழுதி வச்சிருக்கார். பாங்கியில் ஒரு கணிசமான தொகை 'பிக்ஸட்டில்' என் பேருக்குப் போட்டு வச்சிருக்கார். மாமியார் நகைகள் கொஞ்சம் இருக்கு. என் வேலை இருக்கு எல்லாத்தையும் விட என் மனத்திலே துணிவிருக்கு—"



"தனியா இருந்தா ஊர் உலகம் என்ன சொல்லும் கண்டபடி பேசுவாங்க தெரியுமா?"

"பேசட்டும், வாய் வலிக்கிற வரை பேசட்டும். இத்தனை வசதிகள் இருக்கிறப்போ நான் ஏன் அண்ணன் வீட்டுக்கு அடிமைப் படணும் சொல்லுங்கோ?"

"ரொம்ப திமிர் பிடிச்சவ நீ. அதனால்தான் இத்தனை நாளும் நாங்க யாரும் உன்னை வந்து பார்க்காம ஒதுக்கி வச்சிருந்தோம். இப்ப ஒரே அடியா ஒதுக்கிடறோம். நீ ஏதோ ஒரு திட்டத்தோடதான் தனியா இருக்க ஆசைப் படறே... எனக்கு நல்லாவே புரியுது..."

"புரிஞ்சா சரி. நான் எடுத்துட்டிருக்கும் முடிவை யாரும் மாத்த முடியாது. நீங்கள்ளாம் வந்து என் மாமனார் காரியங்களைச் செய்து முடிக்க உதவினதுக்கு ரொம்ப நன்றி—" தீர்மானமாகக் கூறிவிட்டு அனிதா எழுந்தாள்.

"அப்போ என்னத்துக்கு நிக்கிறீங்க? கிளம்புங்க. இந்தப் பிடிவாதக்காரியோட நமக்கென்ன வேலை, எப்படியோ கெட்டழிஞ்சு கிழக்கே தலை விரிக்கட்டும். இன்னியோட உறவை வெட்டிக் கொள்வோம்." கோபத்தில் இரைந்த சிவகாமி மகளையும் மருமகனையும் தள்ளிக் கொண்டு வெளியேறி விட்டாள்.

கதவைத் தாளிட்டுக் கொண்டு உட்கார்ந்து அனிதாவுக்குத் தன்னந் தனியாக அந்தத் துயரத்தில் பளுவைத் தாங்கிக் கொள்ள இயலவில்லை. கட்டிலின் ஓரத்தைப் பிடித்துக் கொண்டு, "மாமா! என்ன சொல்றாங்க கேட்குதா மாமா?" என்று குமுறியபடி, குலுங்கி அழுதாள்.

## 5

நாட்கள் வேகமாக நகர்ந்தன. ஆரம்பத்தில் எதிர் வீட்டுப் பாட்டி பஞ்சரத்தினம், அவள் வேறு ஏற்பாடு

செய்யும் வரை நாள் முழுவதும் அங்கேயே தங்கியிருக்கச் சம்மதித்திருந்தாள். ''சின்ன வயசுப் பொண்ணு தனியா இருக்கா. கூட நீங்க போய்த் துணை இருங்கோ அத்தை' ன்னு தன் மருமகள் அநுதாபப்பட்டு அனுப்பியதாகச் சொன்னாள். ஆனால் உண்மை வேறு. வாய்க்கு ருசியாகச் சாப்பாடும் வேளைக்குக் காப்பியும் பலகாரமும் உட்கார்ந்த இடத்திலே அனிதா கொண்டு வந்துகொடுத்து உபசரிப்பதை ஏற்று மகிழ்ந்து கொண்டு வெறும் காவல் தெய்வமாக அந்த வீட்டுக் கூடத்தில் காலை நீட்டிக் கொண்டு வெற்றிலைப் பாக்கை உரலில் இடித்துக் கொண்டு உட்கார்ந்திருக்கும் வேலை அவளுக்கு மிகவும் பிடித்திருந்தது. சதா சிடுசிடுக்கும் மருமகளைப் பார்க்காமல் சில நாட்களாவது அக்கடா என்று எதிர் வீட்டுக்குள் மறைவாக இருக்கலாம் என்ற எண்ணமும் கூட

இரண்டு வாரங்கள்தான் எதிர் வீட்டு மருமகள் பொறுமையாக இருந்தாள். ''சோத்துக்காக எத்தனை நாள் ஒருத்தி வீட்டுக்கு நாய்போல இவங்க போய்க்காவல் காத்துக் கிட்டிருக்க முடியும்? உங்கம்மாவைக் கூப்பிட்டு அதட்டி வையுங்க'' கணவனை ஏவி விட்டாள்.

மகன் வாய்க்குப் பயந்த பஞ்சரத்தினம் பின்னர், இரவு வேளைகளுக்கு மட்டும் துணையாகப் படுத்துக் கொள்ள வந்து போய்க் கொண்டிருந்தாள். ஒரு மாத காலத்துக்குப் பின்னர் அதுவும் நின்று போயிற்று.

''வயதான கிழவி நான். உன் மாமனாருக்கு வந்தது போலத் திடீர்னு ஏதாச்சும் வந்துட்டா என் மகன் மருமகள் இருவரும் பக்கத்திலே இல்லாட்டா நல்லாயிருக்காதம்மா. உன் உறவுக்காரங்களைக் கூட்டி வச்சுக்கோ உன் புருஷனுக்கும் உனக்கும் மனத்தாங்கல் அதனாலே பெத்த அப்பனுக்குக் கொள்ளி போட வரலைன்னு பேசிக்கிறாங்க. எனக்கு வம்பு தும்பு பிடிக்காது. எதுக்குச் சொல்றேன்னா, நீ தனியா இந்த



வீட்டிலே, இந்தத் தெருவிலே ரொம்ப நாள் இருக்க முடியாதம்மா. கண்டவங்க கண்டபடி பேசத் தொடங்கிடுவாங்க'' என்று கூறிவிட்டுத் தன் தகரப் பெட்டி, வெண்கல லோட்டா, கைத்தடி இத்யாதிகளை எடுத்துக் கொண்டு ஒருநாள் காலை கிழவி புறப்பட்டுத் தன் வீட்டுக்குப் போய் விட்டாள்.

அன்று இரவு அவள் முதல் முதலாகத் தன்னந்தனியே வீட்டின் வாயில் கதவைத் தாளிட்டுக் கொண்டு கூடத்தில் படுத்து உறங்க வேண்டியிருந்தது.

நாளின் பெரும் பொழுதை அலுவலகத்தில் கழித்து விடும்போது தெரியவில்லை. வீட்டுக்கு வந்ததும் அதுவும் மழை பெய்யத் தொடங்கிவிட்ட இரவு வேளைகளில், கும்மென்று மனத்தை இறுக்கிய தனிமையில் தன் நிழலைக் கண்டே அரண்டபடி அவள் உறங்கினாள். இரண்டு வார காலம் அப்படித் தனித்தனியாக அந்த வீட்டில் அவள் வாழ்ந்து பார்த்தாள்.

அது சுலபமாகத் தெரியவில்லை. பங்களாவாசிகள், அடுத்த வீட்டவர்களுக்குச் சட்டென்று உதவ முன் வராமல் ஒதுங்கிக் கொள்வார்கள் என்பது எத்தனை உண்மையோ அதைப்போல், தெரு வீட்டில் உள்ள அண்டை அயலார் ஆபத்துக்கு உதவுவார்கள்—அதைப் போலவே அடுத்த வீட்டு வம்புகளைப் பூதக்கண்ணாடி வைத்து ஆராயவும் செய்வார்கள்.

அன்று மாலை அவள் தணிகாசலம் தெருவுக்குள் நுழைந்தபோது பகல் முழுதும் கொட்டிய மழை அடங்கி விட்டிருந்தது. தெருவில் ஓரமாக இன்னமும் சிற்றுப் பாய்ச்சலாக நீர் ஓடிக்கொண்டிருந்தது. தெருப்பிள்ளைகள் அதில் காகிதக் கப்பல் விட்டு விளையாடிக் கொண்டிருந்தனர். வீட்டுத் திண்ணையில் காலை நீட்டியபடி உட்கார்ந்திருந்த வயதான இரண்டு பெண்கள் உரக்கப் பேசிக் கொண்டிருந்தனர்.

''இந்தப் பொண்ணு இப்படிப் பிடிவாதமா ஏன் தனியா இந்த வீட்டிலே இருக்கணும்?''

''ஏதாவது விஷயம் இருக்கும். இல்லாட்டி ஒரு வயசுப் பொண்ணு தனியா பெரிய வீட்டிலே ஏன் தங்கியிருக்கணும்.''

''நான் கலியாணம் கட்டிக்கிட்டு வந்தப்போ இருந்த பட்டணமாவா இருக்கு இப்போ? இந்தக் காலத்திலே பெண்கள் என்னென்னவோ செய்கிறாங்க, சொல்ல வாய் கூசுது. இந்த விலைவாசியிலே சாப்பிடவும்—உடுத்தவும் காசு வேண்டாமா?... ஒவ்வொருத்திகள் எப்படி எப்படியோ சம்பாதிக்கிறாங்களாம், என் பேத்தி கதையா சொல்றா... கேட்டு அசந்து போயிட்டேன்.''

''சே!... இந்தப் பொண்ணு ரொம்ப அடக்கமானவ. நாமும் ஒரு வருசமா இவ நடவடிக்கைகளைப் பார்த்துக்கிட்டுத்தானே இருக்கோம்?''

''அப்போ காபந்து பண்ண மாமனார் வீட்டோட இருந்தார். இப்போ அவ வெச்சதுதானே சட்டம், வயசு ஒண்ணு இருக்கே. அதை மறந்துட்டியே?''

''பேசாம இரு? அந்தப் பொண்ணு காதிலே பட்டா வீண் பொல்லாப்பு.''

அனிதாவின் காதுகளில் பேசியது எல்லாம் கேட்டது. அவர்கள் மேல அவள் கோபப்படுவதிலோ, ஆத்திரப்படுவதிலோ அர்த்தம் இல்லை.

தன்னந்தனியே அவள் வாழத் துணிந்து விட்டதைப் பற்றித் தெருவே கட்டாயம் மெல்ல விமரிசிக்கத்தான் தொடங்கும். முதலில் அனுதாபப்பட்டவர்கள், இப்போது அவளைச் சந்தேகத்துடன் பார்ப்பார்கள்.

பனை மரத்தடியில் உட்கார்ந்து பால் குடிக்கும்சங்கதியாகி விட்டது அவளது வாழ்க்கை.

தன்னந்தனியாகத் 'துணிவே துணை' என்றுதான் நான் வாழ்கிறேன் என்று அவள் எத்தனைதான் விளம்பரப்படுத்திக் கொண்டாலும் 'அவள் ஒரு பெண்' என்பதால் கட்டாயம் அவளைப் பற்றிக் கசமுசாக்கள் கிளம்பத்தான் செய்யும்.



இதே நிலையில் ஒரு ஆண் இருந்தால் இப்படி ஒரு விமரிசனம் எழாது. ஏன் என்றால் சமூகத்தின் பார்வையில் ஆணுக்கு ஒரு தனி அந்தஸ்து—பெண்ணுக்கு ஒரு தனித்தகுதி என்று பிரித்து வைக்கப்பட்டிருக்கிறதே? தெருவில் நடக்கும்போதுதான் அமைதி இருந்ததா?

வெறுமையாக, சூன்யமாகத் தென்பட்ட வீட்டுக்குள் இருட்டிய பின் மூலை முடுக்குகளில் தெரிந்த நிழல்கள் எல்லாம் பூதாகாரமெடுத்து அவளை பயமுறுத்தின.

காற்றிலே பறந்து படபடத்துக் கொண்டு முற்றத்துக் கம்பி மீது வந்து தொத்திக் கொண்ட பட்டம் அவளை ஒருநாள் எப்படி மிரளச் செய்துவிட்டது.

யாரோ திருடன் கம்பிகளைக் கத்தரித்துக் கொண்டு முற்றத்தில் குதிக்க முயலுவதாக எண்ணி, நெஞ்சு படபடக்க, அறைக்குள் ஓடிச் சென்று கதவைத் தாளிட்டுக் கொண்டு...அன்று இரவு முழுவதும் அவள் உறங்கவே இல்லை...

தெருவில் பலத்த காலடிச்சத்தம் கேட்டாலும் பயமாக இருந்தது. வீட்டின் பின்புறமிருந்த கையகலத் தோட்டத்திலே கிணற்றுக்கு அப்பால் வளர்ந்து நின்ற வேப்ப மரத்தில், இரவில் ஒரு கிளையிலிருந்து இன்னொரு கிளைக்குச் சிறகடித்துக் கொண்டு கிரீச்சிட்டபடி தாவிய பறவை எழுப்பிய ஒலியைக் கேட்டு, அதென்ன சத்தம் என்று நடுங்கிப் போனாள்.

உஹூம்...அவள் தன்னந்தனியாக அந்த வீட்டில் நீண்ட நாட்கள் இருக்க முடியாது.

இப்படிச் செய்தால் என்ன? வேலைக்குப் போகும் பெண்களுக்கு என்ன ஹாஸ்டல்கள் பரவலாகிக் கொண்டு வருகின்றனவே! அந்த மாதிரியான ஹாஸ்டலுக்குள் அவள் மற்றப் பெண்களுடன் கூட்டத்தோடு கூட்

மாகத் தங்கிக் கொண்டால் இப்படி நடுங்கிச் சாகத் தேவையில்லை. வீட்டை நிர்வகிக்கும் பொறுப்பு இல்லை. வேலை செய்துவிட்டு, ஹாஸ்டலுக்கு வந்து எல்லாருக்கும் சமைத்திருக்கும் உணவை எல்லாருடனும் சேர்ந்து உட்கார்ந்து சாப்பிட்டுவிட்டு, அவளுக்கென்று ஒதுக்கப்பட்டிருக்கும் அறையில் சிவனேயென்று படுத்துறங்கலாம்.

இரவு வேளையில் காவலாளிகள் ஹாஸ்டலைப் பாதுகாக்க நியமிக்கப்பட்டிருப்பார்கள். இருட்டுப் பயம் கிடையாது! மதிப்புக் கெடாமல், பிறர் வாயில் விழுந்து புரளாமல், தனிமையில் தவிக்காமல், நிம்மதியாகச் சுதந்தரத்துடன் வாழ முடியும். நாளைக்கே அப்படிப்பட்ட ஹாஸ்டல்கள் சிலவற்றைப் பற்றி விசாரிக்க வேண்டும். அந்த வீட்டை ஒரு நல்ல குடித்தனக்காரருக்கு வாடகைக்கு விட்டு விடவேண்டும்.

பலபல எண்ணியபடி போர்வையைத் தலைவரை வழிய விட்டுக் கொண்டு அவள் தூங்கிப் போனாள்.

மறுநாள் பகல் உணவு நேரத்தின்போது அலுவலகத் தலைமைக் கணக்கரிடம் அனுமதி பெற்றுக் கொண்டு, அவள் டெலிபோன் டைரக்டரியைப் புரட்டி, அவள் கேள்விப்பட்ட சில பெண்கள் ஹாஸ்டல்களின் தொலைபேசி எண்களை ஒரு காகிதத்தில் குறித்துக் கொண்டாள்.

ஒரு ஹாஸ்டலின் எண்ணைச் சுழற்றி விசாரிக்கஅவள் டெலிபோன் அருகே நெருங்கியபோது மணி அடித்தது.

''ஹலோ! யார் அனிதாவா? இந்த வேளையில் நீ ஆபீஸில்தான் இருப்பேன்னு தெரியும்'' அண்ணா சுந்தரம் மறு முனையில் அவளை அழைத்தார்.

ஒரு மாத காலத்திற்கு மேல் மௌனமாக இருந்து விட்டு இப்போது திடீரென்று அண்ணா அவளை எதற்கு அழைக்கிறார்?



''அண்ணி, குழந்தைகள் எல்லோரும் சுகந்தானே?'' சன்னமான குரலில் விசாரித்தாள் அவள்.

''பகவான் கிருபையிலே நாங்க எல்லோரும் சுகமாக இருக்கோம். உன் கஷ்டம்தான் விடியாத கஷ்டமாயிடும் போல இருப்பதாலே உன்னை எச்சரிக்கத்தான் போன் செய்தேன்.''

''புரியும்படி சொல்லுங்கோ அண்ணா'' கேட்டு முடிப்பதற்குள் இருதயம் வாய்க்குள் வந்து விட்டது போன்ற அதிர்ச்சி அவளுக்கு.

''அப்போ உனக்கு ஒரு சங்கதியும் தெரியாதுன்னு சொல்றே? உன் புருஷன் பிரபு எதை நம்பிகிட்டு அந்தப் பிரபலமான ரம்யா நர்ஸிங் ஹோமில் போய் படுத்துக்கிட்டான்னு தெரியலை. ஒரு சமயம் அவனது வைத்தியச் செலவையெல்லாம் அந்த ஹரிணி கவனிச்சுப்பான்னு நினைச்சான் போலிருக்கு! '

எச்சிலை விழுங்கிக் கொண்டாள் அனிதா. ''அந்த ஹரிணி படப்பிடிப்பிலே மும்முரமாக இருப்பதாகப். பத்திரிகையில் படிச்சேன.''

''அதோட அவள் தன் திருமணத்தைப்பத்திக்கூட மும்முரமாக இருப்பதைப்பத்தி படிச்சிருப்பியே! பிரபல நடிகர் லோகேந்திரனுடன் அவள் இப்போ ஜோடியாப் பல படங்களில் நடிக்கிறா. விரைவில் அவர்களது திருமணம் நடக்கப் போகிறதாகப் பத்திரிகைகள் பறை சாற்றிக் கொண்டிருக்கே?''

''மாலைமதியில் அப்படி ஒரு செய்தியைப் படிச்சேன் அவள் இஷ்டம் அவள் யாரை வேண்டுமானாலும் கல்யாணம் செய்துப்பா. நமக்கென்ன அண்ணா அதைப் பத்தி?''

''அவ சங்கதியை விடு. அதைப்பத்திப் பேச நான் அவசரமா இப்போ போன் பண்ணலை. நம்ப ரகுபதியைத் தெரியுமில்லையா.''

"அமெரிக்காவிலே மகன்—மருமகள் இரண்டு பேரும் டாக்டராக வேலை பார்க்கிறாங்கன்னு பெருமையா பேசுவாயே, அந்த ரகுபதியையா."

"அவரேதான், அவருக்கு ஒரு சின்ன ஆப்ரேஷன்—அதுக்கு ரம்யா நர்சிங்ஹோமில் அனுமதித்துக் கொண்டு, செய்துக்கணும்னு மகன் கடிதாசி போட்டிருந்தானாம். பணம் அனுப்பியிருந்தானாம். அதனால் அவர் அந்த நர்ஸிங்ஹோமில் அனுமதிக்கப்பட்டிருந்தார். அவரைப் பார்க்க நேத்து போயிருந்தேன்."

அனிதாவின் நெஞ்சு வேகமாகத் துடித்தது.

"அண்ணா! அப்படியே நீங்க அவரையும் போய்ப் பார்த்தீங்களா?" ஆவலை அடக்கமாட்டாது கேட்டு விட்டாள்.

"அவனை நான் ஏன் போய்ப் பார்க்கணும்? அவன் கூட எப்பவும் ஒரு பட்டாளம் சிநேகிதன்னு ஜால்ரா போட்டுக் கொண்டிருந்தாங்களே, அவர்களில் ஒருவன் கூட இப்போ வந்து பிரபுவைப் பார்க்கிறதில்லையாம். 'ராட்ஸ் ஃபிரம் எ ஸிங்கிங் ஷிப்' என்பார்களே, அது போல அத்தனை பயல்களும் மாயமாகி விட்டான்களாம் அவனோட பீ. ஏன்னு ஒரு செவத்தப் பையன் இருப்பானே தெரியுமா? அவன்கூட நேத்தோட வேலையிலிருந்து நின்னுட்டானாம். சம்பளம் இல்லாம நாயா உழைக்க அவனுக்கென்ன தலைவிதியா? ஏதோ கூடமாட ஆஸ்பத்திரியில் அவனும் ஒத்தாசையா இருந்தான். இப்போ அவனும் போனதும் பிரபுவின் பாடு ரொம்பத் திண்டாட்டமாயிட்டதாம்."

"அண்ணா, இப்போ அவரைக் கவனிக்க ஆஸ்பத்திரியில் யாருமில்லேன்னா சொலறீங்க?" துக்கம் தொண்டையை இறுக்க மெல்லிய குரலில் கேட்டாள்.



"நர்ஸ்கள் இருக்காங்க. அவங்க செய்ய வேண்டியதைச் செய்யறாங்க. ஆனால் நிலைமை ரொம்ப வெட்கக் கேடாகி விட்டிருக்கு. ரகுபதி என்கிட்ட பூரா விவரமும் சொன்னான். ஆஸ்பத்திரியில் வார்ட் பையனிலிருந்து வாசல் கூட்டுகிறவன் வரை சங்கதி நெருப்பாய் பரவி விட்டிருக்கு."

"என்ன சங்கதி அண்ணா?"

"நான் நேரே வந்து பேச வேண்டிய சங்கதி. ஆனால் எனக்கு இன்னிக்கு வர நேரமே இல்லை. அதனாலே அவசரமா, போனிலாவது சொல்லலாம்னு நினைச்சேன்."

"சாயங்காலம் வீட்டுக்கு வந்திருக்கலாமே அண்ணா!" அனிதா ஆர்வத்துடன் கேட்டாள்.

"உன் பிடிவாதமான மறுப்புக்குப் பிறகு நான் உன் வீட்டுக்கு வரவில்லை." மாமியார் சிவகாமி அம்மாளின் உத்தரவு போலும் என்று எண்ணிய அனிதா தன்னுள் எழுந்த வேதனையை விழுங்கிக் கொண்டாள்.

"அவர் இப்போ எப்படி இருக்கார்னு பார்க்க நீங்க அந்த வார்டு பக்கம் கூடப் போகலையா அண்ணா?" சிறிது கோபத்துடன் கேட்டாள் அனிதா.

"நான் போய் பார்த்திருந்தால் பெரிய வம்பில் மாட்டிக் கொண்டிருப்பேன். ரிஸப்ஷனில் அவன் பேரைச் சொல்லிக் கேட்டதுதான் தாமதம். 'நீங்க அவருக்கு உறவினரா? நண்பரா? தெரிஞ்சவரா'ன்னு கேள்வி மேலே கேள்வி போட்டுத் தொலைச்சுட்டா அந்தப் பெண். பெரிய பட டைரக்டர்-ஹரிணியின் வருங்கால கணவன்னு நினைச்சு அந்த நண்பர் பட்டாளத்தை முதலில் அந்தப் பெரிய நர்ஸிங் ஹோமில் அனுமதிச்சுட்டாங்க. மாத முடிவில் வந்த பில்லைக் கண்டதும் பூனைக்கு மணி கட்டுவது யார்னு, கம்பி நீட்டிட்டாங்க அத்தனை பேரும். ஹரிணி கட்டாயம் தன்னைக் கைவிட மாட்டான்னு நினைச்சு, தன் பீ. ஏ. யைப் பில்லோட

அவன் பங்களாவுக்கு அனுப்பி வச்சான் பிரபு. அங்கேயிருந்த கூர்க்காவும் அல்சேஷியன் நாயும், அந்தச் சின்னப் பையனை தெருக்கோடி வரை துரத்தி அடிக்கவே, அவன் ரொம்ப அரண்டு போய் வந்து விழுந்தானாம். டெலிபோன் மூலம் ஹரிணிகிட்ட பேச, பிரபு முயன்ற போது, அவள் வீட்டில் இல்லை என்று அவளது அந்தரங்கச் செயலாளர் போனை டக்கென்று வைத்து விட்டானாம்.

''பிரபு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டபோது அவனுடைய ஃப்ரிப் கேஸ்-டிஜிட்டல் வாட்ச், வைர மோதிரம் மைனர்செயின் இதுகளை ஆஸ்பத்திரி நிர்வாகியிடம் பாதுகாப்பாக வைக்க நண்பன் ஒருவன் கொடுத்திருந்தானாம். பிரபுவிடம் அந்த ஃப்ரிப் கேஸை வாங்கித் திறந்து அதில் வைத்திருந்த நாலாயிரம் ரூபாய்களை அப்படியே சுத்தையாக எடுத்து நர்ஸிங் ஹோம் பில்லைக் கட்டக் கொடுக்கச் சொல்லிவிட்டானாம். இது வரை பில் கிட்டத்தட்ட பதினைந்தாயிரத்துக்கு மேலே ஓடிப் போயிருக்காம். அவனது டிஜிட்டல் வாட்ச், வைர மோதிரம், தங்கச் செயின், அதுகளை ஆஸ்பத்திரி நிர்வாகி அவனிடம் திருப்பித் தரவில்லையாம். பீஸ் எல்லாத்தையும் கட்டி விட்டு அதுகளைப் பெற்றுக் கொண்டுபோகலாம்னு கடுமையாகச் சொல்லி விட்டாராம்.

''பாங்கியில் ஏதாவது பணம் இருக்குமே அண்ணா? அதைக் கொடுத்து...''—அனிதாவின் குரல் அவமானம் துயரம் இரண்டும் தாளாமல் உடைந்தது.

''அந்தக் கண்றாவியை ஏன் கேட்கிறே? 'பிரபல டைரக்டர் பிரபுவின் பாங்கிக் கணக்கில் ஐந்நூறு ரூபாய் தான் இருக்காம். செக் புத்தகத்தில் கையெழுத்துப் போடகூட இப்பப் பார்வை சரியா இல்லையே?''

கன்னங்களின் மீது உருண்ட கண்ணீரைச் சட்டென்று துடைத்துக் கொண்டாள் அனிதா, தொண்டையைச் செருமிக் கொண்டாள்.



''இப்போ பாவம் அவர் என்னதான் செய்யப் போகிறார் அண்ணா?''

''பாவம் என்ன வச்சிருக்கு? செய்த தவறுகளுக்குத் தண்டனையை அனுபவிச்சுக்கிட்டிருக்கான். கலிகாலத்திலே கைமேலே பலன்னு சொல்வாங்க, அது பொய்யாகலே. ஸ்பெஷல் வார்டிலிருந்து ஐயாவை அவங்க இப்போ சாதா வார்டுக்கு மாற்றிட்டாங்க. அதிலும் இடம் இல்லாவிட்டால், வராந்தாவிலே கிடக்கிற ஒரு படுக்கையிலே போட்டுடுவாங்க. அந்த வி.ஐ.பி. கவனிப்பு எல்லாம் போய் இப்போ ஒரு சாதாரண நோயாளிக்குக்கிடைக்கும் கவனிப்புதான் அவனுக்கு கிடைக்கிறது வெளியே தூக்கி எறியாம அவ்வளவாவது கருணை காட்டறாங்களே அதுவே அதிகம்.''

''அந்த நர்ஸிங் ஹோமுக்கு அவர் பாரமாக இருந்தா அவங்க அவரை டிஸ்சார்ஜ் பண்ணிடறதுதானே?''

''எப்படிப் பண்ணுவாங்க? அவன் கொடுக்கவேண்டிய பில்லை முழுவதும் கட்டாதவரையில் வெளியே அனுப்ப மாட்டாங்க, இறந்து போனால்கூட உடலைக் கேட்க வரும் உறவினர்கள் பில் முழுவதையும் கட்டினால்தான் உடல் கிடைக்கும். தனியார் மருத்துவ மனையில் ஓரளவு தான் வைத்தியங்கள் தர்ம சிந்தனையுடன் இருக்கமுடியும். மருந்துகள், நர்ஸ்களின் கவனிப்பு, கட்டில் வாடகை இவைகளுக்காவது பணம் தந்துதானே ஆகணும்? நாதியில்லாதவன் ஏழையென்று சொல்லிக்கொண்டு அரசு ஆஸ்பத்திரியில் தர்ம வைத்தியம் செய்துக்கப் போயிருக்கணும். இவன் லக்ஷணத்துக்குத் தனியார் மருத்துவமனை கவனிப்பு எதற்கு?''

''இந்த விவரம் எல்லாம் சொன்னதுக்கு நன்றி அண்ணா.''

''உன் நன்மைக்கு, உன்னை எச்சரித்து வைக்க நான் இதுகளைச் சொன்னேன். அடுத்தபடியாக அந்த ஆஸ்பத்

திரி நிர்வாகி உன் முகவரியைக் கண்டு பிடிச்சு அந்தப் பில்லை உனக்கு அனுப்பலாம் இல்லையா?''

''அனுப்பட்டும்...''

''பைத்தியகாரத்தனமாகப் பேசாதே. அத்தனை ரூபாய்க்கு நீ எங்கே போவே? வீட்டை மூடிவிட்டு நீ எங்களோடு வந்து தங்கி விடு. ஆஸ்பத்திரி செலவுக்கு நீ பொறுப்பாளி இல்லை என்று வக்கீல் வச்சு என்னால் வாதாட முடியும் ஏற்கனவே அவன் உன்னிடமிருந்து விவாகரத்துக் கோரி அனுப்பின வக்கீல் நோட்டீஸ் என் கிட்ட பத்திரமா இருக்கு. அதைக் காட்டி உனக்கும் அவனுக்கும் இரண்டு வருஷமா எந்தவிதமான தொடர்பும் கிடையாது; ஒரு வருஷகாலத்து மேலே பிரிஞ்சு இருந்து சங்கடமில்லாம விவாகரத்து வாங்க இருந்தீங்க; அந்தச் சமயம் பார்த்து இந்த விபத்து நேர்ந்தது. அதனாலே அந்தப் பில்களைக் கட்டுவது உன் பொறுப்பில்லேன்னு வாதாட முடியும்.''

''அப்ப அவர் கதி?''

''அதுக்கு மேலே வச்சுக் கட்டுபடியாகாதுன்னு அவரை நர்ஸிங்ஹோமிலிருந்து வெளியே அனுப்பிவிட்டு, வாங்க அந்தப் பிரச்சனை, வசூலிக்க முடியாத கடன் என்று நஷ்டக் கணக்கில் எழுதிடுவாங்க.''

''பார்வை தெரியாம, பணமும், இல்லாம, இருக்க இடமும் இல்லாம அவர் என்ன அண்ணா செய்வார்?''

''இதைப் பத்திச் சிந்திக்க வேண்டியவள் ஹரிணி, அவள் இப்போ ஜாம்னு கல்யாணம் செய்துக்கப் போறா. ஈவு இரக்கமில்லால உன்னைப் பிறந்த வீட்டுக்குத் துரத்தியடிச்சவனைப் பத்தி நீ ஏன் கவலைப்படணும்?''

''ஹரிணி வெறும் காதலி, நான் கட்டின மனைவி. இரண்டுக்கும் ரொம்ப வித்தியாசம் இருக்கே, அண்ணா!



உங்களுக்கு ஏதாச்சும் சிரமம் வந்துட்டா அண்ணி உங்களை விட்டு நகர முடியுமா?''

''அண்ணியை நான் என் மனைவின்னு தங்க தாம்பாளத்திலே வச்சுப் போற்றி காப்பாத்தறேனே! பிரபு உன்னை எப்படி நடத்தினான்?''

''இதெல்லாம் சொல்லத்தான் இப்போ டெலிபோன் செய்தீர்களா?''

''ஆஸ்பத்திரி நிர்வாகி அவனை நிர்பந்தத்தில், என் மனைவி வேலை செய்கிறாள்; அவளுக்குச் சொந்தமான வீடு இருக்கு. பில்களை அவளுக்கு அனுப்புங்கோ, கட்டிவிடுவான்னு உன்னையும் சங்கடத்தில் மாட்டிவிடுவான்; பிரபு சுத்த அயோக்கியன். நண்பர்களைக் கெட்டு ஏமாந்து, ஹரிணிக்கு ஆள் அனுப்பித் தோல்வியடைஞ்சு, இப்போ தனியா தவிச்சிண்டிருக்கான். கட்டாயம் உன் உதவியை நாடுவான். நீ இது சமயம் என் பாதுகாப்பில் இருப்பதுதான் நல்லது. இன்னிக்குச் சாயந்திரமே வீட்டைப் பூட்டிட்டு ஒரு ஆட்டோ எடுத்துக்கிட்டு நம்ம வீட்டுக்கு வந்துடு.''

''அது முடியாத காரியம் அண்ணா. அன்னிக்கே என் முடிவைச் சொல்லிவிட்டேனே''

''தனியா நீ அந்த வீட்டில் இருப்பது தப்பு. ஏதாவது உன் மண்டையில் உதயமாகுதா? ஈவனாவது போக்கிரி ராத்திரி வேளையில் வந்து கதவைத் தட்டினால்?''

''வேலை பார்க்கும் பெண்கள் ஹாஸ்டல் ஒன்றில் தங்கிக் கொள்ள முடிவு செய்து விட்டேன். அந்தப் பயம் உங்களுக்கு வேண்டாம்?''

''உனக்கு ரொம்பப் பிடிவாதம்! அனிதா. இது நல்லதுக்கில்லே?''

''நானே சம்பாதித்து என்னைக் காப்பாத்திக்கிற நிலைக்கு வந்த பிறகு நான் ஏன் உங்க பாதுகாப்பை

நாடணும்? அண்ணிக்கும் உங்க மாமியாருக்கும் அடிமையாக இருக்க நான் விரும்பலே.''

பட்டென்று போனை அண்ணா சுந்தரம் மறுபக்கத்தில் வைக்கும் ஓசை காதைக் கிழித்தது.

நல்லவேளை பகல் உணவு நேரம். இந்த அண்ணா இப்படியா அரைமணிக்கு மேல் போனில் பேசுவார்? யாராவது அவசரமாக அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளக் கூப்பிட்டிருந்தால்?... சே! சே! இங்கிதமே தெரியாத மனிதர்.

எண்ணியபடி முகத்தில் வழிந்த வியர்வையைப் புடவைத் தலைப்பால் அழுத்தித் துடைத்துக் கொண்டாள்.

அதற்குப் பின்னர் அவளுக்கு டிபன் டப்பாவைத் திறக்கக்கூட மனம் இருக்கவில்லை.

நண்பர்களால் கைவிடப்பட்டு, காதலியால் புறக்கணிக்கப்பட்டு, பார்வையை இழந்து, இருக்க இடம் இல்லாமல் தவிக்கும் பிரபுவை நினைத்துக் கொண்டபோது அவள் நெஞ்சு இரண்டாக வெடித்து விடும்போல் துயரம் அழுத்தியது. பின்னறைக்குச் சென்று முகத்தைப் பச்சைத் தண்ணீரில் கழுவிக் கொண்டாள். அலைந்து புரண்டுவிட்ட கூந்தலைச் சீராக்கிக் கொண்டு, பையைத் துழாவிப் பிளாஸ்டிக் குங்குமச்சிமிழை எடுத்துத் திறந்து விரலால் தொட்டு, நெற்றியில் 'பளிச்'சென்று பொட்டை வைத்துக் கொண்டாள்.

வாஷ் பேசினுக்கு மேலிருந்த கண்ணாடியில் பார்த்துக் கொண்டபோது அவளது கண்கள் கலங்கியிருந்தன.

''உசிரோட இருக்கும்போது எனக்கு அப்பாவா இருந்தீங்க மாமா! இப்போ தெய்வமாயிட்டீங்க. இந்த ஒரு சௌபாக்கியத்தை மட்டும் எனக்குக் குறைச்சுடாமக் காப்பாத்திக் கொடுங்க, மாமா'' பொட்டை ஒழுங்கு



செய்த விரல் நடுங்க அவள் தன்னுள் பொங்கிய அழுகையை அடக்கிக்கொண்டு பிரார்த்தித்துக் கொண்டாள்.

அலுவலகம் துவங்கிவிட்ட அறிகுறியாக ஊழியர்களின் காலடி ஓசையும் பேச்சும் சிரிப்பும் கேட்கவே அவள் தன்னைச் சமாளித்துக் கொண்டு வேகமாக வெளியேறித் தன் ஆசனத்தில் அமர்ந்து கொண்டாள். ஆபீஸ் பையன் மேஜை மீது வைத்துப் போயிருந்த தண்ணீர் டம்ளரை எடுத்து ஒரே மூச்சு தாகம் அடங்கக் குடித்தாள்.

நெஞ்சம் வெறுமையாகிவிட்ட ஒரு பிரமையில் உடம்பு தக்கையாகிவிட்டது போன்றதொரு திகைப்பில் அவள் மிகவும் சிரமப்பட்டு அன்றைய வேலையைக் கவனிக்க நேர்ந்தது.

ஓட்டமும் நடையுமாக வீட்டையடைந்தவள் பரபரப்புடன் குளியலை முடித்துக் கொண்டாள்.

'அது பிரபலமான நர்ஸிங்ஹோம். உன்னைப் பார்த்ததும் செக்யூரட்டி ஆளே கழுத்தைப் பிடித்துத் தள்ளினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை' என்று அன்று மாமனார் கூறிய அறிவுரை மனத்தில் தோன்றவே, அவசரமாக மாமியாரின் இரும்புப் பீரோவைத் திறந்தாள். மேல் அடுக்கிலிருந்த பட்டுப் புடவைகளில் ஒன்றை எடுத்துக் கட்டிக் கொண்டாள். அடுப்பை மூட்டி தேநீர் தயாரித்துப் பிளாஸ்க்கில் நிறைத்துக் கொண்டாள். அடுப்பை அணைத்துச் சமையலறையைச் சடுதியில் ஒழுங்கு செய்து விட்டு, வீட்டைப் பூட்டிக் கொண்டு வெளியே வந்தாள். தெருக் கோடியில் சாலை முனையிலிருந்த கடையில், மூன்று சாத்துக்கொடி பழங்களும், இரண்டு ஆப்பிளும் வாங்கித் துணிப்பையில் போட்டுக் கொண்டாள். பஸ் நிலையத்தருகே நின்று கொண்டிருந்த ஆட்டோ ஒன்றை அமர்த்திக்கொண்டு ரம்யா நர்ஸிங் ஹோமுக்குப் புறப்பட்டாள்.

அது பார்வையாளர் நேரம். தலைமை டாக்டர் தமது அறையில் இருந்தார். ரிஸப்ஷனிஸ்டிடம் அவள்

எப்படியோ பேசி அனுமதி வாங்கி, மெல்ல அந்த அறைக்கு முன் வந்து லேசாகக் கதவைத் தட்டிவிட்டு, மெல்லத் திறந்து கொண்டு ஏ. சி. யில் குளிர்ந்து கொண்டிருந்த அறைக்குள் நுழைந்தாள். சுழல் நாற்காலியில் கட்டுக் கட்டாகத் தம்முன் மேஜையில் கிடந்த ஃபைல்களைப் புரட்டிக் கொண்டிருந்த டாக்டர் நிமிர்ந்தார்.

ஒரு பெரிய நர்ஸிங் ஹோமில் உள்ள நோயாளிகளின் நலன்களைப் பாதுகாக்கும் பொறுப்பு, அவரது இளமையைக் குடித்து விட்டது போன்ற ஒரு தோற்றம். கண்களைச் சுற்றி இரு வளையங்கள்—கன்னத்திலே கோடுகள் வளர்த்து விட்டிருந்த முதுமை.

கனமான காஞ்சிபுரப் பட்டில் கம்பீரமாகத் தெரிந்த அந்தப் பெண்ணைக் கண்டதும், அவரது முகத்தில் தெரிந்த கடுமை சட்டென்று மறைந்தது. ''அவசரமாக என்னைப் பார்க்கணும்னு சொன்னீங்களாமே! உட்காருங்க'' எதிரே கிடந்த நாற்காலியைக் காட்டி உபசரித்தார்.

''டைரக்டர் பிரபுவின் மனைவி நான். அவர் இந்த ஆஸ்பத்திரிக்குத் தர வேண்டிய பில் பாக்கியை தெரிந்து கொண்டு அதற்கு ஏற்பாடு செய்ய வந்திருக்கேன்.''

பிரபுவைப் பற்றித் தீவிரமாகச் சிந்தித்து, அடுத்தபடி எடுக்க வேண்டிய நடவடிக்கைகளைப் பற்றிக் கலக்கப் பட்டுக் கொண்டிருந்த அவரது முகம் சட்டென்று தெளிவு பெற்றது.

''அப்படியா சந்தோஷம் ஒரு நிமிஷத்திலே கேட்டுச் சொல்றேன்.''

பக்கத்திலிருந்த இண்டர் காமில் கணக்கு வழக்குப் பகுதியிலிருந்த ஒரு கணக்கரை பின் பற்றிய விவரத்துடன் வரும்படி அவசரமாக அழைத்த சில நிமிடங்களில் உள்ளே வந்த கணக்கர், ஒரு தடிமனான காகித உறையை மேஜை மேல் வைத்துவிட்டுப் போனார்.



அதைத் திறந்து ஆராய்ந்த டாக்டர், ''இந்த வார முடிவுடன் பதினேழாயிரத்து எண்ணூற்றைம்பது ரூபாய் பாக்கியாக நிற்கிறது'' என்றார்.

தன்னுள் எழுந்த கலவரத்தைச் சமாளித்தபடி புன்முறுவல் பூத்தாள் அவள். ''இரண்டு தினம் அவகாசம் தந்தால் பில் பூராவையும் கட்டிவிட ஏற்பாடு செய்து விடுவேன். இங்கே இனி தங்கவேண்டிய அவசியம் இல்லை என்று நீங்க அபிப்பிராயப் பட்டால் அவரை வீட்டுக்கு அழைத்துப் போக விரும்புவேன்'' என்றாள் மெல்லிய குரலில்.

''அவரை டிஸ்சார்ஜ் செய்ய ஏற்பாடு செய்கிறேன். அவரது சிகிச்சை விவரங்களை டைப் செய்து எல்லாம் தயாராக்க இரண்டு நாள் ஆகும். அதற்குள் நீங்கள் பில் பணத்தைக் கொண்டு வந்து கட்டி விட்டு அவரை அழைத்துப் போகலாம்'' என்றார் டாக்டர் மகிழ்ச்சியுடன்.

''ஒரு சிறு உதவி தேவை, இப்போது அவரை நான் பார்க்க வேண்டும். எந்த வார்டில் இருக்கிறார்?'' என்று அவள் முடிக்கவில்லை. டைரக்டர் பிரபுவைப்பற்றி ஓரளவு தெரிந்து கொண்டிருந்த டாக்டர் தமக்குள்ளேயே முறுவலித்துக் கொண்டார். நல்லவேளை, இந்தக் கஷ்ட காலத்தில் மனைவியாவது முன்வந்து பில் கடனை அடைக்க ஒப்புக் கொண்டாளே என்றவரை அவருக்கு நிம்மதி. பஸ்ஸரை அழுக்கினார். ஆஸ்பத்திரி பையன் உள்ளே வந்து சலாம் போட்டான்.

''அம்மாவை டைரக்டர் பிரபு இருக்கிற ஜி வார்டுக்கு அழைச்சிட்டுப் போய் அவரைக் காட்டு'' என்று உத்தரவிட்டார்.

மூன்றாவது தளத்தில் கோடியிலிருந்த பொது ஆண்கள் வார்டில், ரணச்சிகிச்சை கேஸ்கள் இருந்த பகுதியில் வார்டின் கோடியில் படுக்கை மீது சாய்ந்த வாக்கில்

உட்கார்ந்திருந்த கணவனைத் தூரத்திலிருந்து பார்த்த போதே அவள் கண் கலங்கிப் போனாள்.

ஆஸ்பத்திரி உடை மேலே தொங்க, உடல் பாதியாகிக் கன்னங்கள் உள்ளடங்கி, கருப்புக் கண்ணாடியணிந்து நெற்றியில் லேசான தையல் வடுவுடன் உட்கார்ந்திருந்த பிரபுவிடம் வார்ட் நர்ஸ் கடுமையான குரலில் பேசிக் கொண்டிருந்தாள். ''இன்னமும் டீ சாப்பிடலையா. இப்படி அழுச்சாட்டியம் பண்ணினால் யாருக்கு நஷ்டம்?' என்று அதட்டினாள் நர்ஸ். எனக்குச் சூடான தேநீர்தான் சாப்பிடப் பிடிக்கும். இது ஆறிக் கிடக்கு. எடுத்துட்டுப் போகச் சொல்லுங்க. ஒரு வேளை டீ சாப்பிடாட்டாக் குடியா முழுகிடும்?'' விரக்தியாகப் பதிலளித்தான் பிரபு.

'உங்க இஷ்டம்' என்று அசட்டையாகப் பதிலளித்த நர்ஸ், ''பையா அந்த டீ கப்பை அப்பால் எடுத்துட்டுப் போ, ஈ மொய்க்குது. டைரக்டர் பாத்தாக் கோவிச்சுக்குவார்'' உத்தரவிட்டபடி நகர்ந்து விட்டாள்.

சைகையில் அவரைக் காட்டிவிட்டுத் தேநீர் கோப்பையுடன் பையன் விரைந்து ஓடி விட்டான்.

கட்டிலின் அருகே மிகவும் நெருக்கமாக அவள் வந்து நின்று கொண்டதும் திடுக்கிட்டவன்போல பிரபு அவள் இருந்த திக்கின் பக்கம் திரும்பினான்.

''அம்மாவின் புடவையிலிருந்து வரும் தாழம்பூ வாசனை. ஆமாம். அனிதாவா வந்திருக்கிறது?'' ஆச்சர்யமாகக் கேட்டான்.

பேச முடியாமல் துக்கம் தொண்டையை அடைக்க கண்களிலிருந்து வழிந்த கண்ணீரைக் கட்டுப்படுத்த இயலாமல் கன்னத்தில் வழியவிட்டபடி அனிதா பிளாஸ்க்கை திறந்து மூடியில் சூடான தேநீர் வார்த்து, ''சாப்பிடுங்கோ. உங்களுக்கு ஆறின டீ பிடிக்காது என்று எனக்குத் தெரியும்'' என்று திணறினாள்.



அதைக் கைகளால் வாங்கிக் கொண்டு பிரபு ஒரு வாய் ஆவலுடன் தேநீரைப் பருகினான்.

''தாங்க்யூ அனிதா! ஆஸ்பத்திரியிலிருந்து உனக்குப் பில் அனுப்பி தொந்தரவு செய்தாங்களா? நீ இருக்குமிடத்தைப் பற்றி நான் மூச்சு விடலையே? எப்படி அவர்களுக்கு உன் முகவரி தெரிஞ்சுது!''

''ஆஸ்பத்திரியிலிருந்து எனக்குப் பில் ஏதும் வரலை. நானாகாத்தான் உங்களைப் பார்க்க வந்தேன். பில்லைக் கொடுத்துட்டு உங்களை வீட்டுக்கு அழைச்சிட்டுப் போக ஏற்பாடு செய்ய வந்திருக்கேன்.''

''இந்த சமயம் உன்னோடு வந்து இருக்க நான் ஒப்புக் கொள்வது மிகவும் வெட்கப்பட வேண்டிய விஷயம் அனிதா.''

''உங்களுக்குச் சேர வேண்டிய நிழலில் நான் நிம்மதியாக வாழ நினைப்பது அதைவிட வெட்கப்பட வேண்டிய விஷயம். உங்களுக்குச் சேர வேண்டிய வீட்டை மாமா என் பேருக்கு எழுதி வச்சுட்டுப் போயிருக்காரே; அதைச் சொன்னேன்.''

''மன்னிக்க முடியாத தவறுகள் உனக்குச் செய்துவிட்டவன் நான்.''

''அதற்கு ஈடாக நான் திருப்பித் தவறுகள் செய்யணும்னு நினைக்கிறீங்களா?''

''இரண்டு தவறுகள், ஒரு நியாயமான முடிவாகிவிடுமா? அனிதா! என்ன சொல்றதுன்னே தெரியலே. அன்று உன்னை நான் பிரிஞ்சப்போ சொன்னது நினைவுக்கு வருது---உன்னைக் கடைசியா நான் பார்க்கிறது இன்றுதான்; நினைவிருக்கட்டும்' என்றேனே என் வாயில் விஷம் இருந்தது. அப்படியே பலிச்சுட்டது பார்த்தியா. உன்னைப் பார்க்க முடியாதபடி இப்போ நான்...''

அவன் பேசி முடிக்குமுன் அனிதா அவன் வாயைப் பொத்தினாள்.

''டீ ஆறிப்போகுமுன் சாப்பிடுங்கே... நாளை மறுநாள் உங்களை வீட்டுக்கு அழைச்சுப் போகப் போகிறேன்.''

''இன்னமும் நமக்குள் விவாகரத்து ஆகலே என்பதை நினைவுபடுத்துகிறேன், நீங்கள் இன்னமும் என் கணவர். நான் உங்கள் மனைவி. இந்த உரிமையில் எனக்குச் சில கடமைகள் உண்டு. அதை நிறைவேற்ற உதவுவதில் உங்களுக்கும் சில கடமைகள் உண்டு. இல்லையா?'' என்று சொல்லிக் கொண்டு மெல்ல அந்தத் தேநீர் கப்பை அவன் வாயருகே கொண்டு குடிக்கச் செய்து உதவினாள்.

''அனிதா அற்புதம் என்பதை நான் இப்பொழுது—தான் முதன் முதலாக என் வாழ்க்கையில் நம்புகிறேன். இது தெய்வத்தின் கருணையால்... என் தாய் செய்த தவத்தின் பலனால் ஏற்பட்ட ஒரு அற்புதம்... அனிதா'' தடுமாறியபடி அவளது கையைப் பிடித்துக்கொண்டான். மௌனமாகக் கண்ணீரை முத்துக்களாகக் கன்னங்களில் ஓடவிட்டாள் அனிதா.

## 6

அதற்குப் பிறகு அனிதாவுக்குத்தான் எத்தனை வேலைகள்? தனியாகத் திறமையுடன் சமாளிக்கவேண்டிய பொறுப்புகள்தான் எத்தனை? ரெயில் வண்டித் தொடராக, மனக்கண் முன் எழுந்த அந்தப் பிரச்சினைகள் பலவற்றையும் பற்றிச் சிந்தித்து...

அவள் இரவு முழுவதும் உறங்கவேயில்லை. தலை பாரமாக இருக்க—நெஞ்சு கவலையில் கனக்க, அவள் அலுவலகத்துக்குச் சென்றிருந்தாள். தலைமைக் கணக்கர் அவளது கதையைக் கேட்டுவிட்டு, மானேஜிங் டைரக்ட



ருடன் கலந்து ஆலோசித்து உடனடியாக இரண்டு வார காலத்துக்கு விடுப்புத் தர ஏற்பாடுகள் செய்து விட்டிருந்தார்.

அன்று மாதத்தின் இறுதி நாள். அலுவலகப் பையன் பகல் வேலை நேரத்தின்போது அவளது மேஜை மீது சம்பளக் காசோலை கொண்ட கவரை வைத்து விட்டுப் போயிருந்தான். அந்த மாதத்திலிருந்து அவளது சம்பளம் நானூற்றுச் சொச்சத்திலிருந்து ஐந்நூற்று எட்டாக உயர்ந்து விடும் என்ற செய்தி அவளுக்கு ஏற்கனவே தெரிந்ததுதான். அலுவலகத்தில் வேலை பார்த்த எல்லாருக்குமே அந்த மாதத்திலிருந்து சம்பள உயர்வு கிட்டப் போகிறது என்கிற சங்கதி தெரிந்ததுதான். அதைச் சொல்லி, மகிழ்ச்சியைப் பரிமாறிக் கொள்ளுமுன் அந்தப் பயங்கர விபத்து ஏற்பட்டு அதன் பாதிப்பிலே அவள் மனம் ஒடிந்து போயிருந்தாள். பின்னர் சொல்லிக் கொள்ளலாம் என்று அசட்டையாக ஒதுக்கி விட்டிருந்தாள். அதைச் சொல்ல அவனுக்கு வேளை வரவில்லை. கேட்டு மகிழ மாமனாருக்கும் நேரம் இருக்கவில்லை. அவர் போய் விட்டார். அதற்குப் பதில் சம்பள உயர்வுக்கு ஈடாக எத்தனை செலவினங்கள் வரிசையாகக் காத்திருந்தன? வறட்சியாக தனக்குள்ளே அவள் சிரித்துக் கொண்டாள்.

மறுநாள் காலையிலிருந்து அவள் இரண்டு வாரம் அலுவலகம் வரத் தேவையில்லை. மாமனார் வேதகிரி இறந்தபோது சில நாட்கள் அவள் லீவு எடுக்க வேண்டியிருந்தது. அப்போது அலுவலகம் அவளது சம்பளத்தில் பிடிப்பு ஏதும் செய்யவில்லை. தொடர்ந்து அந்தச் சலுகையை அவள் இப்போது எதிர்பார்க்க இயலாது. அலுவலக ஊழியர்களின் விடுப்பு நாட்கள் பற்றிச் சில சட்ட திட்டங்கள் இருந்தன. இரண்டு வாரச் சம்பளத்தை அவள் இழக்க நேரிடும் என்று தலைமைக் கணக்கர் அனுதாபத்துடன் கூறி அவளது லீவு மனுவை வாங்கிக்கொண்

டிருந்தார். எத்தனையோ இழப்புகள், அதில் இதுவும் ஒன்று. சாண் ஏறினால் முழம் சறுக்கும் வழுக்கு மரமாக அவளது வாழ்க்கை அமைந்துவிட்டது. எல்லாவற்றையும் அவள் சமாளித்தே ஆக வேண்டும். சின்னச் சின்ன விஷயங்களுக்கெல்லாம் அதிர்ந்து போய் மனம் கலங்குவதில் பயன் இல்லை. இப்படிப் பலவும் தன்னுள் எண்ணித் தன்னைச் சமாதானம் செய்து கொண்டாள்.

அடுத்த நாள் காலை எழுந்தவுடன் அவள் பரபரப்புடன் செயல்பட வேண்டியிருந்தது.

இரவு முழுவதும் தன்னுள் பலமுறை அவள் கணக்குப் போட்டு முடிவுக்கு வந்திருந்தாள்.

நர்ஸிங் ஹோமுக்குக் கட்ட வேண்டிய தொகை, அந்த இரண்டு நாட்களில் இன்னும் கொஞ்சம் கூடுதலாகிவிட்டிருக்கும்.

இப்போதைய பாக்கி பதினேழாயிரத்து எண்ணூறு ரூபாய். கணவனை வீட்டுக்கு அழைத்துக் கொண்டு வந்ததும் அவர் உபயோகத்துக்காக வாங்க வேண்டிய புதுக் கட்டில் மெத்தை—தலையணைகள் ஒரு டேப் ரிகார்டர் இத்யாதி செலவுகள் வேறு குறைந்த பக்ஷம் அவளுக்குப் பத்தொன்பதாயிரம் ரூபாய் அவசரமாகத் தேவைப்பட்டது. மாமனார் அவள் மீது போட்டு வைத்திருக்கும் பிக்ஸட் டிபாஸிட்டை உடைத்து எடுக்க முடியும். ஆனால் வேறு ஒரு அவசரத்துக்கு தேவைப்பட்டால்? யாரிடம் போய் அவள் பணத்துக்குக் கையேந்தி நிற்க முடியும்?

இப்படிச் செய்தால் என்ன—மாமியாரின் வைர மூக்குத்தி, தங்கச் சங்கிலி இரண்டையும் விற்றால்?

முதல் வேலையாக அவள் வங்கிக்குச் சென்று, லாக்கரிலிருந்த அந்த இரண்டு நகைகளையும் எடுத்து வந்தாள்.



"புளு ஜாக்கர் கல் அம்மா... இப்போதெல்லாம், கிடைப்பது அரிது. "பரம்பரைச் சொத்து உன் மாமியார் நினைவா வச்சுக்கோ" மாமனார் பல தடவை சொல்லியிருந்த அந்த விலை உயர்ந்த வைர மூக்குத்தியை விற்பதா? மனம் துன்பப்பட்டது.

ஆனால், அவளது கணவனது கௌரவம், உயிர், வாழ்க்கை, வருங்காலம் இவற்றுக்கு மேல் அந்தவைரக்கல் உயர்ந்த பொருளா? என்ற கேள்வி மனத்தைக் குடைய, அவள் தன் அண்ணா சுந்தரத்துக்குப் பழக்கமான பிரபல நகைக் கடைக்காரர் கோகுல்தாஸ் ஜுவல்லர்ஸ் கடையை நோக்கி ஓர் ஆட்டோவில் விரைந்தாள்.

கடைக்காரர் அவளது அவசரத் தேவையைக் கேட்டு மிகவும் அனுதாபப்பட்டார்.

கூடியவரை உதவுவதாக வைரத்தையும் தங்கச்சங்கிலியையும் மதிப்புப் போட்டுப் பார்த்தார்.

பழைய காலத்துப் பட்டை தீட்டாத வைரம் உயர்ந்த கல்தான். ஆனால், அவள் எதிர்பார்க்கும் விலை கிட்டாது. குடும்பச் சொத்தை அழி விலைக்கு அவள் விற்பதைவிடத் தன்னிடமே வைத்துக் கொள்வது நலம் என்று உபதேசித்தார்.

ஏமாற்றத்துடன் மூக்குத்தியை வாங்கி கைப் 'பைக்'குள் பத்திரமாக வைத்துக் கொண்டாள்.

தங்கத்துக்கு எப்போதுமே விலை உண்டு. பழையது புதிது என்று வித்தியாசம் கிடையாது என்று உற்சாகமாகப் பேசிய கடைக்காரர், சங்கிலியை எடை போட்டார். தள்ளுபடிகள் போக எட்டாயிரத்து இருபது ரூபாய்களை எண்ணிக் கொடுத்தார்.

அது மட்டும் போதாதே! மறுபடி அவள் ஆட்டோவில் வங்கிக்கு விரைந்தாள்.

வைர மூக்குத்தியை லாக்கரில் வைத்துப் பூட்டிவிட்டுத் தன் பிக்ஸட் டிபாசிட் மீது ஒரு கடன் எடுத்தாள். கொஞ்ச நேரம் காத்திருக்க நேரிட்டாலும் உடனடியாக அவளது அவசரத் தேவையைப் புரிந்து கொண்டு வங்கி அதிகாரி உதவினார். தன் சேமிப்பு நிதியிலிருந்த பணத்தி லிருந்து ஒரு பெரும்பகுதியை எடுத்து அத்துடன் சேர்த்துக் கொண்டாள். ஒரு வழியாக அவள் கணக்கிட்ட அந்தப் பத்தொன்பதாயிரம் அவளுடைய பைக்குள் அடக்கமாகியது.

வீட்டுக்குத் திரும்பியவள் வேகமாகப் பகல் சமையலை முடித்தாள். ஒரு ஸ்டீல் டிபன் செட்டில் உணவை எடுத்து நிரப்பிக் கொண்டாள். கை துடைக்கத் துவாலை, சில கரண்டிகள், ஒரு தட்டு, ஒரு டம்ளர், ஒரு பாட்டிலில் தண்ணீர் இத்தியாதிகளை விரைவில் சேகரித்து ஒரு பிரம்புக் கூடைக்குள் அடக்கி எடுத்துக் கொண்டாள். வீட்டைப் பூட்டிவிட்டு வெளியே வந்தாள். நல்ல வேளை யாக நெடுஞ்சாலையில் ஓர் ஆட்டோ தென்பட்டது. கை தட்டி அழைத்து ஏறிக்கொண்டு அவள் நேரே ஆஸ்பத்தி ரிக்குச் சென்றாள்.

''அடுத்த நாள் உங்கள் கணவர் ஆஸ்பத்திரியிலிருந்து அனுப்பப்படுவார், அதுவரை உண்டான தொகைக்கு பில்'' என்று கணக்கர் அவள் முன் நீட்டிய காகிதத்தைப் படித்துப் பார்த்து விட்டுப் பையைத் திறந்து கட்டுகளாக நோட்டுகளை எண்ணி வைத்தாள். திருப்தியுடன் அவர் எழுதிக் கொடுத்த ரசீதை வாங்கிப் பத்திரமாக பைக்குள் வைத்துக் கொண்டாள்.

வார்ட் நர்ஸின் அனுமதியின் பேரில், 'சி' வார்டி லிருந்த அந்தக் கடைசி படுக்கையருகே அவள் வரும்போது பகல் உணவு நேரம் நெருங்கிவிட்டிருந்தது. வராந்தாவில் ட்ராலிகளின் மீது உணவுக் கட்டுகளை வைத்துத் தள்ளிக் கொண்டு வந்தனர், ஆஸ்பத்திரி ஊழியர்கள்.



படுக்கையருகே அவள் வந்து நின்றதை உணர்ந்து, விடுக்கென்று பிரபு எழுந்து உட்கார்ந்தான். மறுபடியும் தாழம்பூவின் வாசனை மூக்கில் மோதவே அவன்முகத்தில் மகிழ்ச்சி களை கட்டியது.

''அனிதா! இரவு ரவுண்டுக்கு வந்த டாக்டர் சொன் னார். நாளைக் காலை எட்டு மணிக்கே டிஸ்சார்ஜ் செய்து விடுவார்களாம். ஆமாம், பணத்துக்கு நீ என்ன பண்ணுவே?'' ஆவலுடன் கேட்டான்.

''பணம் முழுவதையும் கட்டிவிட்டேன். இனி உங்க ளுக்கு அந்தக் கவலை தேவையில்லை'' சொல்லிக் கொண்டே அருகிலிருந்த சிறு மேஜை மீது கூடையை வைத்துவிட்டு டிபன் செட்டை எடுத்துத் திறந்தாள்.

''அத்தனை பணத்தை ஒரே நாளில் எப்படிப் புரட் டினே? உன் அண்ணன்...'' மேலே பேசாமல் நிறுத்தினான் பிரபு.

''அத்தை சங்கிலியை வித்துட்டேன்; மாமா வச்சுட் டுப் போன பணத்தில் கடன் எடுத்தேன். அத்தையும் மாமாவும் இப்போ இல்லாவிட்டாலும் ஆன்மீக உருவில் இருந்து உங்களுக்கு உதவுறாங்க. அவங்க வச்சுட்டுப் போன சொத்துகள் இப்போ கை கொடுக்கின்றன. ஏதோ மிச்ச சொச்சத்துக்கு என்கிட்டேயிருந்த சேமிப்பை யும் கொஞ்சம் போட்டுச் சரி பண்ணிட்டேன் இனிமே நீங்க இந்தப் பிசை பத்திக் கவலைப்படாம அமைதியா இருக்கணும். ஒரே ஒரு பகல் பொழுது-ஒரு இரவு-நாளைக் காலை நான் டாக்ஸி எடுத்து வந்து உங்களைக் கூட்டிக் கிட்டுப் போயிடுவேன்.''

'எல்லாரும் இங்கே சாப்பிடற நேரம். உங்களுக்குப் பிடிக்குமேன்னு முள்ளங்கி சாம்பார் தக்காளி ரசம், புடலங்காயைப் பொரியல்,கொஞ்சம் தயிர் எல்லாம்வீட்டி லிருந்து எடுத்து வந்திருக்கேன். டிபன்லே எல்லாத்தையும் வச்சுத் தரேன். சாப்பிடுங்க ராத்திரி பொழுது மட்டும்

LIBRARY
AMBATTUR (OT) CHENNAI-53.

இங்கே கிடக்கிறதைச் சாப்பிட்டுச் சமாளிச்சுடுங்க. பிறகு உங்க வீட்டில் நீங்க ராஜா போல இருக்கலாம்.''

உணவுத் தட்டைக் கையில் வாங்கிக் கொண்டான். ஸ்பூனால் குழம்பைச் சோற்றுடன் கலந்தபோது மணம் மூக்கைத் துளைத்தது. வாய்க்கு ருசியாக அவன் தாய் சமைப்பதைப் போலத்தான் அனிதா சமைத்திருக்கிறாள் என்பதை ஸ்பூன் குழம்புச் சோற்றை அள்ளி வாயில் போட்டுக் கொண்டதுமே அவன் உணர்ந்தான். சோறு நாவுக்கு ருசித்தது போல அவளது பேச்சும் புண்பட்டுத் துயரத்தில் இடிந்து போயிருந்த அவன் மனத்துக்கு எத்தனை ஆறுதலாக இருந்தன.

ஆமாம், இனி அவன் ஒரு ராஜா போலத்தான் இருக்கப் போறான். அவனுக்குத்தான் ராஜபார்வை வந்து விட்டிருக்கிறதே! உலகத்தையே பார்க்க முடியாத, ஆனால் உணர்வுகளையெல்லாம் புரிந்து கொள்ளும் துல்லியமான தீர்க்கமான ஒரு பார்வை—இதற்கு என்ன சொல்வார்கள்? ஞானக்கண்! ஆமாம்; ஞானக்கண்கள் இப்போதுதான் திறந்து கொண்டிருக்கிறது. ஊனக் கண் மறைந்த போது... என்ன ஆச்சர்யம் ஞானக்கண் தாமாகத்திறந்து உலகை ராஜபார்வை பார்க்கின்றனவே! தெய்வ தியானத்தில் இருக்கும் போது பக்தர்களும், ஞானிகளும் தமது கண்களை மூடிக்கொண்டு பகவானைத் தமது ஞானக்கண்களால் பார்க்க முயலும் தவத்தில் இறங்கி விடுகின்றனர்.

''என்ன யோசனை? சாப்பாட்டில், உப்பு, காரம் எல்லாம் ஒழுங்காப் பிடிச்சிருக்கா...இதோ இங்கே பொரியல் வச்சிருக்கேன்'' அவன் கையைப் பிடித்துத் தட்டின் மீது அந்தப் பகுதியைத் தொட்டுக் காட்டினாள்.

''அனிதா!'' அவனது குரலில் இது நாள் கேட்காத கனிவு தொனித்தது.



''உனக்கு எப்படி நன்றி சொல்றதுன்னே தெரியலை, இந்த உபசாரம். கவனிப்பு இதுகளுக்கு நான் தகுதியுடையவனான்னு நினைக்கிறப்போ...''

''சாப்பிடுங்க சாதத்தை வாயில் வச்சுக்கிட்டுப் பேசினா புரையேறிக்கும். இதோ சில்லுன்னு பானைத் தண்ணியைப் பாட்டிலிலே எடுத்துட்டு வந்திருக்கேன். தகுதி உண்டு இல்லேங்கிறதைப் பத்தியெல்லாம் பேச நம் வாழ்நாள் பூரா நிறைய நேரம் இருக்கே! இப்போ என்ன அவசரம்?' கேட்டபடி டம்ளரை அவனது கையில் வைத்தாள்.

''கால முச்சூடுமா? பார்வை இல்லாத ஒருவனைக் கால முச்சூடும் வச்சுக் காப்பாத்துகிற பயங்கர பொறுப்பை ஏத்துக்கப் போறியா அனிதா? உனக்கு ஏன் இந்தத் தண்டனை?''

''வாழ்விலும் தாழ்விலும்—நோயிலும் ஆரோக்யத்திலும் ஒருவரோடு ஒருவர் துணையாக இருந்து—ஏழேழு பிறவிக்கும் இந்த உறவினைத் தொடர வேண்டும் என்று தானே பெரியவங்க திருமணத்தைப் புனிதமான ஒரு ஒப்பந்தமாக அமைச்சிருக்காங்க.''

'உனக்கு உள்ள பொறுப்பு உணர்ச்சியும், கடமை உணர்வும் எனக்கிருந்தால் இந்த நிலைக்கு வந்திருக்க மாட்டேன்'' என்று சொல்ல வாயெடுத்தான்; வார்த்தைகளைச் சோற்றோடு விழுங்கிக் கொண்டான்.

''அனிதா, ரொம்ப நல்லா சமைச்சிருக்கே. என்ன செய்வேன்னு கலங்கிட்டு நின்ன என் முன்னாடி தெய்வம் போல வந்திருக்கே. இதுக்கு மேலே ஒண்ணும் சொல்லத் தெரியலை''

''ஒண்ணும் சொல்ல வேண்டாம். நாளைக்காலை எட்டி மணிக்கு 'டாண்'ணு வந்துடுவேன்...என் கூட வீட்டுக்குப் புறப்படத் தயாராக இருங்க. அதுபோதும். இதுக்கு மேலே நான் பேசிக்கிட்டு இங்கு நின்னா வார்டு நர்ஸ் கொடுத்த நேரம் முடிஞ்சு போச்சு. வந்து துரத்தி

யடிப்பாங்க...கையை நீட்டுங்க. கொஞ்சம் தண்ணி ஊத்தறேன்—இந்தத் தட்டுலேயே கழுவிக்குங்க இந்தாங்க, துண்டு! துடைச்சுக்குங்க வாயையும் அப்படியே துடைச்சுக்குங்க. அட...இது என்ன கன்னத்திலே சோத்துப் பருக்கை'' என்று சொல்லிக்கொண்டே அவன் கன்னத்தை மெல்லத் துண்டில் துடைத்து விட்டாள்.

''பச்சைக் குழந்தையைப் போல என்னைக் கவனிக்க வேண்டி வந்துட்டது இல்லையா?'' —தழுதழுத்தபடி அவளது கரத்தை இறுக்கமாகப் பற்றிக் கொண்டான்.

நாள் முழுவதும் சலியாது உழைக்கும் அந்தக் கை பூப்போல மென்மையாக இருக்கிறதே—வெண்டைப் பிஞ்சுகள் போல விரல்கள் சன்னமாக மெத்தென்று—வியப்புடன் இன்னமும் இறுக்கமாக அவள் கையைப் பற்றிக் கொண்டான்.

கண் நிறைந்த தன் கணவனது கண்களில் நீர் புரளுவதை அவள் கண்டு கலங்கிப் போனாள்.

''நான் துணையா இருக்கும்போது மனத்தைத் தளரவிடக் கூடாது வீட்டில் உங்களுக்கு எந்த விதமான குறையும் இருக்காது. ஒரே ஒரு இரவு மட்டுந்தான் ஆஸ்பத்திரிவாசம் பொறுத்துக்குங்க, வரட்டுமா?'' கேட்டபடி. தன் கரத்தை மெல்ல அவன் பிடியிலிருந்து விடுவித்துக் கொண்டு புறப்பட்டாள்.

வீட்டுக்குத் திரும்பும் வழியில் கூட பல வேலைகள்.

மரச் சாமான் கடையருகே ஆட்டோவை நிறுத்தச் சொல்லி இறங்கிக் கொண்டாள்.

அவள் மாமனார் உபயோகித்த கயிற்றுக் கட்டில் மிகவும் பழையதாகித் தொய்ந்து விட்டிருந்தது. அவர் மறைவுக்குப்பின் அதை அவள் எடுத்துப் பின் தாழ்வாரத்தில் சுவரோரமாக சாத்தி வைத்து விட்டிருந்தாள்.

வசதியாக வாழ்ந்து பழக்கப்பட்டிருந்த பிரபு தரையில் படுக்க மிகவும் சங்கடப்படக்கூடும் என்று எண்ணி,



புதிதாக ஒரு மரக்கட்டில், பஞ்சு மெத்தை இரு தலையணைகள் முதலியவற்றை வாங்கினாள் ஒரு தள்ளு வண்டியில் சாமான்களை ஏற்றித் தன் முகவரிக்கு அனுப்பி வைக்கக் கடைக்காரரிடம் ஏற்பாடு செய்து விட்டு விரைவாக வீட்டுக்கு வந்தாள். பகல் உணவைச் சீக்கிரம் முடித்துக்கொண்டு, வீட்டைப் பெருக்கித் துடைத்து சுத்தப்படுத்தினாள்.

அன்று மாலையே சாமான்கள் வந்து சேர்ந்து விட்டன.

கூடத்திலே ஆட்கள் கொண்டு வந்து போட்ட கட்டின் மீது, மெத்தையை விரித்துத் தயாராக துவைத்துக் காயவைத்த விரிப்புகளைப் போட்டு, தலையணைகளுக்கு உரைபோட்டு படுக்கையை ஒழுங்கு செய்தாள்.

மாமனார் உபயோகித்த டிரான்சிஸ்டர் ரேடியோவுக்கும் பாட்டரிகளைப் புதிதாக மாற்றி கைக்கெட்டும் வகையில் படுக்கையருகே மேஜை மீது வைத்தாள் நாற்காலியை அதன் அருகே மேலே இடித்துக் கொள்ளாதவாறு போட்டு வைத்தாள்.

இடுப்பில் கையை வைத்துக் கொண்டு கூடத்தைப் பலமுறை நோட்டம் விட்டுத் திருப்தியடைந்தவளாக, மறுநாள் காலை பொழுது உதயமாக ஆவலுடன் காத்திருந்தாள்.

குறித்த நேரத்திற்கு டாக்ஸியுடன் அடுத்த நாள் காலை ரம்யா நர்ஸிங் ஹோமுக்குச் சென்று கணவனை வீட்டிற்கு அழைத்து வந்து விட்டாள்.

டாக்ஸியிலிருந்து இறங்கிய பிரபுவின் கையைப் பிடித்துக் கொண்டு, அனிதா அவனை உள்ளே அழைத்துக் கொண்டு செல்வதைத் தெருவே வேடிக்கை பார்த்தது.

'ஆமாம்! இவர் சினிமா டைரக்டர் பிரபு இல்லையா!' கிசுகிசுத்தாள் எதிர்ச்சாரி வீட்டிலிருந்த ஒரு பெண் தன் அருகே நின்றவளிடம்.

எதிர் வீட்டுப் பாட்டி பஞ்சரத்தினத்தின் தலை ஆவலில் வெடித்தது. காப்பித் தூள் கொஞ்சம் கடனாகத் தேவை என்கிற சாக்கில் ஒரு சிறு டம்ளருடன் வந்து விட்டாள்.

காப்பிப் பொடியுடன், வம்பையும் சேர்த்துக் கொண்டு வெளியேறினாள். அவ்வளவுதான். இரண்டு தினங்களுக்குள் தெரு முழுவதிலும் உள்ள அத்தனைப் பேர்களுக்கும் அந்த அதிசயமான உண்மை தெரிந்து விட்டிருந்தது. 'பிரபல சினிமா டைரக்டர் பிரபு, நம்ப தெரு அனிதாவின் கணவராமே?'

'ஆமாம்; அவள்தான் தாலி கட்டின மனைவி. கார் விபத்திலே காயமடைந்து விட்டதனால்தான் ஆஸ்பத்திரியில் இருந்தாராம்—பெத்த அப்பனுக்குக் கூட கொள்ளி போட வர முடியவில்லை? விபத்திலே கண் பார்வை மங்கி விட்டதாமே? கண்ணாடித் தூள்கள் கண்களில் பட்டு அடடா!'

''கோயில் சிலையாட்டமா பெண்ஜாதி வீட்டிலே வச்சுட்டு, இந்த மனிதன் வேறே யாரையோ கல்யாணம் பண்ணிக்கத் திட்டம் போட்டாராமே?''

''அனிதா—சும்மா சொல்லக் கூடாது மகா உத்தமி 'கல் ஆனாலும் கணவன்' என்கிற கொள்கையுடையவள் அதனால்தான் கண் இல்லாதவனாலும்— கணவன்னு மதிச்சுக் கூட்டி வந்து குடித்தனம் செய்யறா?''

சில நாட்களில் அனிதா தெம்புடன் தலை நிமிர்ந்து தெருவில் நடக்கும் ஒரு தகுதியைப் பெற்று விட்டிருந்தாள்

அவளைப் பார்த்து வம்பு பேசிய அதே தெருப் பெண்கள் அவளைக் கண்ணகியாகப் பாவித்து சிலை எடுக்காத குறை— அப்படிப் புகழத் தொடங்கி விட்டனர்.

ஒரு வார காலம் ஓடிச் சென்றது—அன்று காலை 'போஸ்ட்' என்ற குரல் கேட்டு அவள் வாயிலுக்கு ஓடிச்



சென்று தன் பெயருக்கு வந்த கார்டை வாங்கிக் கொண்டாள்.

அண்ணா சுந்தரம் எழுதியிருந்தார். ''அலுவலகத்துக்கு டெலிபோன் செய்தேன். லீவில் இருப்பதாகச் சொன்னார்கள். நமது குடும்ப நண்பர் ரகுபதி ஆபரேஷனுக்குப்பின் ஒரு செக்கப்பிற்காக மறுபடி நர்ஸிங் ஹோமுக்குப் போனபோது, என்னையும்கூடத் துணைக்கு அழைத்துப் போனார். அப்போதுதான் தெரிந்தது. நீ பிரபுவை வீட்டுக்கு அழைத்துக் கொண்டு போய் விட்டதாகச் சொன்னார்கள். ஆச்சர்யமாக இருக்கு. எத்தனை பெரிய பொறுப்பு! பார்வையிருந்த போதே உன்னைப் பாடாய்ப் படுத்தினவன், வீணாக நீ ஒரு வேதனையை விலைக்கு வாங்கிக் கொண்டு விட்டிருக்கிறாயே என்று மனம் சங்கடப்படுகிறது. ஆமாம்! அத்தனை பணத்திற்கு என்ன செய்தாய்? ஆதங்கம் தாங்க முடியாது எழுதுகிறேன்—பதில் போடவும்—சுந்தரம்.''

''கடிதம் யாரிடமிருந்து வந்திருக்குன்னு கேட்கலாமா?'' பிரபு மெல்லிய குரலில் விசாரித்தான்.

''என் அண்ணா போட்டிருக்கிறார். வாசிக்கட்டுமா'' என்றாள் அனிதா.

''வேண்டாம். என்ன எழுதியிருப்பார்னு என்னால் ஊகிக்க முடியும். பார்வையிருக்கும் போதே உன்னைப் பாடாய்ப் படுத்தினவனைப் பார்வை இல்லாத போது வீட்டுக்கு அழைச்சிட்டு வந்து வீண் வம்பில் மாட்டிக் கொள்கிறாயே; உனக்குப் புத்தியிருக்கா இல்லையா...'' தூக்கிவாரிப் போட்டது அவளுக்கு

''அதெப்படி அத்தனை சரியாக ஊகம் செய்து விட்டீங்க?'' வியப்புடன் கேட்டாள்.

''மனிதனுக்குக் கண் பார்வை போனதும் மற்ற உணர்வுகள், சிந்தனையெல்லாம் கூர்மையாகி விடும்.

இங்கே கிட்டக்க வா. நீ கட்டிக் கொண்டிருக்கிற புடைவையைத் தொட்டுப் பார்த்து ஏறக்குறைய என்ன நிறமாக இருக்கும்னு சொல்லிவிட முடியும்'' என்றான்.

ஆச்சர்யத்துடன் தன் முந்தானையை அவன் முன் நீட்டினாள். கையால் மெல்ல தடவிப் பார்த்தான். ''இது அம்மாவுடைய புடைவைகளில் ஒன்று. அவங்க வீட்டிலிருக்கும்போது அடிக்கடி உடுத்துவாங்க. வாடாமல்லி நிறம்னு ஞாபகம்' ஆமாம்; அந்தத் தாழம்பூ வாசனையைக் காணலையே'' என்றபோது அனிதாவின் கண்கள் பனித்துப் போயின.

அத்தையுடைய புடவைகளில் ரொம்பவும் பழசா இருந்த இதை நானும் வீட்டில் இருக்கும்போது கட்டறது வழக்கம்—பல தடவை சோப்புப் போட்டு துவைச்சதிலே அந்த வாசனை போயிருக்கலாம், உங்ககிட்ட இது சமயம் நான் ஒண்ணு கேட்க விரும்பறேன்; கோவிச்சுக்க மாட்டீங்களே!''

''கோவமா? எதுக்கு? தாராளமாக் கேளு'' என்று சிரித்தான் பிரபு,

''அடுத்த வாரத்திலிருந்து நான் வேலைக்குப் போகணும்—அதுக்குள்ளே உங்களுக்குச் சில ஏற்பாடுகள் செய்யத்தான் நேத்துக் காலை என் சிநேகிதி ஒருத்தியைப் பார்க்க வெளியே போயிருந்தேன்.''

''வீட்டிலே தன்னந்தனியா இருந்தா உங்களுக்கு ரொம்ப அலுப்பா இருக்கும். அதனாலே ரேடியோ கேட்டநேரம் போக ஒரு டேப்ரிக்கார்டில் நீங்க...ஏதாவது சங்கீதம் பஜனை இதுகளைக் கேட்கணும்னுட்டு ஒரு டேப் ரிக்கார்டரும் சில காசட்டுகளும் வாங்க ஏற்பாடு செய்திருக்கேன். அடுத்த மாச வாக்கில்தான் அதுகளை வாங்க முடியும். ஆனால் நாளையிலிருந்து உங்களுக்கு வாரத்திற்கு மூணு தடவை ஒரு ஆசிரியர் வந்து பிரெயில் முறையில் பாடம் கத்துக் கொடுப்பார். நீங்க



அவசியம் கத்துக்க முயலணும். பிரெயில் முறையில் நீங்கள் படிக்க, எழுதத் தெரிஞ்சு கொண்டால் பல நூல்களை இரவல் வாங்கிப் படிக்கலாம். மேற்கொண்டு ஏதாவது பரிட்சைக்குப் படிக்க ஆசைப்பட்டாலும் உதவியாக இருக்கும். அத்தோடு, வீட்டிலும், தெருவிலும் ஒரு பிரம்பை வைத்துக்கொண்டு நடக்க 'மொபிலிடி ட்ரெயினிங்' என்பதற்கும் ஏற்பாடு செய்திருக்கேன்'' என்றாள்.

'இதெல்லாம் என்னத்துக்கு' என்ன சொல்ல வாயெடுத்தவன் சட்டென்று வார்த்தைகளை விழுங்கினான்.

கண் இல்லாது அவனுக்குப் பாறாங்கல்லாக சுமையாக அவன் இருக்கக்கூடாது.

அவன் செய்த ஏற்பாடுகள் வரவேற்கத் தக்கவைதாவ். அவன் சுறுசுறுப்பாக உற்சாகத்துடன் பிரெயில் முறையில் படிக்கவும் எழுதவும் கற்றுக் கொள்ளப் போகிறான்.

வீட்டுக்குள் நடமாடவும், வெளியே தெருவில் ஓரமாக நடக்கவும், அவன் கட்டாயம் மொபிலிடி பயிற்சியைப் பெற்றாக வேண்டும். கையைப் பிடித்து அனிதாவே தினசரி குளியலறைக்கும் கழிவறைக்கும் அவனைக்கூட்டிச் சென்று கொண்டிருப்பது சாத்தியப்படாது... அவன் தானாகவே தன்னைக் கவனித்துக் கொள்ள முயலவேண்டும் பார்வையை இழந்தது ஒரு பரிதாபமான சங்கதிதான்—அதற்காகத் துயரப்பட்டு, அவளையும் துயரத்தில் ஆழ்த்துவதை விட்டு அந்த இழப்பையே தன் வாழ்க்கையில் ஒரு பெரிய சவாலாக ஏற்றுக்கொண்டு அவன் இனியாகிலும் நல்லதொரு மனிதனாக வாழ முயலவேண்டும்.

''என்ன பதிலையே காணோம்'' செல்லமாக அவன் தோளைக் குலுக்கினாள் அனிதா.

''ஒண்ணுமில்லை. ஒரு சில நாட்களில் நீ எத்தனை காரியங்களைச் செய்து முடிச்சிருக்கேன்னு நினைச்சேன்... பெருமையா இருக்கு. அனிதா பிரபுவின் மனைவின்னு

சொல்வதைவிட, பிரபு அனிதாவின் கணவன்னுசொல்லிக் கொள்வதில் ரொம்ப பூரிக்கப் போறேன்'' சொல்லிக் கொண்டே அவனது இரு கரங்களையும் பிடித்துத் தன் முகத்தின் மீது வைத்துக் கொண்டான்.

பூப்போன்ற அந்த உள்ளங்கையின் அரவணைப்பில் அவனுக்கு அவனது தாயின் ஞாபகம் வந்தது. அன்னையை நினைத்து மனம் உருகிப் போனான்.

அன்றுதான் அந்த வீட்டிற்குள் அனிதாவின் கரத் தைப்பற்றி மெல்ல வாயில்படியைத் தாண்டி—தனக்காகத் தயாரித்து வைத்திருந்த படுக்கைமீது வந்து அவன் உட்கார்ந்தது போலிருந்தது—அதற்குள் பல மாதங்கள் மறைந்து போயின.

ஆரம்ப நாட்கள் எதையும் நன்றாகப் பார்க்க முடிய வில்லை. இடது கண்ணில் மட்டும் லேசாக சிறு ஒளி அதன் உதவியால் எதிரே மிக அருகில் வந்த பின்னர்தான் அனிதாவை நிழலாகப் பார்க்க முடிந்தது. மூக்கு, கண் என்று இனம் காண முடியாத ஒரு மொத்த உருவ அசைவுதான் தெரிந்தது. என்ன அநியாயம் என்று நொந்து கொண்டு இரவில் அமைதியின்றிப் புரண்டு புரண்டு படுத்தான். அவனையும் மீறி சில சமயம் துயரம் கண்ணீராக கன்னங்களைக் கோடிட்டது. ஆனால் இந்தப் பல மாதங்களில் அனிதா செய்த ஏற்பாடுகளை யெல்லாம் அவன் ஏற்றுக் கொண்டதும் வித்தியாசமான மிக மாறுதலான மனிதனாகிவிட்டிருந்தான்.

கண்ணில் பார்வை இல்லை என்ற நிலையை மறந்து அவன் சுறுசுறுப்பாக பிரெயில் பயிற்சியில் இறங்கினான்.

வேண்டாத மனைவியாக பூந்தமல்லி பங்களாவுக்குள் வந்து ஒண்டிக்கொண்டு, அவனுக்கு வெறுப்பைத் தந்த அனிதா எத்தனை புத்திசாலி என்பதை இப்போதுதான் உணர்ந்தான்.



பிரெயில் பயிற்சி செய்யும் தன் கணவருக்கு—உபயோகிக்க பிரெயில் கடிகாரம் ஒன்றை வாங்கித் தந்து உதவினாள் அனிதா.

''மணி இப்போ என்ன?'' என்று அவன் கேட்க வேண்டிய அவசியமே இருக்கவில்லை.

ஆரம்பத்தில் அனிதாதான் அழைத்துச் சென்று உதவி செய்ய வேண்டியிருந்தது.

'மொபிலிடி டிரெயினிங்' என்பதை ஏற்றுப் பிரம்பு வைத்துக் கொண்டு, வீட்டுக்குள்ளும் வெளியே தெருவி லும் நடக்கப் பழகிக் கொண்ட பின்னர், அவன் ஒரு பார்வை உள்ள மனிதரைப் போல எதன் மீதும் மோதிக் கொள்ளாது வீட்டில் வளைய வந்தான்.

தெருவைக் கடந்துச் சென்று கோடியில் சாலை முகப் பிலிருந்த கடையிலிருந்து தினசரி சமையலுக்கு அனிதா வுக்கு காய்கறிகள் வாங்கிக் கொண்டு வந்து தயாராக வைத்தான் அனிதா முயற்சி செய்து ரோட்டரி சங்கத்தின் மூலம் அவனுக்கு அமெரிக்காவிலிருந்து ஒரு பிரெயில் டைப்ரைட்டரை வரவழைத்துக் கொடுத்து உதவ ஏற்பாடு செய்து விட்டிருந்தாள். அது கிடைத்ததும் அவன் அதனுதவியால் பல பயன்களைப் பெற ஆவலுடன் காத்திருந்தான். அன்று காலை அவள் அவனிடம்சொல்லி விட்டு வேலைக்குக் கிளம்பிப் போய்விட்டாள்.

கதவைத் தாளிட்டுக் கொண்டு மெல்ல வந்துபடுக்கை மீது உட்கார்ந்தான் பிரபு.

மாலை நேரங்களில் அவள் வேலையினின்று வீடு திரும்பிய பின், சமையலை முடித்துவிட்டு, காலை, மாலை இரு வேளையும் அவன் விரும்பிக் கேட்கும் பத்திரி கைகளை அவனுக்குப் படித்துக் காட்டுவாள் அனிதா. மற்ற நேரமெல்லாம் அவன் ரேடியோவைப் போட்டுக் கேட்டுக் கொண்டிருப்பான். சில நாட்கள் அவள் அவ்வப் போது வாங்கி வரும் சங்கீத கேஸட்டுகளை டேப்

ரிகார்டரில் போட்டுக் கேட்டுக் கொண்டிருப்பான். மெல்ல விரலில் தொட்டுக் கடிகாரத்தைப் பார்த்து நேரத்தை உணர்ந்ததும் எழுந்து தன்னால் ஆன உதவிகளைச் செய்ய முயலுவான்.

வாங்கி வந்த காய்கறிகளை நறுக்கி வைப்பான். பம்பை அடித்துக் குடத்தில் நீர்பிடித்துத் தூக்கி வந்து மெல்ல சமையலறை மேடை மீது வைத்திருப்பான்.

பாட்டைக் கேட்டு அலுத்த பின்னர் தினசரி அவனுக்காக அனிதா முன்னேற்பாடாக இரவில் அவன் உறங்கி விடும்போது ஒரு டேப்பில் சில விஷயங்களைப் பதிவு செய்து வைத்து விட்டுப் போவது வழக்கம்.

"கதவைச் சாத்தித் தாழ்ப்பாள் போட்டுக்க மறக்காதீங்க. ஸ்டவ்பத்த வைக்கத் தெரிஞ்சு கொண்டதுடன் போதும்-சமைக்க ஆரம்பிக்காதீங்க. உங்களுக்கு அந்த வேலை தேவையில்லை"

"நேத்து வாங்கின பஜனை கேசட்டை அலமாரிமேல் தட்டில் இடது பக்கம் வச்சிருக்கேன்—வேற எங்கேயும் தேட வேண்டாம்."

"பிளாஸ்க்கில் சூடா டீ போட்டு வச்சிருக்கேன் சின்னு மணிக்கு எடுத்துச் சாப்பிடுங்க."

"வழக்கம் போல பகல் டிபனை ரவுண்டு ஸ்டீல் டப்பாவில் போட்டு மேஜை மேலே சுவரோரமாகப் பிளாஸ்க் பக்கத்திலே வச்சிருக்கேன். நான் வர வரைக்கும் நல்ல பிள்ளையா இருங்க. தூக்கம் வந்தா கொஞ்சம் ஓய்வெடுத்துக்குங்க மேலும் சும்மா வீணா வீட்டுக்குள்ளே உலாத்திக்கிட்டு உடம்பை அலட்டிக்க வேண்டாம். உங்கள் அனிதா சொல்கிறேன்."

தினசரி பகல் டிபனுக்குப் பின்னர் ஒரு சிறு குட்டித் தூக்கம் போட்டதும் அவள், தலையணை அடியில் வைத்து விட்டுப் போயிருக்கும் டேப்பை எடுத்துக்



கேசட்டில்போட்டு அவளது அன்புக் குரலையும் கட்டளைகளையும் ரசிப்பது வழக்கம்.

அநேகமாக தினசரி ஒரு விதமான கட்டளைகள் தாம் இருக்கும்; ஏதோ யோசனையுடன் தலையணை அடியிலிருந்து துழாவி எடுத்த டேப்பை கேசட்டில் பொருத்திப் பித்தானை அமுக்கினான் பிரபு. அனிதாவின் குரல் கொஞ்சலாக குழைவாகக் கனிவுடன் அவனது காதுகளைத் தழுவியது.

"இன்னிக்கு நீங்க காய்கறிகளையெல்லாம் நறுக்கி வைக்கத் தேவையில்லை. டீ சாப்பிட்டுக் கொஞ்சம் ஓய்வா சாய்ந்துகொண்டு ஏதாவது பாட்டுகளைக் கேட்டுக்கொண்டு இருங்க. மீரா பஜன்—தேவாரம் திருப்புகழ் இதுமாதிரிப் பக்திப் பாடல் ஏதாவது கேட்டுக் கொண்டு இருங்க மனதுக்கு இதமா இருக்கும்."

"இன்னிக்கு நான் வீட்டுக்கு வந்ததும் பாயசம் வைக்கப் போகிறேன் என்னு கேட்கிறீங்களா? மிகவும் இனிப்பான செய்தி. நேத்து நான் சாயங்காலம் வெகு நேரம் கழிச்சுதானே வீட்டுக்கு வந்தேன். ஏன் நேரமாச்சுன்னு நீங்க கேட்கலை அதுக்குக் காரணம் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நேத்து நான் டாக்டர் ரேவதியைப் பார்க்கப் போயிருந்தேன். ரேவதியம்மாள் பிரபல தாய்—சேய் நல மருத்துவராச்சே! இன்னும் புரியலையா நீங்க விரைவில் தந்தையாகப் போறீங்க."

திடுக்கிட்டுப் பித்தானை அழுத்தி டேப்பை நிறுத்தி விட்டு ஆனந்தமானதொரு பிரமிப்பில் அயர்ந்து போய் வெகு நேரம் உட்கார்ந்திருந்தான். பிறகு சிந்தனையிலின்று விழித்துக் கொண்டு மீண்டும் டேப்பைத் திருப்பி அந்த இடத்தைக் கேட்கப் பித்தானை அழுத்தினான்.

"இன்னும் புரியலையா? நீங்க விரைவில் தந்தையாக போறீங்க" கலுக்கென்ற அனிதாவின் சிரிப்பு சதங்கை குலுங்குவதைப்போல இனிமையாகக் காதுகளில் பாய்ந்து மேனியைச் சிலிர்க்கச் செய்வதை உணர்ந்தான்.

டேப்பை நிறுத்தி விட்டுக் கைப்பிரம்பை எடுத்துக் கொண்டு கதவைப் பூட்டிக் கொண்டு தெருவில் இறங்கி மெல்ல நடந்து சாலையோரத்தில் நடை பாதையருகே இருந்த பூக்காரனை அணுகினான்.

''இரண்டு முழம் மல்லிகைப் பூ கொடு''—ஒரு ரூபாய் நாணயத்தை சட்டைப் பையிலிருந்து எடுத்து நீட்டினான். பூவையும் சில்லரையையும் வாங்கிக் கொண்டு திரும்பினான்.

மாலை தெருவில் செருப்போசை கேட்கும் முன்பே கதவைத் திறந்து வைத்துக் கொண்டு தயாராக நின்ற அவனைப் பார்த்து மெல்ல சிரித்தாள் அனிதா.

''தெரியும் எனக்கு. பசிக்குதா?—'' கேட்டபடி உள்ளே வந்தவளின் கையைப் பற்றித் தன் அருகே இழுத்தான் பிரபு.

சட்டைப் பைக்குள் வைத்திருந்த பூச்சரத்தை எடுத்து அவள் தலையை மெல்லத் தடவி கூந்தலில் சூட்டினான்.

''இனிமேல் நீ போய் சாவகாசமாகப் பாயசம் வைக்கலாம்'' என்றபோது அனிதா தாங்கமுடியாத ஆனந்தத்தில் அவனது தோள்களைப் பற்றிக்கொண்டு கேட்டாள்.

''டேப்பைக் கேட்டீங்களா?''

''கேட்டு ரொம்ப மகிழ்ச்சியா இருக்கேன் அனிதா. எனக்கு எத்தனை பெரியதொரு கருதி...தந்தையாகப் போகும் பெருமை! என் மகிழ்ச்சியை வார்த்தையால் விவரிக்க முடியாது'' என்றபடி அவளது முகத்தை விரல்களால் மெல்ல வருடினான். அனிதா கண்கள் பனிக்க அவன் தோளின் மீது சாய்ந்து கொண்டாள். அந்த கணம் நேரம் ஸ்தம்பித்து நின்றது.

# 7

அனிதா தாய்மை ஏற்ற நிலையிலும் வேலைக்குப் போய் வந்து கொண்டிருந்தாள்.

ஆனால் முப்பதாவது வார இறுதியில் அவள் மேலும் தொடர்ந்து பஸ்ஸில் பயணப்பட்டு வேலைக்குப்போவது நல்லதல்ல என்று டாக்டர் ரேவதி அபிப்பிராயம் தெரிவித்து விட்டிருந்தாள். வேறு வழியின்றி அனிதா தாய்மையின் போது ஊழியர்களுக்குக் கிடைக்கக்கூடிய விடுப்புக்குத் தன் அலுவலகத்து மானேஜிங் டைரக்டரிடம் விண்ணப்பித்துக் கொண்டாள். இத்தனை கஷ்டங்களின் நடுவிலும் அவளுக்கு ஒரு நல்ல அலுவலகமும் அதிலுள்ள அதிகாரிகளின் அனுசரணையும் கிட்டியது ஒரு பெரும் பாக்கியமாகும்.

மானேஜிங் டைரக்டர் அவளுடைய விண்ணப்பத்தை அனுதாபத்துடன் ஏற்றுக் கொண்டு விடுப்புக்கு ஒப்புதல் தந்து விட்டிருந்தார். அந்த வார இறுதி வரை அவள் வேலை செய்துவிட்டுப் புதிதாகத் தற்காலிகமாக நியமிக்கப்பட்டிருந்த மல்லிகாவுக்கு அவளது வேலைகளைச் சொல்லிக் கொடுத்துவிட்டு அவள் விடுப்பு எடுத்துக் கொள்ளலாம் என்று தலைமைக் கணக்கர் உத்தரவு வழங்கியிருந்தார்.

மல்லிகா அவளைவிட வயதில் சிறியவள் கல்யாணமாகாதவள். அப்பா, அம்மா, அண்ணன் தம்பி என்று பெரிய குடும்பத்திலிருந்து வந்தவள். டைப்ரைட்டிங் பரிட்சையில் தேர்வடைந்ததும் தன் திறமையைப் பரிசோதிக்கவே அவள் வேலை தேடிக் கொண்டிருந்தவள். அவளுக்கு அந்த வேலை கட்டாயம் செய்தாக வேண்டும் என்ற நிர்ப்பந்தம் இருக்கவில்லை. ஆனாலும் கல்யாணத்துக்காக வீட்டில் காத்திருந்து— அலுத்துப்போய்த் தற்காலிகமான வேலையானாலும் பரவாயில்லை என்று அமர்ந்து விட்டிருந்தாள்.

முத்து தெறித்தாற்போல அனிதா வார்த்தைகளை அளந்துதான் அலுவலகத்தில் பேசுவாள்.

மல்லிகா வாய் ஓயாமல் சளசளவென்று பேசும் வழக்கமுடையவளாக இருந்தாள். வந்த சில நாட்களி லேயே தன் வீட்டுச் சமாசாரங்கள் அத்தனையையும் அவள் அனிதா முன் அவிழ்த்துக் கொட்டி விட்டாள்.

அனிதாவின் விடுப்பு தொடங்குவதற்கு முதல் நாள பகல் இருவரும் அலுவலக அறையிலேயே சாப்பிட உட்கார்ந்து விட்டனர்.

''நீங்களாவது எட்டு மாதம் முடியும் வரை தொடர்ந்து வேலை செய்து கொண்டிருக்கிறீங்க. எங்க அண்ணி வேலைக்குப் போகிற பெண் இல்லை. வீட்டோடு இருப்பவள். அப்படியும் குடும்ப பாரங்களும் தலையில் சுமப்பவள் இல்லை அம்மாதான் வீட்டுப் பொறுப்பை நிர்வகிக்கிறாங்க. சமையலறையில் அம்மாவுக்குக் காய்கள் நறுக்கித் தந்துவிட்டு, அண்ணா அலுவலகம் போக டிபன் கட்டிக் கொடுக்கும் வேலையோடு அண்ணி யின் பொறுப்பு தீர்ந்து விடும். அப்படியிருந்தும், அவங்க வீட்டிலிருந்து அண்ணியை அவள் தாய்மையின்போது ஆறாவது மாதமே வந்து கூட்டிக்கிட்டுப் போய் விட்டாங்க.''

''அப்படியா?'' கேட்ட அனிதாவின் நெஞ்சை ஊசி குத்துவது போன்றதொரு சிறு வேதனை நெருடியது

அண்ணி வீட்டில் நாலு ஆண் பிள்ளைகள். நடுவில் அண்ணி ஒருத்திதான் பெண் குழந்தை. அதனால் பிறந்த வீட்டில் அண்ணியைத் தாங்கறாங்க. வளைகாப்பு, பூச் சூடல் என்று அமர்க்களப்படுத்திட்டாங்க. ஒவ்வொரு அண்ணனும் ஒவ்வொரு பரிசு கொடுத்துத் தங்கையைத் தங்கள் அன்பில் திக்குமுக்காடச் செய்தாங்க...''

மல்லிகா பெருமையாகப்பேசிக் கொண்டே போனாள்.

அனிதாவின் நினைவுகள் வேறு திக்கில் படை யெடுத்தன.



டாகடர் ரேவதியின் கிளினிக்கில் தன் உடல் நிலை யைப் பரிசோதித்துக் கொள்ளப்போன பலதடவை களிலும் அவள் பார்த்து மனம் குமைந்துபோன சங்கதி தான் அது.

வயிற்றை நிறைத்துக் கொண்டு வளரும் சிசுவுடன் கைகளை நிறைத்த வளைகள் குலுங்கத் தங்களது நெருங்கிய உறவுப் பெண்களுடன் பெருமை முகத்தில் பொங்க எததனை மகிழ்ச்சியான எதிர்பார்ப்புடன் உட்கார்ந்திருந்தனர் வருங்காலத்துத் தாய்கள் சிலர்!

அனிதாவுக்குத் தன் தாய்மையைப் பற்றி மகிழ்ச்சி யான எதிர்பார்ப்புத்தான். அதைத் தன் பிறந்த வீட்ட வர்களுடன் பங்கிட்டுக் கொள்ள முடியவில்லையே என்ற ஆதங்கம் நெஞ்சை உறுத்தியதும் உண்மை.

தாய்மையடைந்த பிறகு ஆறாவது மாதத் தொடக் கத்தில் அவள் அண்ணா சாலையில ஒருநாள் மாலை கடையில் வாங்கிய சாமான் பொட்டலங்களுடன் நடை பாதையில் வந்து கொண்டிருந்தாள், பாதையோரம் வந்து நின்ற காரிலிருந்து சிவகாமியம்மாள் அவளைப் பார்த்து விட்டாள். அந்தம்மாளின் முகத்தில் சதா தேங்கியிருக்கும் அந்தக் கடுமை சிறிதளவும் குறைந்திருக்க வில்லை.

''யாரது அனிதாவா?'' என்று கேட்டுட்டுக் காரின் கதவைச் சாத்திவிட்டு அவளை ஏறஇறங்கப்பார்த்தாள்.

''நலமா இருக்கிறீங்களா?'' மரியாதைக்காக அனிதா கேட்டாள்.

''ஆமாம்... நீ?—'' என்று சிவகாமி முடிக்காமல் அதிசயமாக அவளை மீண்டும் வெறித்தாள்.

''ஆறாவது மாதம் முடியப்போகிறது...'' என்று அனிதா வெட்கத்துடன் புன்னகை செய்தாள்.

''இருக்கிற கஷ்டம் போதாதுன்னு இது வேறே ஒண்ணா?'' சிவகாமியம்மாள் பிரமிப்புடன் அவள்

முகத்தை ஆராய்ந்தபோது அனிதாவுக்கு நெருப்பை யாரோ தலையில் கொட்டி விட்டது போன்றதொரு திகைப்பு.

அவள் கணவனுடன் வாழ்வதைப் பற்றியும் தாயாகப் போவதைப் பற்றியும் அண்ணியின் அம்மாவான சிவ காமிக்கு ஏன் இப்படி ஒரு ஆத்திரம்!

பணம், பங்களா என்று எல்லா வசதிகள் இருந்தும் மற்றவர்கள் கொஞ்சம் சுகமாக வாழ்வதைக் காணச் சகிக்காத ஒரு கெட்ட குணம் இந்த அம்மாளுக்கு இந்த வயதில் ஏன்?

இவங்களை இப்படியே விடக்கூடாது பட்டென்று ஒரு தடவையாவது பதிலடி கொடுக்கணும்... அப்பத்தான் மனம் ஆறும் என்றதோர் ஆவேசம் ஏற்பட்டதும் உண்மை.

"பிள்ளையோ பெண்ணோ எதுக்கு வீண் கஷ்டம்னு நினைக்காம நீங்க பெத்துகிட்டதினால்தான் இன்னிக்கு சுகமா காரும் பங்களாவுமா நல்லா இருக்கிறீங்க. இப்ப கஷ்டப்பட்டாலும் பிற்காலத்திலே வயிற்றில் பிறந்த பிள்ளையாவது என்னைக் காப்பாத்தாதா என்கிற எண்ணந்தான்."

சிவகாமி கண்களால் அவளை எரித்துவிட்டு மிகவும் மிடுக்காக கடைப் பக்கம் திரும்பி நடையைக் கட்டினாள்.

அதற்குப் பிறகு அனிதா எதிர்பார்த்தபடியேதான் நடந்தது. அண்ணன் சுந்தரம் இப்படி ஏன்தான் ஒரு கோழையாகி விட்டாரோ? தெரியவில்லை. வழக்கம் போல் தன் மகளைப் பார்க்க சிவகாமி பழக்கூடையுடன் சுந்தரத்தின் வீட்டிற்குப் போயிருக்க வேண்டும். தன் மகளிடம் அனிதா அவமானப்படுத்தி பேசியதைச் சொல் லித் தூண்டி விட்டிருக்க வேண்டும். அவள் தன் கண வனை முடுக்கியிருக்க வேண்டும். அதன் விளைவு...



சிவகாமியை அண்ணாசாலையில் சந்தித்த சில நாட் களுக்குப் பிறகு ஒரு பகல் உணவு நேரத்தின்போது அனிதாவை அவள் தமையன் சுந்தரம் தொலைபேசியில் அழைத்தார்.

கேள்விப்பட்டேன். சந்தோஷம். எப்பொழுது என் பேச்சைக் கேட்காமல் புத்திசாலின்னு விளம்பரப்படுத்திக் கொண்டாயோ அன்னிக்கே நான் உன்னைப் பற்றி மறந்து விட்டேன். ஆனாலும் உனக்கு இத்தனை வாய்த் துடுக்கு தேவை இல்லை" அண்ணா சுந்தரம் அதட்டிப் பேசினார்.

தாய்மையுற்றிருக்கும்போது பிறந்தகத்தில் அனு சரணையைப் பெண்கள் எதிர்பார்ப்பது இயல்பு.

அனுசரிக்கத் தெரியாத அண்ணா-தன் மாமியாருக்குப் பரிந்து கொண்டு அதட்ட வந்து விட்டாரே?

அனிதாவுக்குக் கோபம் பொங்கிக் கொண்டு வந்து விட்டது.

"அண்ணா! பொறுமைக்கு ஓர் எல்லை இருக்கிற தில்லையா? உங்க மாமியாரின் பேச்சு... என் பொறு மையை ரொம்ப சோதிச்சுட்டது. பட்டுனு ஏதோ பதில் சொல்லி விட்டேன். தெரியாமத்தான் கேட்கிறேன். சிவகாமி அம்மாளுக்கு நீங்க ஏன் பயப்படணும்? மரு மகன்னு அவங்கன்னா உங்களை மதிப்பும் மரியாதையுமா நடத்தணும். அதை விட்டுட்டு அவங்க தன் வீட்டு ஆளைப்போல உங்களை ஏவி விட்டிருக்காங்களே?"

"எனக்கும் புத்தி சொல்லித் தரியா?"

"அண்ணா! உங்களுக்குத் தங்கை வேண்டாம்னா சரி போகட்டும் மறந்துடுங்க— எனக்கும் அக்கறையில்லை. ஆனால் இப்படி அடிக்கடி கடித மூலமும், போன் மூலமும் என்னை அதட்டி மிரட்டற பழக்கத்தை நிறுத்திக்கிங்க. நான் யாருக்கும் எந்தவகையிலும் கடமைப் பட்டவ இல்லை. ஒரு புழுவுக்குக்கூட கடைசி நிமிஷம் கொஞ்சம்

தெப்பு வரும். காலில் போட்டு நசுக்கிறவங்களைக் கடிக்க தலையைத் தூக்கிப் பார்க்கும்னு சொல்வாங்க அப்படியிருக்கச்சே...''

''பேஷ்—நீ ரொம்பக் கெட்டிக்காரியாகவே பேசறே''

மறு பக்கத்து டெலிபோன் ஸ்டாண்ட் அதிர அண்ணா போனை டக்கென்று வைத்து விட்டார்.

அதற்குப் பின்னர் அவள் பிறந்த வீட்டிலிருந்து எந்தத் தகவலும் கிடைக்கவில்லை.

''பிரசவத்துக்கு நீங்க பிறந்த வீட்டுக்குத்தானே போகப் போகிறீங்க?'' மல்லிகா கேட்டதும் திடுக்கிட்டு விழிப்புற்றாள்.

தனக்கும் பிறந்த வீட்டுக்கும் தொடர்பு அற்றுப் போய்விட்ட சங்கதியை அந்தப் பெண்ணிடம் ஏன் சொல்ல வேண்டும்?

''இல்லை என் கணவருக்கு ஒரு விபத்தினால் பார்வை போய்விட்டது. அவரை விட்டுப் பிறந்த வீட்டில் இருக்க நான் பிரியப்படவில்லை. வேலை செய்யும் நேரம் தவிர மற்றப் பொழுதில் அவரை நான் கவனித்துக் கொள்கிறேன். அதனால் பிரசவத்துக்கு ஆஸ்பத்திரிக்குப் போக ஏற்பாடு செய்து விட்டிருக்கிறேன்.''

''உங்கள் கணவருக்குப் பார்வை கிடையாதா? அப்படிப்பட்டவருடன் வாழ உங்களுக்குக் கஷ்டமாக இருக்கலையா?'' மல்லிகா திகைப்புடன் கேட்டாள்.

''கல்யாணம் செய்து கொண்ட பின் சுகம்-துக்கம் எல்லாத்தையும் கணவனும் மனைவியும் பங்கிட்டுக் கொள்ளணும் இல்லையா? இப்போ அவருக்கு நான் கண்ணாக இருந்து கவனிச்சுக்கிறேன். மனதில் உறுதி இருந்தா எந்தக் கஷ்டமும் பெரிசாகவே தெரியாது. ஆரம்பத்தில் பூதாகாரமாக இருக்கும். பல தொல்லைகளும்



துன்பங்களும் பழகிச் சமாளிக்கப் புரிந்து கொண்டால் சின்னதாகி விடும்.

''நீங்க உண்மையிலேயே ஒரு அதிசயமான பெண்...''

''இதில் அதிசயம் ஏதும் இல்லை. முக்கியமாக வேண்டியது அன்பு. நான் என் கணவரை மிகவும் நேசிக்கிறேன். என் கடமைகளை ரொம்பவும் மதிக்கிறேன். நிறைவேற்ற முயல்கிறேன்; அவ்வளவுதான்.''

''ரொம்ப நன்றி மேடம் நீங்க சொல்கிற இந்த அறிவுரைகளை நான் மறக்க மாட்டேன். எனக்கு கல்யாணமான பின் நானும் உங்களைப் போல் திருமண ஒப்பந்தத்திலே தீவிர நம்பிக்கை உள்ளவளாக இருக்க முயலுவேன்'' மல்லிகா மென்மையாகப் புன்னகைத்தாள்.

அதற்குப் பின்னர் அனிதா வீட்டிலேயே தங்கிக் கொண்டாள். பிறந்த வீட்டார்கள் காட்டிய அசட்டையை அவள் உணரக் கூடாது என்ற கவலையில் பிரபு அன்பைச் சொரிந்து அவளை நன்றாகத் தன்னால முடிந்தவரை பரிவுடன் கண்காணித்துக் கொண்டான்.

''இன்னிக்கு டாக்டரைப் பார்க்கப் போகணும் மறக்காதே. நீர் குடத்தை நீ தூக்க வேண்டாம். நான் தூக்கி மேடையில் வைக்கிறேன்.''

''பால் சாப்பிட மறந்துடாதே... கோயிலுக்குப் போகணும்னு ஆசைப்பட்டா பக்கத்து வீட்டு அம்மாவைக் கூட்டிக்கிட்டுப் போயிட்டு வா.''

''கொஞ்சம் ஓய்வு எடுத்துக்கோ. எனக்குப் பேப்பர் படிச்சுக் காட்டினது போதும்'' என்று பரிந்தான்.

பக்கத்து வீட்ல அம்மாளிடம் முன் ஏற்பாடாகப் பேசி வைத்திருந்தான். ஒரு நல்ல நாளில் தெருப் பெண்கள் எல்லாம் அவர்கள் வீட்டை நிறைத்துக் கொண்டு—அவளுக்குப் பூச்சூட்டலும், வளைகாப்பும் செய்து அவளை மகிழ்வித்தனர். எல்லோரும் போன பின் கதவை

அடைத்துக் கொண்டு அனிதா அவன் அருகில் வந்து உட்கார்ந்து கொண்டாள். பிரபு தன்னிடம் காட்டிய பரிவில் அவள் மனம் உருகி விட்டிருந்தாள்.

அந்த வைபவத்துக்கும் வரப்போகும் பிரசவச் செலவுக்கும் அவன் தன் கழுத்தில் கிடந்த மைனர் செயினைப் பக்கத்து விட்டு அம்மாளிடம் கொடுத்து விற்கச் செய்து விட்டிருந்தான். "மீதிப் பணம் ஆயிரத்து ஐந்நூறு ரூபாய் அலமாரியில் டேட்ரிக்கார்டர் பக்கத்தில் வச்சிருக்கேன் எடுத்து உள்ளே வை. ஆஸ்பத்திரி செலவைப் பத்தி கவலைப்பட வேண்டாம்" என்றபோது அவள் நெஞ்சம் நெகிழ்ந்து போனாள்.

"உங்க கழுத்தில் போட்டிருந்ததை விற்று—இதெல்லாம் செய்துக்கணுமா?" மெல்லிய குரலில் கேட்டபடி அவன் தோளை மெல்லத் தொட்டாள்.

"அந்த நகை எனக்குத் தேவையில்லை. இந்தப் பெண்ணின் முகத்திலே மலர்ந்திருக்கிற புன்னகைதான் முக்கியம்; எப்படித் தெரியும்னு கேட்காதே குரல் சொல்லுது."

கொஞ்சலாகப் பேசிய பிரபு அவளது கரங்களைப் பற்றி வளையல்களைத் தொட்டுப் பார்த்தான. "நான் சொன்னபடி முழங்கை வரை அடுக்கிட்டாங்க. இனி இந்த வீட்டில் நீ எங்கே நகர்ந்தாலும் வளையல் கலகலவென்று நீ இருக்கும் இடத்தை என்னிடம் காட்டிக் கொடுத்திடும். எதிர் வீட்டுப் பாட்டி பஞ்சரத்னம் என் கிட்ட என்ன சொன்னாங்க தெரியுமா?

"நீல பிரின்டெட் சில்க் புடைவையில் நீ... ரொம்ப அழகா இருக்கேன்னாங்க. அப்பாடி. வாசம் என்னைத் தூக்குதே!" என்று சொல்லிக் கொண்டே ராக்கோடி வைத்து...மல்லிகைப் பூவைச் சுற்றி அலங்கரித்து விட்ட அவளது தலையை மெல்ல விரல்களால் தொட்டுப் பார்த்தான்.



"ஆமாம்... இந்த அலங்காரத்தில் நீ ரொம்ப அழகாத்தான் இருக்கே." அவன் கூறியதும் அனிதாவின் கண்களில் நீர் புரண்டு விட்டது.

பொல பொலவென்று கன்னங்களில் உதிர்ந்து நெஞ்சை நனைத்த கண்ணீரைச் சட்டென்று துடைத்துக் கொண்டாள். மெல்ல அவனது கைகளை விடுவித்துக் கொண்டு எழுந்தாள். அவள் அழுவதை அவன் உணர்ந்து விடக் கூடாது. அவள் மகிழ்ச்சியாக இருப்பதாகவே அவன் எப்போதும் நினைத்துக் கொள்ள வேண்டும்.

# 8

உரிய காலம் வந்தபோது முன் ஏற்பாட்டின்படி அடுத்த வீட்டு அம்மாள் உதவியுடன் ஒரு டாக்ஸியில் ஏறி ஆஸ்பத்திரியை அடைந்தாள்.

தனக்கு ஆண் குழந்தை பிறந்திருக்கும் செய்தியைக் கேட்டு பரவசமடைந்து போனான் பிரபு.

பக்கத்து வீட்டுக்காரர் உதவியுடன் அனிதாவை ஆஸ்பத்திரியில் பார்க்கப் போயிருந்தான்.

"குழந்தை யாரைப் போல இருக்கான் அனிதா?..." அவன் குரலில் ஒரு தந்தையின் பரிவும் பெருமையும் தொனித்தன.

"உங்களையே உரிச்சு வச்சிருக்கான்—அதே மூக்கு. அதே வாய்."

"போதும். அதே புத்தி வேண்டாம். உன்னைப் போல பொறுமையா உறுதியா...புத்திசாலித்தனமா இருக்கட்டும். ராத்திரியெல்லாம் யோசிச்சேன். பெண் பிறந்தால் அம்மா பேரை வைக்கணும். பிள்ளை பிறந்தா அப்பா பேரை வைக்கணும்னு நினைச்சேன்."

"நானும் அதையேதான் நினைச்சேன். மாமனார். பேரை வச்சுடுவோம்" ஆனால் நான் அவனைச் சின்னப் பெயரால் பாபுன்னு கூப்பிடலாமா?"

''அடா! நா நினைச்சபடியே நீயும் நினைச்சிருக்காயே! பாபுன்னு கூப்பிடுவோம்.'' --மகிழ்ச்சியுடன் ஆமோதித்தான்.

குழந்தை பாபுவுடன் அவன் வீட்டுக்கு வந்ததும் பிரபு தன் வாழ்க்கையிலே இன்னொரு புதிய திருப்பத்தை அனுபவித்தான்.

அவன் வீட்டு வேலைகளைக் கவனிக்கும் போது குழந்தையைத் தன் மடியில் வைத்துக் கொண்டு கொஞ்சினான். அழுக்காகிவிட்ட துணிகளைக் களைந்து குழந்தைக்கு மாற்று உடை அணிவிப்பான். தொட்டிலை மெல்ல ஆட்டிப் பாபுவைத் தூங்கச் செய்தான்.

அடிக்கடி குழந்தையின் முகத்தை விரல்களால் தொட்டுப் பார்த்துப் பெருமையில் பூரித்துப் போனான்.

ஒரு மாத காலத்திற்குப் பின்னர் அனிதா மீண்டும் வேலைக்குப் போக நேர்ந்தது. குழந்தையைக் கணவனும் வேலைக்காரியும் பார்த்துக் கொள்ள ஒப்படைத்துவிட்டு அவள் வேலைக்குப் போய் வந்து கொண்டு இருந்தாள். ஒரு நாள் மாலை... அவள் வேலையிலிருந்து திரும்பிய போது குழந்தையை மடியில் போட்டுத் தட்டிக் கொண்டிருந்தான் பிரபு.

''லேசில் தூங்கமாட்டேன் என்கிறானே போக்கிரி... வேலைக்கார அம்மாளைப் போகச் சொல்விட்டேன். மடியில்தான் படுப்பேன்னு ஒரே அழுகை! ஒரு மணி நேரமா அடம் பண்றான்...'' தந்தைக்கான பெருமையோடு மகனது முகத்தை வருடினான்.

''குழந்தைகள் வளரும்போது சாயல் மாறிக் கொண்டே போகும்பாங்க. அனிதா உண்மையைச் சொல் இப்போ பாபு யாரைப் போல இருக்கான்.'' அவனது குரலில் தொனித்த ஆவல் அவள் மனதை என்னவோ செய்தது.



''தான் பெற்ற மகனைப் பார்க்க வேண்டுமென்று எத்தனை துடிப்பு, இவருக்கு? ஒரு வழி இருக்கிறதே அதை முயன்று பார்த்தால்?'' அடுத்த நாள் வீட்டிற்கு வரு முன் அவள் டாக்டர் ரேவதியை சந்தித்து ஆலோசனை கேட்டாள்.

''ஏன் பயப்படறே. இது ஒரு நல்ல யோஜனை. உன் கணவரது கண்களில் கரு விழிகள் விபத்தில் ஏற்பட்ட காயத்தில் புண்ணாகி ஒளி பாய்ச்சும் தன்மையை இழந்து ஜவ்வு தடியாகிவிட்டதால்தான் பார்வை போய் விட்டது அதனால் நீ நினைக்கிறபடி பார்வையைத் திரும்பப்பெற, இரவல் கரு விழி ஜவ்வுகளைப் பொருத்தலாம். இந்த முறைக்கு 'கார்னியஸ் கிராஃப்டிட்' என்று பெயர். 'கார்னியஸ் டிரான்ஸ் பிளாண்ட்' என்றும் சொல்லலாம். இருபது ஆண்டுகளுக்கு முன் இந்த சிகிச்சை முறை ரொம்ப அதிசயமாகத்தான் கையாளப்பட்டது சில வருடங்களுக்கு முன் ஸ்ரீலங்காவில் கண் வங்கி பிரபலமாக செயல்பட்டு உலகமெங்கும் உதவிக் கொண்டிருந்தது நம் நாட்டிலும் 1960-ம் ஆண்டு உலகில் உள்ள பத்து பெரிய கண் வங்கிகளில் ஒன்றான நிலையில் பம்பாய் ஜே ஜே. ஹாஸ்பிடலில் செயல்படத் தொடங்கியது. இப்போது பரவலாக பாரதம் முழுவதும் பிரதான நகரங்களில் கண் வங்கிகள் நிறுவப்பட்டு செயல்படுகின்றன. சுமார் ஐம்பதுக்கு மேற்பட்ட வங்கிகள் இப்போது பரபரப்புடன் செயல்பட்டு வருகின்றன. நம்மைப் பொறுத்த வரை சென்னை அரசு கண் ஆஸ்பத்திரியில் இதற்காக ஒரு தனி பகுதி ஏற்படுத்தியிருக்கிறார்கள். இந்த அறுவைச் சிகிச்சையைத் தனியார் ஆஸ்பத்திரியிலும் செய்து கொள்ள முடியும். உன் நிலையை உத்தேசித்து நீ அரசு ஆஸ்பத்திரிக்கே உன் கணவரை அழைத்துச் செல்வது உத்தமம்.'' உபதேசித்தாள.

''அப்படியே செய்கிறேன் டாக்டர்'' என்றாள் அனிதா மகிழ்ச்சியுடன்.

''ஆனால் ஒரு கோரிக்கை. உன் கண்களை இப்படிப் பட்ட சிகிச்சைக்கு உதவு. பார்வையற்ற யாருக்காவது ஒளி வழங்க நீயும் கண் தானம் செய்யும் பணியில் இறங் கினால் நல்லது.''

''அப்படியே செய்கிறேன் டாக்டர். என் கணவருக்கு யாரோ ஒரு புண்ணியவான் தாம் இறந்த பின் தமது கண்ணில் கருமணியை வழங்கப் போகிறார். நானும் அப்படியே என் கண்களைத் தானம் செய்யப் பதிவு செய்து கொள்கிறேன். தானங்களில் எத்தனையோ விதங் கள் உள்ளன. எல்லாவற்றிலும் சிறந்தது கண் தானம் என்பதை நான் என் அநுபவத்தில் புரிந்து கொள்கிறேன். டாக்டர்! என் கணவர் இந்த தானத்தை ஏற்று மறுபடி பார்க்க முடியுமானால்?''

ரேவதி அன்புடன் அவள் முதுகைத் தட்டிக் கொடுத் தாள். ''உலகம் முழுவதும் பல பார்வையற்றவர்கள் இந்த சிகிச்சை முறையால் பார்வையைத் திரும்பப் பெற் றிருக்கிறார்கள். தைரியமாக இதில் நீ இறங்கலாம்.'' ஆதரவாக அனுதாபமாகப் பேசினாள்.

டாக்டர் ரேவதியின் யோசனையை அவள் தன் கண வனிடம் கூறும்போது பிரபு தயங்கினான்.

''இந்த சிகிச்சை முறையைப் பற்றி நான் எனக்குப் பார்வை இருந்த போதே படித்தறிந்திருக்கிறேன். இப் போது இடது கண்ணில் எனக்குச் சிறிதளவு ஒளி இருக் கிறது. சிகிச்சை ஒரு சமயம் வெற்றி பெறாது போய் விட்டால்— எனக்கு அந்தச் சிறு ஒளியும் போய்விடுமோ என்று பயமாக இருக்கு.''

''நமது குழந்தையை நீங்க பார்க்க ஆசைப்படுகிறீர் கள் இல்லையா? அதனால் ஒரு கண்ணையாவது முதலில் இந்த சிகிச்சைக்கு உட்படுத்திக் கொள்ள வேண்டும். உங்கள் மகன் யாரைப் போலிருக்கிறான் என்று நீங்கள் யாரையும் கேட்கத் தேவையில்லை. உங்கள் கண்ணா



லேயே பார்க்காமலே'' என்று ஆசை காட்டி வற்புறுத்தி தென்பு கொடுத்தாள்.

முடிவில் பிரபு ஒப்புக் கொண்டான். டாக்டர் ரேவதி யின் ஆலோசனைப்படியே அரசு கண் வைத்திய மருத்துவ மனைக்கு அவன் அனிதாவுடன் ஒரு நாள் சென்றான்.

அந்த சிகிச்சை முறைக்கென்று தனியாக ஆஸ்பத்திரி யில் அமைக்கப்பட்டிருக்கும் பகுதியின் தலைவர் அவனை சந்தித்து மிகவும் அனுதாபத்துடன் சிகிச்சை பற்றிய விபரங்களைத் தெளிவாக எடுத்துச் சொன்னார்.

முதலில் பிரபுவின் உடல் நிலை மிகவும் கருத்துடன் பரிசோதிக்கப்பட்டது. அவன் உடல் நிலை அந்த சிகிச் சைக்கு ஒத்துக்கொள்ளும் அளவு நல்லபடியாக உள்ளது என்பதை அறிந்து கொண்டதும் அவன் பெயரை சிகிச் சைக்குப் பதிவு செய்து கொண்டனர்.

அவனது கண்ணுக்கேற்ற இரவல் கண் கருவிழி கிடைத்த பின்னர்தான் சிகிச்சை துவங்க முடியும். அது வரை அவன் காத்திருக்க வேண்டும் என்று வைத்தியர் சொல்லி விட்டிருந்தார்.

மேலும் வைத்தியர் அன்பாக அவனிடம் எடுத்துக் கூறிய சில உண்மைகள்... அவன் மனத்திற்குத் தெம்பு கொடுத்தது என்றே சொல்ல வேண்டும்.

''நீங்கள் மட்டுமல்ல நம் நாட்டில் பார்வையற்றவர் கள் சுமார் ஒரு கோடி மக்கள் இருக்கிறார்கள். ஆனால் இந்த அறுவைச் சிகிச்சையால் பயன் அடையக் கூடியவர் கள் நூற்றுக்கு பத்து சதவிகிதம் தான். மற்றவர்களின் பார்வை இழப்பின் காரணங்கள் வேறாக விட்டிருப்ப தால் எல்லோருக்கும் இந்த முறை பயன்படாது. ஆனால் மிஸ்டர் பிரபு... உங்களுக்கு இது உபயோகமாக இருக்கப் போகிறது. பொறுமையாகக் காத்திருங்கள்.''

அந்த அற்புதமான சிகிச்சையை எதிர்நோக்கி அவன் பொறுமையாகக் காத்திருந்தான்.

உடனடியாக ஆஸ்பத்திரியில் வந்து சேரும்படி ஒரு நாள் தகவல் கிடைத்துத் தாமதமின்றி கணவனை அனிதா ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் சென்றாள். வேலையினின்று அன்று அவள் லீவு எடுத்துக் கொண்டிருந்தாள். அறுவை சிகிச்சைக்கு உள்ளே போகும்முன் அவனது கரத்தை அழுத்தித் தைரியம் சொன்னாள்.

"சமயபுரத்து மகமாயியை வேண்டிக் கொண்டிருக்கிறேன். கட்டாயம் அவளது கண்ணழகை நீங்கள் பார்க்கப் போறீங்க..." உற்சாகப்படுத்தினாள்.

அறுவை சிகிச்சை அறையில் அவன் யுகம் முடியும் வரை இருந்ததைப் போன்றதொரு பிரமிப்பில் வலது கண்ணின் அறுவை சிகிச்சை முடிவாகி—கண் கட்டுகளால் பாதுகாக்கப்பட்டு அவன் வார்டுக்கு அனுப்பப்பட்டான். ஆஸ்பத்திரியில் அவன் மூன்று வாரம் வரை தங்க நேர்ந்தது.

கட்டவிழ்த்து விட்டதும் கண்களுக்கு உபயோகிக்கச் சொட்டு மருந்துகள் எழுதிக் கொடுத்து டாக்டர் அவனை வீட்டுக்கு அனுப்பி விட்டார். மூன்று மாத காலம் குறித்த நாட்களில் வைத்தியரின் மேற்பார்வைக்காக ஆஸ்பத்திரிக்கு வந்து போக வேண்டுமென்று சொல்லி விட்டிருந்தார். கட்டவிழ்த்தவுடன் பளிச்சென்று எல்லாம் கண்ணில் படும் என்று எண்ணிய பிரபுவுக்கு ஆரம்பத்தில் ஏமாற்றமாகத்தான் இருந்தது.

இந்த அறுவை சிகிச்சைக்காக அனிதா பட்ட பாடெல்லாம் வீண்தானா?... லேசானதொரு திரைகட்டியது போல பார்வையின் நடுவே இன்னமும் பளிச்சென்று தெரியாத இந்த மங்கல் ஒளிக்காகவா இத்தனை பாடு, பணச் செலவு, உடல் அயற்சி, மனக் கஷ்டம்.''



"பாவம் அனிதா" என்று எண்ணிப் புழுங்கினான். ஆனால் அவள் தன் தைரியத்தை விடவில்லை.

"எலும்பு முறிவு ஏற்பட்டதும் எலும்பு கூட ஆரம்பித்த உடனே உங்கப்பா எழுந்து நடந்து விடவில்லை. கொஞ்ச நாள் பொறுமையா சிகிச்சைகளை மேற்கொண்டு தானே மெல்ல சுவரைப் பிடித்துக் கொண்டு பின்னர் நன்றாகவே நடக்க ஆரம்பித்தார்."

"இந்த சிகிச்சை முறையும் அப்படித்தானிருக்கும். உடனடியாக பளிச்சென்று பார்த்துவிட முடியாது. தைரியமாக இருங்கோ. டாக்டர்கிட்டே காட்டி அவரது ஆலோசனைப்படி நடந்து கொண்டிருந்தால் கட்டாயம் ஒரு நாள் நீங்கள் பார்வையைத் திரும்பப் பெற்று விடுவீங்க" தினமும் அவனுக்குத் தெம்பு ஊட்டிக் கொண்டிருந்தாள்.

□ □ □

அன்று ஞாயிற்றுக்கிழமை. அனிதா சமையலறைக்கு காலைப் பலகாரமான இட்லிக்கு வெங்காய சாம்பார் தயாரித்துக் கொண்டிருந்தாள். அதன் வாசனை வீட்டைக் கப்பிக் கொண்டிருந்தது. தொட்டிலில் குழந்தை பாபு தாத்தா—தாத்தா என்று மழலையில் கூப்பிட்டுக் கொண்டிருந்தான்.

தூக்கத்திலிருந்து மெல்ல விழித்துக் கொண்ட பிரபு எழுந்து உட்கார்ந்தான். இதென்ன அதிசயம்! கூடத்துறை வாசற்படியில் தொங்கிய திரைச்சீலை சில நாட்கள் வரை வெறும் பச்சையாகத் தெரிந்தது. இப்போது பளிச்சென்று ரோஜா வண்ணப் பூக்களுடன் நன்றாகவே தெரிகிறதே... இது உண்மையாகவா?

"அனிதா ..."—ஓங்கிக் குரல் கொடுத்தான். அவனது நெஞ்சு படபடவென்று அடித்துக்கொண்டது. அது கனவானால் ஏமாந்து போகக்கூடாது...'' என்று எண்ணியவனாகக் கண்களை மூடிக்கொண்டான்.

அனிதா அடுப்பைத் தணித்துவிட்டு வேகமாக வெளியே வந்தாள்.

''ஆமாம் அறை வாசற்படிக்கு நீ போட்டிருக்கிற திரை என்ன நிறம்?''

''ஏன் கேட்கிறீங்க? பச்சையில் ரோஜா வண்ணப் பூக்கள போட்டது.''

''பூக்கள் எவ்வளவு பெரிசா இருக்கும்?''

''நெரிஞ்சிப் பூபோல...சின்னச் சின்னதாக கும்பல் கும்பலாகக் கொட்டித் தூவியது போல டிசைன். ஆமாம் ஏன் இப்படித் தூண்டித்துருவிக் கேட்கிறீங்க?''

அனிதா—பாரதியாரின் பாட்டுக்களைப் பதிவு செய்து வைத்த அந்த டேப்பை எடுத்து டேப்ரிகார்டருடன் கொடு.''

குழப்பத்துடன் அவள் அலமாரியைத் திறந்து அந்த குறிப்பிட்ட டேப்பை காசட்டில் பொருத்திக் கொடுத்தாள்.

அதை வாங்கி அவன் போட்டு மேலும் கீழும் பட்டன்களை அமுக்கி அவன் விரும்பிய அந்த பாட்டு வந்ததும் பாட்டு ஒலிக்கச் செய்யும் பட்டனை அமுக்கினான்.

''மங்கியதோர் நிலவினிலே கனவிலிது கண்டேன்—
வயது பதினாறு இருக்கும் இளவயது மங்கை—
பொங்கிவரும் பெரு நிலவு போன்ற அவள் முகமும்
புன்னகையின் புதுநிலவும் போற்றவரும் தோற்றம்.
துங்கமணி மின்போலும் வடிவத்தாள் வந்து—
தூங்காதே எழுந்தென்னைப் பாரென்று
சொன்னாள்...''



என்று பாரதியின் பாட்டை யாரோ அருமையாகப் பாடிக் கொண்டிருக்கையில் பிரபு, ''அனிதா! இங்கே வா ஒரு அதிசயம்'' என்று கூவினான்.

பனிச்சின்னு எனக்குப் பார்வை வந்து விட்டது அனிதா. முதன் முதலாக உன் அழகு முகத்தைத்தான் பார்க்க விரும்பறேன்'' என்றபடி டேப்பில் பாடியவருடன் கூட அவனும் பாட்டை முணுமுணுத்தபடி கை நீட்டி அவள் கரங்களை ஆவலுடன் பற்றிக் கொண்டு கண்களைத் திறந்தான். அதிசயம்தான். மகத்தானதொரு அற்புதம் என்றே சொல்ல வேண்டும்.

''அங்கதனிற் கண் விழித்தேன்—
அடடாவோ...அடடா—
அழகென்னும் தெய்வந்தான் அது என்றே
அறிந்தேன்.''

மகிழ்ச்சியுடன் அவள் முகத்தைப் பார்த்தபடி பாடலுடன் ஒன்றிப் பாடினான் பிரபு.

''அனிதா...நீ என் தெய்வம். அழகெனும் தெய்வம் நீதான். புரிஞ்சு கொண்டேன், கிட்டவா உன் நெற்றியில் மின்னும் அந்தக் குங்குமத்தையும் உன் கண்களில் காணும் அந்தப் பரிவையும் உன் உதட்டிலே தவழும் மோகனப் புன்னகையும் என்னால் நல்லா பார்க்க முடிகிறது. அனிதா என் தெய்வமே வா.''!

மகிழ்ச்சியில் கன்னங்கள் மீது கோடாகிப் போன கண்ணீரை ஓட விட்டபடி அவள் அவனது கட்டில் அருகேயே உட்கார்ந்து கொண்டாள்.

''உண்மையாகவா சொல்றீங்க, உங்களால் என்னைப் பார்க்க முடிகிறதா—?''—விசும்பிவிட்டாள் ஆனந்தத்தில்.

''முடிகிறது அனிதா. இதுவரை என் கற்பனையில் தலையில் கிரீடமும், மேலெல்லாம் ஆபரணங்களுமாக ஒரு ஜோதிமயமான தெய்வமாக உன்னைப் பார்த்துக் கொண்டிருந்தேன். இப்போ உண்மையில் என் அழகு தெய்வத்தைப் பார்க்க முடிகிறது. இந்தப் பாரதி எனக்காகத்தான் இந்தப் பாட்டை பாடி வச்சிருந்தாரோன்னு கூட பிரமிப்பா இருக்கு.'' உணர்ச்சி வசப்பட்டுப் போன பிரபு அவளது கரங்களைக் கெட்டியாகப் பற்றிய படி பேசினான்.

''போதும்...ரொம்ப பேசி கண்ணீர் வர கலங்கிடாதீங்க. அறுவை சிகிச்சை செய்தபின் ஒளி வந்திருக்கு அதை பத்திரமா பாதுகாக்கணும். குழந்தையை கொண்டு வரேன் பாருங்க'' தழுதழுத்தபடி உடம்பெல்லாம் உணர்ச்சியில் வைத்தாள்.

''ஏமாந்திணியே என்னை அனிதா. பயலின் கண்கள் உன்னுடையதைப் போல ரொம்ப அழகா இருக்கு. மூக்கும் முகவாய் மட்டும் என்னுது'' என்று சிரித்தான்.

''ஏங்க எனக்கு என்ன சொல்றதுன்னே தெரியலை. மகிழ்ச்சியில் மனம் நிறைஞ்சி போயிருக்கேன் நல்லா பார்க்க முடிகிறதுன்னு சொல்றீங்களா?''

'தொண்ணூறு சதவிகிதம் என் பார்வை நல்லாவே பளிச்சினு இருக்கு. பூரணமாக நூறு சதவிகிதமும் பெற டாக்டர் ஆலோசனைப்படி ஒரு கண்ணாடி போட்டுக்கிறேன். ஒரு கண் பார்வை போதும். ஏன்னா எனக்கு உபயோகிக்கப் போற அந்தக் கருவிழியை இன்னொரு பார்வையற்றவர் ஏற்று ஒளிபெறட்டும். பார்வையற்ற



வர்களின் வாழ்வில் ஒளி பெற என்னவெல்லாம் செய்ய என்னால் முடியுமோ அதெல்லாம் செய்ய ஆசைப்படுகிறேன் அனிதா.''

ஒருவருக்கு ஒரு கண்ணிலாவது பார்வை கிடைக்கிறதே அதுவே பெரிய காரியம்.

எனக்குத் தெரிந்த பிரெயில் படிப்பு முறையை பார்வையற்றவர்களுக்கு கற்றுத்தரப் போறேன். மொபிலிடி டிரெயினிங் மூலம் எப்படி சுயேச்சையாக பிரம்பை பிடித்துக் கொண்டு வளைய வரலாம் என்பதைக் கற்றுத் தர விரும்பறேன்.''

கடைசியா நான் விரும்பறது ஒன்று. பல காசட் டேப்புகளை பார்வையற்றவர்களுக்காகப் பொது மக்களிடம் திரட்டி தமிழில் உள்ள இலக்கியங்கள், கவிதைகள், கட்டுரைகள், கதைகள் எல்லாவற்றையும் குரலை வித்தியாசப்படுத்தி அழகாகப் படிக்க முடிந்தவர்களை அணுகி அவைகளைப் பதிவு செய்து பல காப்பிகளை எடுத்து பார்வையற்றவர்களுக்காக அங்கங்கே ஒரு டேப் நூல் நிலையம் நிறுவ ஆசைப்படுகிறேன்.''

''நானும் என் கண்களை இந்த அற்புத சிகிச்சைக்குப் பயன்படத் தானம் செய்து விட்டதாகப் பதிவு செய்து கொண்டு விட்டிருக்கிறேன்'' என்றாள் உணர்ச்சி வசப்பட்டுப்போன அனிதா.

இந்த அருமையான கண்தானப் பணி தொடர வேணும். ஒளியிழந்த பலர் ஒளி பெற்று இந்த வையத்தையும் வானத்தையும் பார்த்து மகிழ வேண்டும் என்று என் ஆசை. தன் அன்பு மகனை மார்போடு அணைத்துக் கொண்டான். மறுபடியும் கண்களை மூடிக் கொண்டு அந்தப் பாட்டைத் திரும்பவும் ஒலிக்க விட்டான்.

''நாம் மறக்காம குழந்தையோட சமயபுரத்துக்கும் போய் ஆத்தாளுக்குக் காணிக்கை செலுத்தணுங்க. சரிதானே.''

''நீ சொல்றதெல்லாம் இனி எனக்குச் சரிதான்'' பிரபு கட்டுக்கொள்ளா ஆனந்தத்தில் சிரித்தான்.

''அடடா ஓ...அடடா! அழகென்னும் தெய்வந்தான் அதுவென்றே யறிந்தேன்.''

மறுபடியும் டேப்பில் அந்தப் பாடகர் இனிமையாகப் பாட மகிழ்ச்சியின் எல்லையிலே மிதந்த பிரபு இப்போது உரத்தகுரலில் அத்துடன் இரைந்து பாடினான். ஈரமாகிய அனிதாவின் கண்கள் பளபளவென்று ஒளியிட்டன. வருங்காலம் இருவருக்கும் ஒளிமயமாகத் தெரிந்தது.

(முற்றும்)